www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
MR. K. JUDE
பக்கம் 20
ரூபா 12/00
දිනමුරසු වාරමලර්
டிச.20–26,1998

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 288



## மூன்றாம் முனையும் புதிய சவாலும்

## காணமறுக்கும் உண்மைகள்

## முடக்கமா முற்றுகையா

## நான் கண்ட எம்.ஜி.ஆர். –ரஜினி–



சூடு – சுவை – சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## முதலில் மனிதர்களாக

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

சர்வதேச மனித உரிமை
பிரகடனம் வெளியாகி
50 ஆண்டுகளாகிவிட்டன!

அதனையொட்டி
ஜனாதிபதி அவர்கள்
அறிக்கை ஒன்றை
வெளியிட்டிருந்தார்.

"இலங்கை மக்களின்
மனித உரிமைகளைப்
பாதுகாக்க
அரசாங்கம் சங்கற்பம்
பூண்டுள்ளது!" என்றுள்ளார்!

சர்வதேச சமூகத்திற்கு
இலங்கை ஜனாதிபதி
கொடுத்துள்ள
உத்தரவாதம் அது!

இலங்கை மக்களின்
மனித உரிமைகளுக்கு
வேறு ஒரு சக்தியால்
ஆபத்து ஏற்பட்டுள்ளது
போன்றும்–
அரசு பாதுகாப்பளிக்க
முன்வந்துள்ளது போன்றும்
ஜனாதிபதியின் கூற்று
அர்த்தமாகிறது!

தென்னிலங்கை
சிங்கள மக்களைப்
பொறுத்தவரையில்,
மனித உரிமை மீறல்கள்
ஒரளவு குறைந்துள்ளன!

ஆனால், தமிழ் பேசும்
மக்களைப் பொறுத்தவரை,
மனித உரிமைகளின் நிலை
கழுதை தேய்ந்து
கட்டெறும்பான நிலைதான்!

தமிழ் பேசும் மக்களை
மனிதர்கள் என்றே
மதிப்பதாகத் தெரியவில்லை.
பின்னர் அவர்களுக்கு
மனித உரிமைகள்
உத்தரவாதமாவது எப்படி?

ஆடு, மாடுகள்போல
தடை முகாம்களில்
அடைபட்டுக் கிடக்கின்றனர்!

வன்னியில் பட்டினிக்
கொடுமைகளைச் சந்தித்து
பரிதவிக்கும் மக்களையும்
இந்நாட்டு மக்கள் என்று
அரசு கருதுவதாகத்
தெரியவே இல்லை!

மேலும் மேலும்
வன்னியில் இடம்பெயர்வு
அவலங்களை உருவாக்கிவிட்டு
நிவாரணத்தையும்
அனுப்ப மறுக்கின்றனர்!

கிழக்கில்
தமிழ்க் கிராமங்கள்
பலவற்றில்
படையினர் இட்டதே சட்டம்!
புதிய கெடுபிடிகள்!

கொழும்பில்
தமிழ் மக்கள் வசிப்பதற்கு
புதிய விதிகள்!

எல்லோரும் இந்நாட்டு
மக்கள் என்கிறார்கள்!

தமிழ் மக்கள் மட்டும்
தலைநகரில் வசிப்பதற்கு
புகைப்படம் தரவேண்டும்!

மொத்தத்தில்
தமிழ் பேசும் மக்கள்
சந்தேகப் பிராணிகளாகவே
நோக்கப்பட்டு வருகின்றனர்!

அரசும், அதன்
பாதுகாப்பு அமைப்புக்களும்
தமிழ் மக்களிடம்
அவநம்பிக்கைகளையே
தோற்றுவித்துள்ளன!

வெண்புறாக்கள்
வெண்தாமரைகள் பற்றிய
கனவுகள் யாவும்
பகற் கனவுகளாகிவிட்டன!

புத்தூக்கம் தரக்கூடிய
அரசு என்று எதிர்பார்த்தால்,
இதுவும் பத்தோடு
பதினொன்றாகிவிட்டது!

அதுமட்டுமன்றி
போரில் பிடிவாதமாக
ஊன்றி நிற்கும்
அரசாகவும் மாறிவிட்டது!

தமிழ் பேசும் மக்களை
பொறுத்தவரை
வேலியே பயிரை மேய்கிறது!
மனித உரிமைகளும்
அதில் அடக்கம்!

முதலில் தமிழ் பேசும் மக்களை
மனிதர்களாக
மதிக்கத் தொடங்கட்டும்!
பின்னர் மனித உரிமைகளைப்
பற்றிப் பேசலாம்!

வன்னியில்
பட்டினியின் பிடியில்
வாழும் மக்கள் உட்பட
சகல தமிழ் பேசும் மக்களும்
மனிதர்களே என்பதை
உணரவேண்டியவர்கள்
உணர்ந்தால் போதும்!
மனித உரிமைகள்
தாமாக உயிர்த்துவிடும்!

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்*

# ஆன்மீகம்

## நிம்மதிக்கு வழி



வெல்லத்தின் மேல் ஈ எப்போதும் மொய்ப்பதுண்டு. இன்பத்தின் பின் துன்பம் கட்டாயம் உண்டு. நாளைக்கு நடப்பதை இன்றே நினைத்து குழம்பாதீர்கள். நமக்கெனத் தேடும் நன்மைக்காக பிறரைக் கெடுக்காதீர்கள். வெளிப்படையான விரோதம் வேண்டாம். தீய நட்பை என்ன விலை கொடுத்தும் விலக்கிவிடுங்கள். இழப்பே கூடாது என்று எண்ணாதீர்கள். இழப்பு நேர்ந்தால் அதையே நினைத்துக்கொண்டு கவலையடையாதீர்கள். களிமண்கட்டி போல விழுந்த இடத்திலேயே கிடக்காதீர்கள். பந்து போலப் புறப்பட்ட இடத்திற்கே திரும்ப வராதீர்கள்.

நிம்மதி இழந்து கவலைப்படுவது இரண்டே செய்திகளுக்குத்தான். ஒன்று செய்ய முடியாததற்கு. இரண்டு, செய்யமுடிந்தும் செய்யாததற்கு. செய்ய முடியாததற்கு கவலைப்பட்டுப் பயனில்லை. செய்ய முடிந்தும் செய்யாததை உடனே செய்து விடுங்கள். எப்படியும் கவலைப்படவேண்டாம்.

சூழ்நிலைக்கேற்ப வளைந்து கொண்டு மிகக் கவனமாக இருங்கள். நிம்மதி கிடைக்கும். நிரந்தரமில்லாத வாழ்க்கைநிலையை உணர்ந்திருங்கள். புதுமனிதராகப் பிறவியெடுங்கள். மனிதர் உங்களுக்குத் துரோகம் செய்தாலும், பகையாகிவிட்டாலும், இறைவன் துணையிருக்கிறான் என்று நம்புங்கள்.

நமக்குத் தேவை நிம்மதி. நிரந்தரமற்ற வாழ்வில் எங்கே நிம்மதி? என்று அலைவதைவிட கடவுளிடம் நிலை பெற்ற மனம் கொள்ளுங்கள். தெய்வத்தை நம்புங்கள். உங்களை நம்பாதீர்கள். தெய்வ நம்பிக்கையால் விதியை மாற்றுங்கள். விதி எனப்படும் கரும பந்தம் நீங்க வேதனையை விடுங்கள். அதுதான் வாழ்க்கையின் வெற்றி. அந்த வெற்றியை பெறுங்கள். பிறவிப் பயனை வாழ்க்கையில் அடைந்த பின்னர் வேறென்ன? உங்கள் மனதில் நிம்மதியைக் கொள்ளுங்கள்.

தொகுப்பு: அ. அரசரெத்தினம், சேனையூர்-06, மூதூர்.

## சமாதானம் செய்யாதிருப்பது பாவம்

இன்று எம்மத்தியில் குடும்பச் சண்டை என்றும், பக்கத்து வீட்டுச் சண்டை என்றும் நாளாந்தம் நம்முன் நடந்தேறிவருவது மிகவும் வேதனைக்குரியது. காரணமே இல்லாத சிறு சிறு பிணக்குகளால் இவ்வாறு நிகழும் நிகழ்வுகள் இறுதியில் வீதியில் அரங்கேறி பெரிய விபரீதங்கள் பலவற்றை ஏற்படுத்தி விடுகின்றன. இவற்றை மற்றவர்கள் தடுத்து நிறுத்தி இரு சாராருக்குமிடையில் சமரசத்தை ஏற்படுத்தி வைக்காமல் சச்சரவை மேலோங்கச் செய்யும் வண்ணம் செயல்பட்டு வேடிக்கை பார்க்கும் வெறும் பார்வையாளர்களாக இருப்பது பாவமான காரியமாகும்.

"தொழுகை, நோன்பு, தருமம் ஆகியவற்றைவிடச் சிறந்ததொரு நற்செயலை உங்களுக்குக் கூறட்டுமா?" என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். "ஆம்! கூறுவீர்களாக!" என்று தோழர்கள் சொன்னார்கள். "அது மனிதர்களுக்கிடையே சமாதானம் செய்து வைப்பதாகும். ஏனெனில், நாவிதரின் கத்தி முடியைச் சிரைப்பதுபோல் மனிதர்களிடையே ஏற்படும் பிளவு நன்மைகளைப் போக்கிவிடுகிறது. (அல்ஹதீஸ்)

நிச்சயமாக முஃமின்கள் தமக்கிடையே சகோதரர்களே: எனவே உங்களுடைய சகோதரர்களுக்கிடையே (பிணக்கு ஏற்படின்) சமரசம் செய்து வைப்பீர்களாக." (அல்குர் ஆன் 49:10)

வை.எம். தாஹிர்கரீம், கல்முனை-06.

## கவிதைப் போட்டி இல.285

### பரிசுக்குரிய கவிதை

### இரு துருவங்கள்

**குளிரூட்டி குளுகுளு வண்டிகள் தெற்கிலோட,
கொடும் வெயிலில் வடக்கிலோடும் வண்டி பாரீர்!
இரு துருவமாகிவிட்ட இந்த நாட்டில்
'ஒரு நாடு ஒரே மக்கள்' ஓசை ஏனோ?**

செல்வி மதுரா யோகேந்திரன்- 'யோகவாசா'- திருக்கோவில்.



### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

**அவலம்**

"யுத்த அரக்கனவன்
யுக்தியினால் மக்கள் சிலர்
உழவு வண்டி தனிலேறி
ஒரமெல்லாம் பொருளேற்றி
அவலக் குரலெழுப்பி
ஏகுகின்றார் வீதியிலே!"

பி.கே. தாஹா- ஏறாவூர்.

**வண்டிவீடு**

கோடி கொட்டி கட்டிய
கோபுர வீடு!
குண்டுக்குள் மூழ்கிய பின்,
வண்டி வீடு- வடக்கிலே
வசதிதான்!

நா. ஜெயபாலன்- பிபிலை.

**நாமும் அரசும்**

உலகம் சுற்றுகிறார்கள்-
போருக்கு
கடன் தேடி!
ஊர் சுற்றுகிறோம்
புகுவதற்கு
அகதி முகாம் தேடி!

இஸ்ஹாக்-கண்டி.

**மனிதம்**

பொதிகளோடு
மனிதன்....!
பொதிகளுக்குள்
மனிதம்!

யாழ் சுவாதி.

**மீண்டும்....!**

உடலோ செயலிழக்க,
மீண்டும் ஒரு
இடம் பெயர்வு-
வெற்றிக்குப் பின்!

சுபி- கொழும்பு-4.

**ஓடு, ஓடு**

வந்தேறு குடி- உனக்கு
அடி மேல் இடி!
தெரு வழியே ஓடி-நீ
செத்து மடி- முடிந்தது
தலையிடி!

கே.ஏ. வாஜித் ருக்சான்-
சோனகதெரு, சிலாபம்.

**துணிவு**

இல்லையென்று
சொல்லவில்லை-
துன்பந்தான்!
என்றாலும் நாங்கள்
வாழப் பயந்தவர்களல்ல!!

எஸ். பிரபா- பதுளை.

**யார் வந்தாலும்?**

'யானை'யின்
ஆட்சியில்
அகதிகள்!
'அம்மையாரின்'
ஆட்சியில்
அனாதைகள்!
ஏனென்றால்
நாங்கள்
'வந்தேறுகுடி'களாம்!

சா. ஜீவராஜா-
அக்கரைப்பற்று-07

**பாதை திறப்பு**

பாதை திறப்பு-
அப்பாவியினை
துரத்தியடிப்பு....!
என்று தீரும் இந்த
அலைக்கழிப்பு?

சு. விசுவானந்தன்-
அக்கரைப்பற்று.

**பரிசு!**

'வெற்றி நிச்சயம்'
கொடுத்திட்ட
பரிசிது!

அ. யாழினி- மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல.288



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 26.12.1998


**முகவரி:** கவிதைப் போட்டி இல.288
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## சிண்டு முடிகிறார்கள்

தீர்வுப்பொதியைச் கூறி அரசு நான்கு வருடங்களை ஒருவாறு கடத்திவிட்டது. தீர்வை புலிகள் இயக்கத்தினரின் கலந்துரையாடலின்றி செயற்படுத்துவது கடினமென்பதை நன்கு புரிந்து கொண்டுவிட்டனர். எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பு இல்லையெனக் கூறி, எதிர்க்கட்சியினருக்கும் தமிழினத்திற்கும் சிண்டு முடிவதையே பத்திரிகை அறிக்கைகள் ஊடாக தெரிந்துகொள்ள முடிகிறது. பேச்சு வார்த்தைக்கான கதவு (உள்ளம்) திறந்திருக்கிறதென்றால் அதற்குரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதைப் பயன்படுத்தி செயற்படுத்த அரசு முன்வருமா? என்பது கேள்விக்குறிதான்.

மஞ் மிக்கேல், மூதூர்-07.





# வாசக(ர்)சாலை

## எத்தனைகாலம்தான்?

எத்தனைகாலம்தான் அரசாங்கமும், அதன் சார்பாளர்களும் எதிர்க்கட்சியை திட்டித் தீர்ப்பார்கள்? தங்கள் அரசியல் சண்டைகளை வெற்றியாக முடிக்க தமிழர்களையும் பகடைக்காயாக்கப் பார்க்கிறார்கள். இது புரியாமல் சில தமிழ்க் கட்சிகளும், விமர்சகர்களும் பகடைக்காய்களாக மாறியுள்ளனர்.

சொ. குணராசா, அம்பாறை.

முரசே!
உன் பொலிவும், உள்ளடக்கச் செறிவும் மேலும் மெருகேறியுள்ளன. என்றும் இளமை. அதுதான் உன் சிறப்பு. புதிய தொடர்களும் அமர்க்களம். 'டிசம்பர் பௌர்ணமி' அசத்தல்.

இ. வித்யா, கொழும்பு-06.

## என்றும் பொருந்தும்

வாரம் தவறாது முரசை வாங்கிப் படிக்கும் முரசு அபிமானிகளில் நானும் ஒருவன். நீ தாங்கி வரும் அத்தனை அம்சங்களும் சூடு, சுவை, சுவாரசியம் மிக்கவை. மனதார ஏற்றுக்கொள்கிறேன். அதில் அற்புதன் தரும் 'அரசியல் தொடர் காலத்துக்கு ஏற்ற பணி. சென்ற தொடர்' இருநூற்றியெட்டில் இந்து பத்திரிகையாசிரியர் ராம் அவர்கள் எழுதிய கட்டுரையை தந்திருந்தார். உண்மையிலும் உண்மை. அவர் அன்று கூறிய கருத்துக்கள் அன்றுமட்டுமல்ல முக்காலத்துக்கும் பொருந்தும்.

விக்கி முத்தையா, கனடா.

## கீரியும் பாம்பும்

அன்பு முரசே!

"எதிர்க்கட்சி ஆதரித்தால் என்ன, ஆதரிக்காது போனால் என்ன, தீர்வைத் தருவோம்!" என்று கூறியது சந்திரிக்கா அரசு. பின்னர் ஏன், எதிரிக்கட்சியின் ஆதரவை கேட்கிறார்கள்? எதிர்க்கட்சியும் ஆளும் கட்சியும் கீரியும் பாம்பும் போன்றவை. எக்கட்டத்திலும் ஒத்துழைக்க மாட்டா. முரசின் கருத்தும், இராஜதந்திரியின் அலசலும் உண்மையிலும் உண்மை!

மு. இளங்கோ, ஆரையம்பதி.

## என்ன செய்ய முடிந்தது?

முரசே!

செம்மணியை மறைத்தனர். இந்த தமிழ்க் கட்சிகள் என்ன செய்ய முடிந்தது? 'வந்தேறு குடிகள்' என்று கூறியதற்கு ஒரு மறுப்பைத்தானும் இக் கட்சிகளால் பெற முடிந்ததா? இதே மாதிரியான ஒரு பிரச்சனை சிங்கள இனம், பௌத்த மதம் தொடர்பாக ஏற்பட்டிருந்தால், அரசு என்னமாய் மாய்ந்து மாய்ந்து மறுப்பும், மன்னிப்பும் விட்டிருக்கும். இனிமேலும் எந்த முகத்தோடு இவர்கள் நியாயம் கற்பிக்கப் பார்க்கிறார்கள்?

கி. ரங்கநாதன், புதுக்குடியிருப்பு.

## பெயர்கள் மாறும்

முரசுக்கு,

பந்தாடி வெற்றி பெற்று பெருமை தேடுவது போன்று தமிழ்மக்களை பந்தாடிவிட்டு, தேர்தலில் வெற்றிக்கிண்ணம் பெறுவதற்கு அரசு விரும்பி நிற்கிறது. 'ஜயசிக்குறு' பெயர் மாறியும், ஒட்டுசுட்டானில் மக்களை விரட்டியது 'ரிவிபல'. ஆட்சிகள் மாறும், போரின் பெயர்கள்மாறும். ஆனால் இராணுவத் தீர்வு ஆசைகள் மாறாது.

எஸ். திருச்செல்வம், வவுனியா.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

**மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட
சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல்:- 074-513266**



படிப்பகம்

www.padippakam.com

# இடம்பெயர்ந்த மக்களின் உடமைகள் சூறை!

# காணிகளில் சிங்கள கிராமவாசிகள் பயிர்செய்கை!?

(நமது நிருபர்)

வன்னியில் 'ஜயசிக்குறுய்' மற்றும் 'ரிவிபல' இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த மக்களது உடமைகள் சூறையாடப் பட்டு வருகின்றன. வன்னியில் உள்ள சிங்கள கிராமவாசிகள் சிலரே இத்தகைய நடவடிக் கைகளில் இறங்கியுள்ளதாக அறியப்படுகிறது.

இதற்கிடையே இன்னொரு செய்தியும் கிடைத்திருக்கிறது. தமிழ் விவசாயிகளின் நெற்காணிகளில் சிங்களக் கிராமவாசிகள் நெற்செய்கையில் ஈடுபட அனுமதிக்கப் பட்டுள்ளனராம்.

'ஜயசிக்குறுய்' நடவடிக்கையில் படையின ரால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் நெடுங் கேணியும் ஒன்று. இங்கு பாரிய முகாம் நிறுவி படையினர் நிலைகொண்டுள்ளனர்.

நெடுங்கேணியில் உள்ள தமிழ் விவசாயி களது நிலங்களில், அதனை அண்டிய சிங்களக் குடியேற்ற கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள தாகக் கூறப்படுகிறது.

வன்னியில் சேமமடு என்ற கிராமத்தில் உள்ள தமிழ் மக்களும் இராணுவ நட வடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

இக்கிராம எல்லைகளாக சிங்களக் கிரா மங்களே அமைந்துள்ளன. சேமமடு கிராமத்த வர்களது உடமைகளும், கால்நடைகளும் அயல் கிராமவாசிகள் சிலரால் சூறையாடப் பட்டன.

சேமமடுவில் பிடித்த கால்நடைகளை விற்பதற்காக வவுனியா நகருக்குக் கொண்டு வந்தனர். வவுனியா நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த சேமமடு மக்கள் தங்கள் கால் நடைகளே அவை என்று இனம்கண்டு பொலிசில் புகார் தந்தனர்.

அதனையடுத்து 16 மாடுகளுடன் ஆறு சிங்களக் கிராமவாசிகள் கைது செய்யப்பட்ட னர். 13 மாடுகளை அதற்குரிய தமிழ்க் கிராமவாசிகள் இனம் காட்டினர்.

இதேபோல சமீபத்தில் மக்கள் இடம் பெயர்ந்த ஒட்டுசுட்டான் பகுதியிலும் பெரு மளவான கால்நடைகளை கைவிட்டே மக்கள் உயிர் தப்பி ஓடியுள்ளனர். இவையும் சூறை யாடப்படலாம் என்று கருதப்படுகிறது.

'ஜயசிக்குறுய்' பாதியில் முடிவடைந்து விட்டது. 'ஜயசிக்குறுய்' படையினர் பாதிக் கிணறு தாண்டாத நிலையில் உள்ளனர். இந்நிலையில் தற்போது வன்னியில் படை யினர் நிலைகொண்டுள்ள பகுதியில் தமிழ் மக்களது பல்லாயிரக்கணக்கான குடியிருப் புக்கள் பாழடைந்து காணப்படுகின்றன; உருக்குலைந்து போயுள்ளன.

வன்னியில் தமிழ் விவசாயிக்ள் இடம் பெயர்ந்து நிவாரண வெட்டால் பட்டினி கிடக்கும் சூழ்நிலை. அவர்களது காணிகளில் அயல் கிராமவாசிகள் பயிர் செய்கின்றனர் என்று செய்திகள் வருகின்றன.

### காணவில்லையா?

ஒட்டுசுட்டானை படையினர் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்த பின்னர் அறுநூறு தமிழர்கள் காணவில்லை என்று சில செய்திகள் வெளியாகின.

அதில் உண்மையில்லை என்று முரசுக்கு கிடைத்த தகவல்கள் கூறுகின்றன.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளோ ரின் பெயர் விவரங்கள், புலிகளின் கட்டுப் பாட்டில் உள்ள பகுதியில் இருக்கும் ஒட்டு சுட்டான் மக்களுக்கு வவுனியா அரச அதிபரால் அனுப்பிவைக்கப்பட்டன. அதில் 47 பேர் படையினரால் விசாரணைக்கு உட் படுத்தப்பட்டுள்ளனர்.

பெயர்களை சரிபார்த்த பின்னர் மேலும் சிலரது பெயர்களைத்தான் காணவில்லை என்று ஒட்டுசுட்டான் மக்கள் கூறியதாகத் தெரிகிறது.

### தொடர் போராட்டம்

இதேவேளை அரசின் நிவாரண வெட்டைக் கண்டித்து வன்னியில் தொடர்ந்து போராட்டம் நடைபெற்றுவருகிறது.

மழைக்காலம் ஆரம்பமாகி அடைமழை பெய்தமையால் மரங்களின் கீழேயும், குடில்களிலும் தஞ்சமடைந்த ஆயிரக்கணக் கான மக்கள் தங்கள் குழந்தைகளுடனும், உடமைகளுடனும் பெரும் அவதிப்பட்டனர்.

தொண்டர் நிறுவனங்கள் தம்மால் முடிந்தளவு உதவி புரிந்து வருகின்றன.

# "வன்னி மக்களுக்கு நிவாரணத்தை நிறுத்தாதே!"

## 13வது வாரமாக இலண்டனில் சுழற்சி முறையில் விழிப்புப் போராட்டம்

"தமிழீழப் பகுதிகள் மீதான சிறீலங்கா அரசின் திட்டமிட்ட உணவு நிவாரண வெட்டால் வன்னியில் உள்ள மக்களின் நிலை கவலைக்கிடமாகத் தொடர்ந்து வரு கின்றது.

அரச படையினரின் தொடர் இரா ணுவ நடவடிக்கைகள், விமானக் குண்டு வீச்சுக்கள், எறிகணைத் தாக்குதல்கள் காரண மாக தமது சொந்த இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து, தொழில் வாய்ப்புக்கள் ஏதுமின்றி நிவாரண உதவிகளை மட்டுமே நம்பியிருந்த மக்களின் வயிற்றில் அடிப்பது போன்றே அரசின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன!" என்று இலண்டனில் உள்ள தமிழர் மனித உரிமைகள் மன்றம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆகியவை தெரிவித்துள்ளன. மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தற்போது மாரிமழை காலமாக உள்ள தால் வன்னியில் இடம்பெயர்ந்த மக்களின் நிலை இன்னும் மோசமாகி உள்ளதுடன். நீரினால் பரவுகின்ற வாந்திபேதி, நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்களாலும் அதிகமா னோர் பாதிக்கப்பட்டுள்ளனர். குழந்தைகள், வயோதிபர்கள் மிக மோசமாகப் பாதிக் கப்பட்டுள்ளனர்.

சர்வதேச அரசுகளினதும் அரசுசார் பற்ற அமைப்புக்களினதும் அழுத் தங்களை யும் அறிவுரைகளையும் மீறி சிறீலங்கா அரசு. வன்னி மக்களின் நிவாரண வெட்டை இன்னும் நீக்காது மிகவும் அசட்டை செய்வது கவலைக்குரிய விடயமும் மிகப் பாரிய மனித உரிமை மீறலும் ஆகும்.

இவற்றுக்கு எதிராக வன்னியில் மக்கள் நடாத்திவரும் தொடர்ச்சியான உண்ணா விரதப் போராட்டத்திற்கு ஆதரவாகவும் இந்த மனித அவலத்தை உலகிற்கு எடுத்துக் காட்டும் முகமாகவும் 13 ஆவது வாரமாக-11.12.1998 அன்று வெள்ளிக்கிழமை பிரித்தானி யாவில் உள்ள அகதிகளுக்கான ஐ.நா. அலு வலகத்தின் முன்பாக விழிப்புப் போராட்டம் நடந்தது. மதியம் 12 மணிக்கு ஆரம்பித்து மாலை 4 மணிவரை நடைபெற்றது.

### மனுகையளிப்பு

அன்று நிலவிய கடுங்குளிர் காலநிலைக்கு மத்தியிலும் எம் சொந்தங்களுக்கும் இரத்த உறவுகளுக்கும் ஆதரவாக பல தமிழ் மக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். பெண் கள், முதியவர்கள் உட்பட பலதரப்பட்ட டோரும் பங்குகொண்டனர்.

பிரித்தானிய ஐ.நா. அகதிகளுக்கான அலுவலகத்தில் இலண்டன் வாழ் தமிழ் மக்கள் சார்பில் மனு ஒன்றும் கையளிக் கப்பட்டது. இதில் வன்னி மக்களின் நிவாரண வெட்டு அரசினால் நடைமுறையில் உள்ளது எனவும் அது உடனடியாக நீக்கப்பட சிறீ லங்காவிற்கு மிக உறுதியாக அழுத்தம் கொடுக் கப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

ஐ.நா. அகதிகள் சபையின் இலண்டன் உப பிரதிநிதியுடன் விழிப்புப் போராட்டத்தில் பங்கு பற்றிய தமிழ் சங்கங்களின் பிரதிநிதிகள். ஒரு மணி நேரமாக அவருடன் உரையாடினர்.

வன்னி மக்களின் நிலைமையைத் தெளிவாக விளக்கினர். உணவு மருந்துகள் தாமதமின்றி அவர்களுக்குச் செல்வதற்குரிய நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட வேண்டும் என தமிழர் மனித உரிமை மையத்தின் பிரித்தானிய பிரதிநிதியால் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

விழிப்புப்போராட்டம் நடைபெற்ற வீதி வழியாகச் சென்ற வெளிநாட்டவர்களும் உள்நாட்டவரும்- பங்கெடுத்த மக்கள் ஏந்தி யிருந்த சுலோக அட்டைகளை நின்று வாசித் துச் சென்றதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### வெள்ளிதோறும்

விழிப்புப்போராட்டம் தொடர்ந்தும் பிரதி வெள்ளிதோறும் நடைபெற ஏற்பாடாகி உள்ளது. அடுத்த வெள்ளியும் செஞ்சிலுவைச் சங்கத்தின் இலண்டன் தலைமை செயலகத் தின் முன் மதியம் 12 மணியிலிருந்து மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது. இனிவரும் வெள்ளிக்கிழமைகளில் ஒவ்வொருவரும் கலந்து கொள்ளும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்! என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# செம்மணி தடயங்கள் அழிப்பு!

## நீதிக்கான ஆணைக்குழு கண்டனம்

செம்மணி புதைகுழி தோண்டும் விட யத்தில் காட்டப்படும் தாமதத்தை நீதி- சமாதான ஆணைக்குழு கண்டித்துள்ளது.

இக் குழுவின் சார்பாக கி.ஜோ.ஜெயக் குமார் நீதியமைச்சருக்கு கடிதம் ஒன்றையும் இரண்டாவது தடவையாக அனுப்புவைத் துள்ளார்.

நீண்ட தாமதம் செய்யப்படுவது புதை குழிகளைத் தடயமின்றி அழிப்பதற்கே வாய்ப் பைக் கொடுக்கும். ஏற்கனவே தடயங்கள் உண்மையிலேயே சிதைக்கப்பட்டு விட்டன என்றே மக்கள் கருதுகின்றனர்.

மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண் டிய பாதுகாப்புப் படையினரே, காணாமல் போன சம்பவங்களுக்கும், செம்மணி புதை குழிகளுக்கும் பொறுப்பாகும். இந்நிலையில் அவர்களையே இரவும் பகலும் புதை குழிகளுக்கு காவலாய் வைத்திருப்பதனால் மக்களின் அச்சத்தை புறம்தள்ள முடியாது, என்றும் யாழ் கத்தோலிக்க மறைமாவட்ட நீதி- சமாதான ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

செம்மணி புதைகுழிகள் உள்ள பகுதி களில் தற்போது வெள்ளம் நிரம்பியுள்ளதாக கூறப்படுகிறது. இதனை காரணம் காட்டி தென்னாபிரிக்க தூதுக்குழு அப்பகுதியை பார்வையிட அனுமதி மறுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இனிய வாசக நெஞ்சங்களுக்கு
எமது உளங்கனிந்த
நத்தார் வாழ்த்துக்கள்

# எச்சரிக்கையை மீறியதால் சுடப்பட்டனர்!

## மரவியாபாரிகளுக்கு எச்சரிக்கை

மட்டக்களப்பு-ஓட்டமாவடியிலிருந்து புண்ணானையிலுள்ள கரடியன் குளக் காட்டுப் பகுதிக்கு மரம் வெட்டச் சென்ற 5 முஸ்லிம் இளைஞர்கள் சீருடையினரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகினர்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: ஓட்டமாவடிப் பகுதியில் உள்ள முஸ்லிம்கள் நீண்ட காலமாக புணானை-கரடியன்குளம் தேக்கஞ் சோலைகளில் இருந்து மரம் வெட்டி வந்து வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள். இத் தொழில் சீருடையினருக்குத் தெரிந்து அவர் களது மறைமுக ஒத்துழைப்புடன் தான் நடத்தப்படுகிறது.

இதேவேளை இந்த மரங்கள் சிருடை யினரின் கண்காணிப்பின் கீழ் இல்லாத பகுதியில் இருந்து கொண்டு வரப்படுவதால் இந்த சட்டவிரோத மரவியாபாரத்திற்கு புலிகளின் முழு ஒத்துழைப்பும் இருந்து வருகிறது என்று சீருடையினர் நம்புகின்றனர். புலிகளுக்கு இந்த மரவியாபாரிகள் வரி செலுத்துவதோடல்லாமல், புலிகளிடமிருந் தும் மரங்களை வாங்கி வருகின்றனர் என்ற சந்தேகமும் மறு தரப்பார் மத்தியில் வலுத் துள்ளது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில்தான் கரடியன்குள காட்டுப் பகுதியில் உள்ள சீருடையினர் குறித்த மரவியாபாரிகளுக்கு இவ்வாறான சட்ட விரோத மரவியாபாரத் தில் ஈடுபட வேண்டாம் என்று தொடர்ந்து எச்சரித்து வந்துள்ளனர்.

சம்பவ தினமான 07.12.98 அன்று அதிகாலை 3 மணியளவில் படையினரின் முகாமுக்குச் சமீபமாக மரம் ஏற்றப்பட்ட வண்டிகளுடன் மரவியாபாரிகளான அந்த முஸ்லிம் இளைஞர்கள் வந்து இளைப் பாறியிருந்தபோது அங்கு பதுங்கியிருந்த சிருடையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். அந்த இடத்திலேயே ஐவரும் பலியாகினர். மேலும் இருவர் காயங்களுடன் தப்பிவிட்ட னர். வண்டில் மாடுகளும் பலியாகின.

# கூட்டணி குத்துக்கரணம்

## அரசுக்கு ஆதரவாக வாக்களிப்பு

## உத்தரவாதத்தை மறக்காத எம்.பி.

பட்ஜெட் முழுவதையும் ஒட்டுமொத்த மாக எதிர்த்து வாக்களிக்கப் போவதாக கூட்டணியினர் தெரிவித்திருந்தனர். எனினும் ஒவ்வொரு அமைச்சுமீதான நிதி ஒதுக் கீட்டின்போதும் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டபோது கூட்டணி எம்.பி.கள் எதிர்ப் புத் தெரிவிக்கவில்லை.

கூட்டணி எம்.பிகள் எதிர்ப்புத் தெரிவித்து வாக்களிப்பு கோரியிருந்தால் அவையும் வாக்கெடுப்புக்கு விடப்பட்டிருக்கும்.

புலிகளை முடிந்தளவு அழித்த பின்னரே பேச்சுவார்த்தை என்று வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தனது அமைச்சு மீதான விவாதத்தின்போது தெரிவித்திருந் தார். அவரது அமைச்சுக்கான பிரேரணை மீதுகூட கூட்டணியினர் வாக்கெடுப்புக் கோரி எதிர்க்க முன்வரவில்லை.

அவசரகாலச்சட்டம், பட்ஜெட் போன்ற வற்றுக்கு தாம் எதிர்ப்புத் தெரிவித்தாலும் முக்கியமான தருணங்களில் கைகொடுப் போம் என்று கூட்டணியினர் அரசுக்கு உத் தரவாதம் கொடுத்துவிட்டனர் என்று முரசு முன்னர் செய்தி வெளியிட்டிருந்தது அல் லவா?

அதனை உறுதிப்படுத்தும் சம்பவம் நடந்திருக்கிறது. 11.12.98 அன்று தொண்ட மான் அமைச்சு மீதான நிதி ஒதுக்கீட்டு பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த் தது. வாக்கெடுப்புக்கு விடுமாறு கோரியது.

ஆளும் தரப்பில் எம்.பிகள் போதியளவு சமூகமளிக்காமையால் அரச தரப்புக்கு தர்மசங்கடநிலை. அப் பிரேரணை தோற் கடிக்கப்பட்டாலும் பின்னர் வேறு துணைப் பிரேரணை கொண்டு வந்து நிறைவேற்ற லாம். ஆனாலும் அரசுக்கு பெரும் இழுக்கும் அவமானமும் ஏற்பட்டுவிட்டது.

### உரிய தருணத்தில்

அரச தரப்பு அமைச்சர்கள் எதிர்த்தரப் பில் உள்ள தமிழ் எம்.பி.களைத் தேடினர். கையுயர்த்தி கைகொடுப்பவர்கள் அவர்கள் தானே. எனினும் தமிழ்க் கட்சி எம்.பிகள் மூவர் மட்டுமே அமர்ந்திருந்தனர். புளொட் தலைவர் சித்தார்த்தன், சுயேச்சை எம்.பி ராமமூர்த்தி, மூன்றாமவர் கூட்டணி எம்.பி. துரைராஜசிங்கம். ஏனைய இரண்டு எம்.பிகளும் அரசுக்கு சார்பாக வாக்களிப்பவர்கள். துரை ராஜசிங்கம் என்ன செய்யப்போகிறார்? என்றே அனைவரும் உற்று நோக்கினர்.

"உரிய தருணத்தில் அரசுக்கு கைகொடுப் போம்" என்ற உறுதிமொழியைக் காப்பாற்றும் பொருட்டு எழுந்து நின்று கையுயர்த்தினார், கூட்டணி எம்.பி துரைராஜசிங்கம். அரச தரப்பு அமைச்சர்களது முகங்கள் மலர்ந்தன.

மலையக மக்களுக்காக ஆதரித்தோம் என்று கூறுவது ஏற்கமுடியாதது. ஏனெனில் அந்தப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டாலும் மறுபடி கொண்டுவர பல் வழிகள் உள்ளன. அதற்கு பாராளுமன்ற விதிகள் உள்ளன.

# மின்சாரம் வழங்க பிரதியமைச்சர் நடவடிக்கை!

## செய்தி வெளியானது-கோபுரங்கள் சரிந்தன!

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான மின்விநியோகத்தை கடந்த இரு மாதங்களுக்கு மேலாகப் புலி இயக்கத்தினர் தடைப்படுத்தி யுள்ளனர். மின்சார விநியோகத்தை மீண்டும் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக பல்வேறு உறுதிப்பாடற்ற கதைகள் உலாவந்த போதிலும் புலிகள் இன்னமும் விடாப்பிடியாகவே உள்ளனர்.

இதனிடையே ஹபறணை வழி மின் துண்டிப்பால் மின்சாரமற்றிருக்கும் வாழைச் சேனை, ஓட்டமாவடி பிரதேசங்களுக்கு மீண்டும் மின்சாரம் வழங்க பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் நடவடிக்கை எடுத்துள்ளார். பாதுகாப்புத் தரப்பினருடன் அவர் தொடர்பு கொண்டு நடவடிக்கைகள் எடுத்ததை அடுத்து உடனடியாகத் திருத்த வேலைகள் செய்யப்பட இருக்கின்றன, என்று செய்தி வெளியானது. மறுநாள் இங்கினியாகலை மின்விநியோக வழியில் இருந்த எட்டு (08) மின் கோபுரங்கள் புலிகளால் தகர்த்தெறியப் பட்டு, மின்சாரக் கம்பிகளும் அறுத்துச் செல்லப்பட்டுள்ளன. மட்டக்களப்பு-அமிர்த கழியில் மின்மாற்றியொன்றும் தகர்க்கப்பட்டது.

மின்சார சபை ஊழியர்கள் எவரும் திருத்த வேலைக்குச் செல்லக்கூடாது என்று புலிகள் ஆரம்பத்திலேயே இட்ட கட்டளையை இன்னமும் தளர்த்தவில்லை, என்பதும் புலிகளின் கடும் எச்சரிக்கையை மீறி தமது உயிரைப் பணயம் வைத்து மின்சார சபை ஊழியர்கள் எவரும் திருத்த வேலைக்குச் செல்லமாட்டார்கள் என்றும் கூறப்படுகிற்து. இழுபறி நிலை தொடர்கிறது.

## பத்திரிகை சுதந்திரத்தில் இனப் பாகுபாடு

# ஜனாதிபதியின் உத்தரவால் என்ன பயன்?

இனப்பாகுபாடான பத்திரிகை சுதந் திரமே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்று ஈ.பி.டி.பி-எம்.பி சந்திரகுமார் பாராளுமன்றத் தில்-தகவல் தொடர்பு அமைச்சு மீதான விவாதத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

"தமிழ்ப் பத்திரிகையாளர்கள் சிவில் உடை தரித்தோரால் கடத்தப்பட்டனர். மாதக்கணக் காக தடுத்து வைக்கப்பட்டனர். தற்போதும் கூட பத்திரிகையாளரும் இந்துசமய கலா சார திணைக்கள உதவிப் பணிப்பாளரான தெய்வநாயகம்பிள்ளை காரணமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

தமிழர்கள் என்றால் புலிகள் என்ற சந்தே கத்தின் அடிப்படையிலேயே தமிழ்ப் பத்திரிகை யாளர்களும் கைது செய்யப்படுகின்றனர்.

ஒருவரை கைது செய்தால் எந்தவித மான அணுகுமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி உத்தரவுகள் பிறப்பித்ததாக பத்திரிகைகள் செய்தி வெளி யிட்டன. அதே பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டபோதுகூட அந்த உத்தரவுகள் ஏட்டுச் சுரைக்காயாகவே இருந்தன. எவ்வித பலனும் கிட்டவில்லை!" என்றும் சந்திரகுமார் எம்.பி மேலும் தெரிவித்தார்.

"தமிழ்ப்பத்திரிகையாளர்கள்மீது உங்கள் கரிசனம் உண்மையானால், ஆதாரமின்றி அவர்களை கைதுசெய்து, மாதக்கணக்காக வைத்திருந்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்!" என்றும் அவர் கூறினார்.

# காணாமல் போனோருக்கு நஷ்டஈடு?

## வடக்கு-கிழக்கு புறக்கணிப்பு!

வடமேல் மாகாணசபைத் தேர்தல் வேட்புமனுத் தாக்கல் செய்து முடிந்த கையோடு தினசரிப் பத்திரிகைகளில், காணா மல் போன 9000 பேரின் குடும்பங்களுக்கு உதவியிருப்பதாக ஜனாதிபதியினதும், இது சம்பந்தப்பட்ட புனர்வாழ்வு அமைச்சர், பிரதி அமைச்சர், அதன் செயலாளர் ஆகியோ ரின் படங்களுடன் விளம் பரங்கள் வெளியாகியிருந்தன. இதனையடுத்து வடக்கு-கிழக்கில் காணாமல் போனோரின் உற வினர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

நாட்டிலுள்ள 20 மாவட்டங்களில் நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்பட்ட விவரங் கள் வெளியாகியிருந்தன.

எனினும் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள எவருமே காணாமல் போனதாகவோ, அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டதாகவோ எந்த விவரங்களும் அதில் இல்லை.

அந்த மாவட்டங்கள் பற்றிய தகவல் களும் காணப்படவில்லை. அரசின் இந்த பாரபட்சமான போக்குத் தொடர்பாக மனிதாபிமான அமைப்புக்களை சேர்ந்தோர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

# கொக்கிளாயில் அநுராதபுர ஆயர்

## குடியேற்ற முயற்சி என சந்தேகம்

வன்னியில் கொக்கிளாய் கிராமத்தில் அநுராதபுர சிங்கள மறைமாவட்ட ஆயர் மகா வந்தனைக்குரிய ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை அவர்களால் புனித அன்னம்மாள் ஆலயம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக யாழ் மறை மாவட்ட குழுக்களவை சந்தேகம் கிளப்பியுள்ளது.

இது தொடர்பான தமது பலத்த கண்டனத்தை பாப்பரசரின் இலங்கைப் பிரதிநிதிக்கும், கொழும்பு மறை மாவட்ட பேராயருக்கும் அனுப்பிவைத்துள்ளனர்.

"நாயாறு,கொக்கிளாய், கொக்குத் தொடுவாய் தமிழ் கத்தோலிக்க மக்கள் அங்கிருந்து விரட்டப் பட்டு நடுத்தெருவில் நிற்கின்றனர். பலர் பிச்சை யெடுக்கும் நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

தற்போது அப்பகுதிகளில் அநுராதபுர ஆயர் காணப்படுகிறார். அரசால் ஊக்குவிக்கப்படும் சிங்கள வாடி மீனவருக்காக ஆலயம் ஒன்றை திறந்து வைத்துள்ளார். இச் செயலானது குடி யேற்றத்தை தீவிரமாக்கும் முயற்சியோ என்று பரவலான சந்தேகம் எழுந்துள்ளது" என்று யாழ் மறைமாவட்ட குழுக்களவை கூறியுள்ளது.



படிப்பகம்

# சம்பளத்தில் முறைகேடு?

## மாகாணசபையில் தில்லு முல்லு!

(திருமலை நிருபர்)

வடக்கு-கிழக்கு மாகாண சபையைச் சேர்ந்த சில பொறியியலாளர்கள் தாங்கள் பெறவேண்டிய சம்பளத்திலும் பார்க்க பன்மடங்கு தொகையை அதிகமாகப் பெறுகிறார்கள் என்று தெரிய வருகிறது. கணக்காய்வாளர் நாயகத்துக்கும் இது தொடர்பாகத் தெரியப்படுத்தப்பட்டிருப்பதாக முரசுக்கு நம்பகமான தகவல்கள் கூறுகின்றன.

ஓய்வு பெறும் காலத்தில் கடைசியாக எடுத்த சம்பளத் தொகையே மீளநியமனச் சேவைக்கும் வழங்கப்பட வேண்டுமென்று பொது விதி இருக்க, ஒரு பொறியியலாளர் அரச திணைக்களத்திலிருந்து ஓய்வு பெறும்போது 8700/= ஐ சம்பளமாகப் பெற்றுவிட்டு மீள் நியமனத்தில் 19500/= ஐச் சம்பளமாகப் பெறுவது எப்படி என்று அக்கடிதம் கேட்டுள்ளது.

1973 திணைக்களத்தில் முதல் நியமனம் பெற்ற அந்தப் பொறியியலாளர் பின்னர் ஓய்வு பெற்று வீதி அபிவிருத்திச் சபையில் பணிபுரிந்திருக்கிறார். ஐந்து வருடச் சேவையின் பின் சரியான அனுமதி இன்றி வெளிநாடு சென்றதன் பேரில் பதவி வறி தாக்கலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார். இரண்டு வருடங்களின் பின் நாடு திரும்பிய அவர், வீதி அபிவிருத்திச் சபை விவகாரத்தை வெளிப்படுத்தாமல் மீள் நியமனம் கோரியுள்ளார். 1992 மே தொடக்கம் 1997 டிசம்பர் வரை சட்டப்படி தனக்கு வர வேண்டிய தொகைப்படி 8700/= ஐ மாதாந்தச் சம்பளமாகப் பெற்றுள்ளார்.

இவ்வாண்டு முதல் திடீரென அவரின் சம்பளம் 19500 ஆக அதிகரிக்கப்பட்டது. இது அவர் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தில் பெற்ற தொகைக்குச் சமனாகும். புதிய சம்பளத்தின்படி நிலுவைகளைப் பெறவும் அவர் முயற்சி செய்கிறாராம்.

இவ்வாறே இன்னுமொரு பொறியியலாளரும் மோசடியான விதத்தில் மாதாந்தம் 20 ஆயிரத்தைச் சம்பளமாகப் பெறுகின்றமையும் தெரிய வந்துள்ளது.

இது இவ்வாறிருக்க, நீதி ஆணைக்குழுவின் செயலாளர் திரு. ரி.ஜி. ஜயசிங்க, தலைமைச் செயலக முகவரியிட்ட ஒரு கடிதத்தில் "பொறியியல், சுகாதாரம், நீர்ப்பாசனம், வீதி ஆகிய துறைகளில் மீள் நியமனக்காரர்கள் பெறவேண்டிய சம்பளத்தை விட அதிகச் சம்பளம் பெறுவது எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அவ்வாறே இருப்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனக் கோரியுள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாண நிதிச் செயலாளருக்கும் பிரதியிடப்பட்ட இக்கடிதம் நவம்பர் 20,1998 எனத் திகதியிடப்பட்டுள்ளது.

# வசதிகள் இல்லாத தபாலகம்

(நமது நிருபர்)

ஏறாவூர் நகரத் தபாலகம் சுமார் 45 ஆயிரம் மக்களுக்குரிய பணிகளை ஆற்ற வேண்டியிருக்கிறது. இது முதலாம் தரத் தபாலகம் என்ற நிலைக்குத் தரமுயர்த்தப்பட்டுள்ள போதிலும் பல விதமான அடிப்படை வசதிகளின்றி இத்தபாலகம் புறக்கணிக்கப்பட்டிருப்பதாக தபாலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தினமும் சுமார் 1000 கடிதங்களைக் கையாள வேண்டியிருப்பதுடன், முத்திரை, தந்தி, காசுக்கட்டளை, ஃபக்ஸ், சேமிப்பு, வானொலி-தொலைக்காட்சி அனுமதிப்பத்திரங்கள், அடையாள அட்டை வழங்கல், பொதுசன உதவிக் கொடுப்பனவுகள் என்று வழமையான பல கருமங்களை நாளாந்தம் செய்து பல்லாயிரம் ரூபா வருமானத்தையும் இத்தபாலகம் பெற்றுக் கொடுக்கிறது.

ஆயினும் அலுவலக உதவியாளர், தபால் பொதியாளர், இன்னும் மூன்றே மூன்று தபால் சேவகர்கள் உள்ளனர். இவர்கள் காலை ஏழு மணியிலிருந்து மாலை ஏழு மணிவரை பல சிரமங்களுக்கு மத்தியில் சேவை செய்கிறார்கள். ஆனால் இதற்கான மேலதிக நேரக் கொடுப்பனவு ஏதும் தங்களுக்குத் தரப்படுவதில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள்.

இத்தனைக்கும் மத்தியில் இத்தபாலகம் சொந்தக் கட்டடம் இல்லாத கடைக்கட்டடம் ஒன்றில் இயங்கி வருகிறது. கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் இத்தபாலகத்திற்குரிய கட்டடத்திற்குப் பிரதிஅமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வினால் அடிக்கல் நாட்டப்பட்டது. ஆயினும் இன்னமும் அத்திவாரத்துடனேயே கட்டடம் இருக்கிறது. இதற்குரிய நிதி திரும்பி விடக்கூடும் என்ற ஊகங்களும் அடிபடுகின்றன.

இதனிடையே நீண்ட கால இழுத்தடிப்புக்குப்பின் ஏறாவூரில் நாணயக் குற்றி போட்டு அழைப்பு பெறும் தொலைபேசிப் பெட்டிகள் சில பொருத்தப்பட்டன. அவை அனைத்தும் இன்று செயலிழந்து சுவர்களில் தொங்குகின்றன. தபால் வசதிகளும், மற்றும் தொலைத்தொடர்பு வசதிகளும் மிகவும் புறக்கணிக்கப்பட்ட நிலையிலேயே ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனைப் பகுதிகள் இருந்து வருகின்றன என்று அப்பகுதி மக்கள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். ●

# புளொட் உறுப்பினர்களுக்கு பொலிசார் எச்சரிக்கை

மட்டக்களப்பு-செங்கலடியில் உள்ள புளொட் இயக்க உறுப்பினர்கள் அந்தப் பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கையில் தலையிட்டு பல நெருக்கடிகளைக் கொடுத்து வருவதாகவும் இதனால் சிவில் நிருவாகத்திற்குக் குந்தகம் ஏற்படுவதாகவும் அப்பகுதியிலுள்ள பொது மக்களும் மற்றும் நிருவாக அதிகாரிகளும் பொலிசாருக்கு முறையிட்டனர். இதனைத் தொடர்ந்து செங்கலடியில் உள்ள புளொட் இயக்கத்தவர்களை அழைத்த ஏறாவூர் பொலிஸ் பொறுப்பதிகாரி, பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரிப்பதிலோ, நீதி, தண்டனை வழங்கும் சட்ட விரோத நடவடிக்கையிலோ இனிமேல் ஈடுபடவேண்டாம் என்று எச்சரிக்கை செய்து அனுப்பி வைத்துள்ளார்.

செங்கலடியில் உள்ள புளொட் இயக்கத்தினர் அப்பகுதியிலுள்ள பொதுமக்களின் பிரச்சனைகளில் அநாவசியமாகத் தலையிட்டு அழைப்பாணைகளை விடுப்பதுடன், நீதி விசாரணை செய்து தண்டனை வழங்குவதும், எச்சரிக்கை மிரட்டல்களை விடுவதும் வழக்கமாகி விட்டது.

இதுபற்றி பொதுமக்களும், மற்றும் பொது நிர்வாக அதிகாரிகளும் பல கெடுபிடிகளையும் எதிர்நோக்குவதாகக் கூறுகிறார்கள். இதன் காரணமாகவே இந்த விடயத்தைப் பொலிஸ் பொறுப்பதிகாரியின் கவனத்திற்குக்கொண்டு சென்றபோது, புளொட் இயக்கத்தவர்கள் இனிமேல் எக்காரணம் கொண்டும் பொதுமக்களின் நிர்வாக அலுவல்களில் தலையிட வேண்டாம் என்று எச்சரிக்கை செய்யப்பட்டதாக அதிகாரிகள் சிலர் தெரிவித்தார்கள். ●

# வன்னியில் யானை விலை

வன்னியில் நிவாரண வெட்டினால் பாதிப்படைந்த மொத்தக் குடும்பங்கள் கீழே தரப்படுகின்றன. (யூலை மாதத்தில் இருந்து)

| மாவட்டம் | நிவாரணம் பெற்று வந்த குடும்பங்கள் | நிவாரண வெட்டினால் பாதிக்கப் பட்ட குடும்பங்கள் |
|---|---|---|
| கிளிநொச்சி | 18,857 | 9,918 |
| முல்லைத்தீவு | 32,869 | 19,536 |
| வவுனியா | 85,999 | 3,033 |
| மன்னார் | 17,169 | 12,725 |
| மொத்தம் | 154,894 | 45,242 |

நிவாரண வெட்டுக்களும் பாதிப்புக்களும் இவ்வாறு இருக்க, இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் காலவரையறையின்றி அமுலில் இருக்கும் 'பொருளாதாரத் தடை' ஏற்கனவே மக்களைப் பிழிந்து கொண்டிருக்கின்றது. பொருளாதாரத் தடை காரணமாக எல்லையில்லாத் துயரும் விலை உயர்வுகளும், பொருள் தட்டுப்பாடுகளும் மக்களின் பாதிப்புச் சுமையை அதிகப்படுத்துகின்றன. விலைகளை உயர்த்தி நேர்மையற்ற சந்தை நடவடிக்கைகளை உருவாக்குவதிலும், பொருள் பதுக்குவதிலும் தமிழ் வியாபாரிகளுக்கு நிகரானவர்கள் கிடையாது.

| பொருள் | அளவு | சாதாரணவிலை | வன்னியில் |
|---|---|---|---|
| அரிசி | 1Kg | 17.72 | 22.00 |
| மா | 1Kg | 17.38 | 26.50 |
| உருளைக் கிழங்கு | 1Kg | 22.00 | 80.00 |
| மரக்கறி | 1Kg | 15.00 | 100.00 |
| தேங்காய் எண்ணெய் | 1Lit | 55.00 | 140.00 |
| சீனி | 1Kg | 20.00 | 60.50 |
| சைக்கிள் ரயர் | 1 | 240.00 | 650.00 |
| மண் எண்ணெய் | 1Lit | 13.50 | 240.00 |

இவற்றைவிட 90களில் வட பகுதியில் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடை போன்று ஏனைய பல பொருட்கள் தடை செய்யப்பட்டவையாக உள்ளன.

நன்றி- ஆத்மா.


BRIGHT NEW METHOD

## SPOKEN ENGLISH
## பேச்சு ஆங்கிலம்

தபால் மூலமும் நேரிலும் நடைபெறும்



ஆங்கிலம் பேச வேண்டும் என்று விருப்பம்
ஆனால்......
ஏதாவது தவறாகப் பேசி விடுவோமா என்ற தயக்கம், பயம்.
மற்றவர்கள் ஆங்கில மொழியைப் பேசும் போது புரிந்து கொள்ள முடிகிறது
ஆனால் பேசும் போது தயக்கம்
இது தானே உங்கள் பிரச்சினை

**கவலையை விடுங்கள்!**

மிக குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் பேசப் பழக முடியும். நேரில் கற்க விரும்புவோர் தொலைபேசி மூலமோ, நேரிலோ தொடர்புகொள்ளவும். தபால்மூலம் கற்க விரும்புவோர் கீழ்க்காணும் விண்ணப்பப்படிவத்துடன் சுயவிலாசமிடப் பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்ளவும்.

பெயர்: ..............................
விலாசம்: ..............................
..............................

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S- 27 FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX. P.O. BOX NO: 162, COLOMBO - 11 TELE : 434770, 074 - 718592

## விளம்பரப் பகுதி

அஸ்மா
நோய்க்கு வைத்தியம்

* தொய்வு
* இளைப்பு
* மூச்சுத்தடைல்
* சளி
* தலைவலி
* இழுப்பு
* மாய்ச்சல்
* இருமல்
* மூக்கடைப்பு
* தும்மல்
* பீனிசம்

போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய உடலுக்கு பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகளைக் கொண்டு கிரந்தியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல் மற்றும் குளித்தல் போன்ற பல விளக்க முறைகளுடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்.

டாக்டர்
சுறாஜ் சோமசுந்தரம்
யுனானி சிகிச்சை நிபுணர்
Ph.DH(Ind); M.B.B SCH (Cey)
Govt. Reg. No. A 1553 (1970)
25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசை மவுண்ட்லேவினியா - (கொழும்பு)
(பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஓடியன் தியேட்டர்)

தினமும் மாலையில் 4 மணி முதல் 7 மணி வரை

தூர மாவட்டத்தில் உள்ள நோயாளர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு தொலைபேசி மூலம் பதிவு செய்தால் காலை நேரங்களிலும் பார்வையிடப்படும். சனி, ஞாயிறு, விடுமுறைநாட்களில் நோயாளர்கள் அதிகம் இருப்பதினால் புதிய நோயாளர்கள் தொலைபேசி மூலம் பார்வையிடப்படும் நாளையும் நேரத்தையும் பெற்று வரவும்.

☎ 074-201582

## ஹோமியோபதி

தமிழ்நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்
**Dr. R. தியாகராஜன்**
D.H.M.S. AMRSH (Lond)
நாட்பட்ட தீராத வியாதிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கிறார்.
**ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ்.**
தொ.பே: 585592 - 581986
**17.12.1998 - 22.12.1998**
இந்தியத் தொ.பே: 0091-431-432946
0091-431-432046
வெளிநாடுகளில் இருப்பவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.

சகல விதமான வாத்தியக் கருவிகளையும் உதிரிப் பாகங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும் அவற்றை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்

சங்கீதப் புத்தகங்களும் விற்பனைக்கு உண்டு.



**SAI SANGEETHA**
L.G. 123, Peoples Park, Gaswork St.
Colombo-11. Tel : 445102

## மனோதத்துவ வைத்தியம்
வவுனியா விலாசம் மாற்றப்பட்டுள்ளது

இளைஞர்களே! சக்தி இழந்து மெலிந்து, நித்திரையின்மை, பயம் நடுக்கம், ஞாபக மறதி, தாழ்வு மனப்பான்மை ஏற்படக்காரணமான தவறுகளை நிறுத்தி எதிர்காலம் பிரகாசிக்க பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P.ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

**SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)**

தாம்பத்திய கோளாறுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணமாகும். என்பதை 90 நிமிடத்தில், நான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்தே பணம் பெறப்படும்.

**வெளிநாட்டில் வசிப்போருக்குவிஷேட ஏற்பாடுகள்**

எந்தவித தாம்பத்திய பாதிப்புனாலும் தயக்கமின்றி எழுதவும். உமது கேள்விகளுக்கு விரிவான பதில் தந்தபின் முடியாதவன், இயலாதவன் என்ற தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை பதிவு நாடா மூலமும், உடல் பாதிப்பிற்கு நல்ல மூலிகை மருந்தும் பெற்று தாம்பத்திய குறைகளை முற்றாக நீங்கிய ஆண்மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) பதில் பெற முத்திரை செலவு அனுப்பவும்.

**மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத் தொடர்பு கொள்ளவும்**

நீரிழிவு நோய் முற்றாக சுகமாக்கலாம். மனநோய்கள், தாழ்வு மனப்பான்மை 'ஹிஸ்டீரியா' என்பனவற்றுக்கும் மனோதத்துவ சிகிச்சை உண்டு. ஆஸ்துமா, தலையிடி, வாதம், வெள்ளை போதல், கிரந்திநோய், குழந்தை பேறு இன்மை, முடி உதிர்தல் எல்லாவற்றுக்கும் மருந்துகள் உண்டு.

**கொழும்பில் டிசம்பர் 20 முதல் 28 வரை**

DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
BEAUTY LODGE, 67A, WOLFENDHAL STREET, COLOMBO-13
T.P. 338165, 338166 (5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிரோஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) (ஆட்டுப்பட்டித் தெரு)
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No-072-609388

**வவுனியாவில் ஜனவரி 09,10,11 திகதிகளில்**

முன்கூட்டியே பதிவு செய்யவும் ஹோட்டல் வசந்தம் (HOTEL VASANTHAM), கண்டி வீதி, வவுனியா. T.P.024-22615, 024-22604

**கல்முனையில் ஜனவரி 2,3,4 திகதிகளில்**

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

RESIDENT T.P:- 065-24019

கடிதத் தொடர்பு:
**DR.P.ARUMUGAM S.A.M.P.,**
NO.33. Tissa Weerasingam sq.,
Boundary Road, Batticaloa. SRI LANKA.

உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் 9

எப்பேர்ப்பட்ட வியாதியாயினும் சரி உடனே என்னை சந்தியுங்கள்



**K. சிவசுப்பிரமணியம்**
**M.I.H. Ind. S.M.P.**

எவ்வளவு நாள்பட்ட வியாதியானாலும் சரி, காலதாமதம் செய்யாமல் கீழ் கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வர முடியாது போனால் கடிதம் மூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்மா சக்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காக்கை வலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு, நரம்புத் தளர்ச்சி, வீரியக் குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன் — பின் காணுதல், சூதக வலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

வாரநாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை வைத்தியரை சந்திக்கலாம்.

**முருகானந்தா வைத்தியசாலை**

No. G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கெட், (நிலமாடி) மீன்கடை மேல், கொழும்பு-11.


## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளும்



**செல்லையா தம்பிராசா-மீசாலை**
(ஓய்வுபெற்ற உள்ளூராட்சி சேவை எழுதுவினைஞர்)

19.11.1998ல் திரு. செல்லையா தம்பிராசா கொழும்பில் சிவபதமெய்தினார். அன்னாரின் மறைவினால் ஏற்பட்ட துயரத்தில் எம்முடன் நேரிலும் தொலைபேசி, தபால் மூலம் எமக்கு ஆறுதல் பகன்றவர்களுக்கும், ஆதரவுதந்து அரவணைத்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டவர்களுக்கும் மற்றும் சுகவீனமுற்ற காலத்தில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆன்மசாந்திக்காக 18.12.98இல் அந்தியெட்டி கிரியைகளும், 19.12.1998 அன்று வீட்டுக்கிருத்திய கிரியைகளும் மதிய போசனமும் நடைபெறும் என்பதனையும் அறியத்தருகின்றோம். C-21/1/2, சொய்சாபுர, மொறட்டுவ.

தலைவனின் பிரிவால் துயருறும், அன்பு மனைவி-கமலாதேவி
பிள்ளைகள்- யோகச் சந்திரன் (ஜேர்மனி), ஜெகன் மோகன் (ஜேர்மனி), கலைச் செல்வன்(கனடா), கலைச் செல்வி (கொழும்பு).
மருமகன்- சந்திரகுமார்-(கொழும்பு)


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

**வ**ன்னிச் சமரில் மூன்றாவது முனை டிசம்பர் மூன்றாம் திகதி திறக்கப்பட்டுள்ளது.

'ரிவிபல' நடவடிக்கை மூலம் படையினர் சென்றடைந்து நிலைகொண்டுள்ள ஒட்டி சுட்டான்தான் அந்த மூன்றாம் முனை.

இந்த மூன்றாம் முனையை திறந்திருப்பது மூலம் படையினர் தமது தற்காப்பு வேலிகளை அகலப்படுத்தி உள்ளனர்.

மாங்குளத்தில் இருந்து கிழக்காக ஒட்டுசுட்டான் வரை நீள அரங்காக இராணுவ வேலி போட்டு நிற்கின்றனர்.

இதனால் முல்லைத்தீவில் இருந்து புலிகளின் அணிகள் மாங்குளத்தின் கிழக்கு பக்கத்தால் ஓமந்தைவரை ஊடுருவிச் செல்வதை தடுக்கலாம் என்பதும் படையினரின் உத்தி.

அதுதவிர கிளிநொச்சியில் நிலை கொண்ட படையினர்மீது புலிகள் தொடுத்த பாரிய தாக்குதல் போல மாங்குளம் பகுதியிலும் பலமுனைத் தாக்குதல் ஒன்றை புலிகள் தொடுக்கலாம் என்றும் எதிர்பார்க்கின்றனர்.

மாங்குளத்தின் கிழக்குப் புறமாக உள்ளது முல்லைத்தீவு. அங்கிருந்து புலியணிகள் வந்து தங்கியிருந்து தருணம் பார்த்து பாயக்கூடிய பகுதியாக ஒட்டிசுட்டான் இருக்கலாம் என்றும் சந்தேகம். ஆகவே மாங்குளத்தின் கிழக்கு முனையை அகட்டி, தற்காப்பு மறிப்பு வேலியை போடுவதற்காக ஒட்டிசுட்டானையும் தம் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர்.

ஆக, தற்காப்பு யுத்தம் ஒன்றில் நீண்ட காலம் ஈடுபடத்தக்க வியூகம் ஒன்றையே படையினர் தற்போது வகுத்துள்ளனர். முன்னேறும் தாக்குதல் யுத்தம் ஒன்றுக்கு உடனடியாக தயாராக இல்லை என்று தெரிகிறது.

தாக்குதல் யுத்தக் கட்டத்தில் இருந்து அழித்தொழிப்பு கட்டத்திற்கு சென்றால் யுத்தம் தீர்க்கமான கட்டத்தில் இருக்கிறது என்று அர்த்தம்.

தாக்குதல் யுத்தத்தில் இருந்து தற்காப்பு யுத்தத்திற்கு திரும்புவது என்பது அத்தரப்பு பின்னடைவில் உள்ளது என்பதையே குறிக்கும்.

எனினும் எந்தவொரு சமரிலும் தற்காப்பு, தாக்குதல், அழித்தொழிப்பு ஆகிய மூன்று கட்டங்களும் சுழற்சி முறைபோல மாறி மாறி வந்துகொண்டேயிருக்கும்.

ஆயினும் படையினரால் பாரிய தாக்குதல் யுத்தம் ஒன்றுக்கு தயாராக முடியுமா? அல்லது தற்காப்புடனேயே படைகள் வன்னிக்குள் முடங்கி இருக்கப்போகின்றனவா? என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

அரசும், படை உயர் மட்டமும் எதிர்பார்க்கும் அளவுக்கு படையின் போர் ஆற்றலை குறிப்பிட்ட காலவரையறைக்குள் உயர்த்த முடியாது.

அவ்வாறு உயர்த்தாமல் மாங்குளத்தில் இருந்து நெடுஞ்சாலை வழியாக பரந்தன் நோக்கி மேற்கொண்டு நகரவும் முடியாது.

போர்த்திறனை உயர்த்துதல் என்பது மூன்றுவகைப்படும்.

1) ஆட்பலத்தை உயர்த்தல்

2) ஆயுத பலத்தை மேம்படுத்தல்

3) பயிற்சிகளையும் புதிய உத்திகளையும் வழங்குதல்.

இவற்றில் ஆயுத தளபாட எண்ணிக்கைகளை அதிகமாக்கும் காரியம் ஒன்றையே அரசால் சுலபமாக செய்ய முடியும்.

ஆட்பலம் புதிதாக சேர்ந்தால்தான் பயிற்சிகள் வழங்கமுடியும். ஆட்பலம் புதிதாக சேருவது என்பது கடினமான காரியம்.

ஆயுத பலத்தை மேம்படுத்தும் வேலைகள் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டன.

விமானப்படையின் பாவனைக்கு பிரிட்டிஷ் விமானப்படையிடமிருந்து மூன்று ஹேர்குலஸ் சி-130 ரக விமானங்கள் வாங்குவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

இந்த விமானம் ஒவ்வொன்றினதும் பெறுமதி ஒரு கோடியே 25 இலட்சம் அமெரிக்க டொலர்கள். நம் நாட்டு நாணய மதிப்புப்படி பார்த்தால் சுமாராக தலா 85 கோடி ரூபாய்கள். மொத்தம் 255 கோடி ரூபாய்களுக்கு விமானம் வாங்கப்போகிறார்கள்.

இவ் விமானங்கள் படையினரையும், ஆயுத தளபாடங்களையும் தமது வயிற்றுக்குள் சுமந்து செல்வதற்கானவை.

ஹேர்குலஸ் விமானங்களது வயிற்றுப்பகுதி ஏனைய விமானங்களைவிட பெரியதாக இருப்பதால், இதனுள் கவசவாகனங்கள் உட்பட அதிகளவான ஆயுத தளபாடங்களையும், படையினரையும் சுமந்து செல்வது இலகு. அதுதான் இந்த விலைகொடுத்து அரசு வாங்குகிறது. இதனை ஓட்டுவதற்கு விமானமோட்டிகளுக்கு பயிற்சியும் கொடுக்க வேண்டும். எனவே இந்த விமானம் வரவும், பறக்கவும் சில மாதங்கள் தேவைப்படும்.

கடற்படையினருக்கும் ஹுவர்கிராஃப்ட் என்னும் வாகனம் ஒன்று தருவிக்கப்பட்டுள்ளது. இது தரையிலும் நீரிலும் வேகமாக செல்லக்கூடியது. ஒன்றில் இரண்டு உபயோகம்.

மேலும் நவீன ஆயுத தளபாடங்களும் வந்திறங்க உள்ளன. பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட நிதி ஆயுதங்களாக, குண்டுகளாக, விமானங்களாக மாற்றப்படும்.

ஆனால் இத்தகைய நவீன ஆயுதங்கள் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தப் போவதில்லை.

ஆளில்லாத உளவு விமானம், மோட்டார்களை கண்டுபிடிக்கும் கருவிகள் பற்றியெல்லாம் படையினரும், பத்திரிகைகளும் முன்பு கதை கதையாக கூறியது நினைவிருக்கலாம். அவற்றால் வன்னிப் போர் முனையில் பெரும் சாதகம் கிட்டப்போவதில்லை என்று முரசு திட்டவட்டமாக கூறியதும் நினைவிருக்கலாம்.

ஆளில்லாத விமானத்தால் புலிகளது விமான ஓடுபாதையைக்கூட கண்டுபிடிக்க இயலவில்லை.

எனவே, குறிப்பிட்ட காலவரையறைக்குள் படை பலத்தையும், போர் ஆற்றலையும் பெருப்பித்து வன்னியில் படை நடவடிக்கைகளை தொடரலாம் என்ற திட்டம் பெரியளவுக்கு நிறைவேறக்கூடியதல்ல.

எனவே, படைத்தரப்புக்கு இரண்டே இரண்டு வழிகள்தான் உள்ளன.

ஒன்று: வவுனியா யாழ் சாலையை முழுதாக கைப்பற்றி தரைவிநியோகப்பாதையை திறக்கும் இராணுவத் திட்டத்தை கைவிடவேண்டும்.

இரண்டாவது வழி; தற்போதுள்ள படை பலத்தோடு மேற்கொண்டு முன்னேற முயற்சிக்க வேண்டும்.

ஆனால் இதில் எந்தவொரு முடிவையும் உடனடியாக எடுக்க இயலாத நிலையில் உள்ளனர் படையினர்.

தரைவிநியோகப்பாதை திறக்கும் நடவடிக்கையை கைவிட்டு படைகளை வாபஸ் பெற்றால் தெற்கில் அரசின் இமேஜ் சரியும்.

# தொடக்கமா? முடக்கமா?



கிட்டு பீரங்கிப் படையணிக்குள்தான் ஆட்டிலெறிகளும் இடம்பெறுகின்றன. ஜயசிக்குறுய் ஆரம்பமானபோது புலிகளிடம் வன்னியில் இருந்தவை இரண்டு ஆட்டிலெறிகள். தற்போது....? இதில் மட்டும் ஐந்து உள்ளனவே.

# அகலக்கால் வைக்க அனுமதிக்கும் புலிகள்

மேலும் முன்னேற முயன்று அகலக்கால் வைத்து புலிகளின் பொறிக்குள் விழுந்தால் அரசின் இமேஜ், படையின் இமேஜ் இரண்டும் சேர்ந்தே சரிந்துவிடும்.

காலை முன்னே வைக்கவோ, பின்னே வைக்கவோ முடியாத நிலையில்தான் பக்கவாட்டுப் பக்கமாக கிழக்கே ஒட்டிசுட்டானை நோக்கி தாக்கிவைத்தனர்.

எனவே, 'ஜயசிக்குறுய்' படையினர் தற்போது பெயர் மாற்றங்களுடன் மாபெரும் முடக்கமடைந்துள்ளனர்.

75 கிலோமீட்டர் யாழ்-வவுனியா சாலையை கைப்பற்றவும், புலிகளை அவர்களது தளப் பிரதேசத்தை கூறுபோட்டு முற்றுகையிடவும் முன்னேறிய படையினர், இப்போது தம்மைத் தாமே சுற்றி இராணுவ வேலியமைத்து முடங்கி நிற்கின்றனர்.

'ஜயசிக்குறுய்' மூன்று பிரதான நோக்கங்களுடன் ஆரம்பமானது.

1) யாழ குடாநாட்டு படையினருக்கான இராணுவ தரை விநியோகப் பாதையைத்திறப்பது.

2) புலிகளின் தளப் பகுதியை இரண்டாக பிளந்து முல்லைத்தீவை முற்றுகையிடுவது.

3) புலிகளை சண்டைக்கிழுத்து பலத்தை கணிசமானளவு அழிப்பது.

சுருக்கமாக சொல்வதானால் விடுதலைப் புலிகளின் முதுகெலும்பை முறித்து, இரத்த ஓட்டத்தை நிறுத்தி அவர்களை சிறு குழுவாக்கி சமரசம் செய்ய வைப்பது. அல்லது அழித்துவிடுவது, அதன் பின்பு இராணுவ மேலாதிக்கத்தின் கீழ தீர்வொன்றை திணிப்பது என்ற அரசியல், இராணுவ இலக்குகளுடன் ஆரம்பமான பாரிய படை நடவடிக்கையே 'ஜயசிக்குறுய்'.

ஆனால் நடந்தது நேர்மாறானது.

1) புலிகள் தமது மரபுப் படை பலத்தை ஜயசிக்குறுய்' படையினரின் ஆயுத தள பாடங்கள் மூலம் பெருப்பித்தனர். யாழில் பின்ன டைவால் ஏற்பட்ட சோர்வை போக்கி உக்கிரம் பெற்றனர்.

2) ஒன்றரை வருடமாக தரைப்பாதையை திறக்க முடியவில்லை. முற்றுகையிட்டு புலிகளை முடக்கவும் இயலவில்லை.

3) படைத் தரப்பின் ஆட்பலமே பெருமளவு சரிந்தது. அதனால் தாக்குதல் யுத்தத்தை நிறுத்தி தற்காப்பு நிலைக்கு திரும்ப வேண்டியதாகியது.

4) புலிகளது அரசியல், இராணுவ பலத்தை உலகறியச் செய்து, புலிகளுடன் பேசித்தான் தீர்வைக் காண முடியும் என்று சர்வதேச சமூகம் கூறுமளவுக்கு களம் அமைத்து கொடுத்ததும் 'ஜயசிக்குறுய்'தான்.

தடியால் அடித்து இரும்பால் பதிலடி வாங்கிய தந்திரோபாயமாக மாறிவிட்டது 'ஜயசிக்குறுய்'.

கடந்த ஒன்றரை ஆண்டில் 'ஜயசிக்குறுய்' இலக்குகள் ஒவ்வொன்றாக கைவிடப்பட்டு வந்தன.

புலிகளை அழித்து, தளத்தை முற்றுகையிடுவது என்பதையெல்லாம் கைவிட்டு, எப்படியாவது தரைப்பாதையை திறந்து முடித்தாலே போதும் என்று நினைத்தது அரசு.

பின்னர் தரைப்பாதையை பாவனைக்கு வைத்திருக்க புலிகள் விடமாட்டார்கள் என்றாலும் பரவாயில்லை, கிளிநொச்சிவரை படை போய்ச் சேர்ந்தது என்று காட்டினாலே போதும் என்று மும்முரமாக முயன்றனர்.

போய்ச்சேர தீர்மானித்த இலக்கையே புலிகள் ஓயாத அலைகள் மூலம் தட்டிப் பறித்ததுடன், அந்த இலக்கும் கைக்கெட்டாமல் போனது. இறுதியில் 'ஜயசிக்குறுய்'யின் இலக்கு ஓமந்தை, புளியங்குளம், மாங்குளம் ஆகியவற்றை பிடிப்பதுதான் என்று முன்னைய இலக்கில் பாதியை குறிப்பிட்டுவிட்டு முடித்து வைத்தனர்.

தற்போது இலங்கைப் படையினரின் பெருமளவான படையணிகள் வன்னிக்குள் நிலை கொண்டுள்ளன. முடங்கி நிற்கின்றன. இவற்றின் உடனடி இலக்குகள் எவை?

1) புலிகளின் தாக்குதலில் இருந்து தற்காப்பு.

2) வன்னிச் சமர் ஓயவில்லை என்றும், புலிகள் தினமும் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றும் தெற்கில் காண்பிக்க வசதியாக தினமும் 'ஸ்கோர்' அனுப்புவது.

எந்த நடவடிக்கையும் இல்லாமல் பெருமளவான படையினரை அரசு முடக்கி வைத்திருப்பது புலிகளுக்கு சாதகம்.

படையினர் தம்மை பலப்படுத்த எடுத் துக் கொள்ளும் கால அவகாசத்தில் புலிகளும் தம்மை பலப்படுத்திக் கொள்வர்.

படையினரைவிட புலிகளில் புதியவர்கள் சேருவதுதான் அதிகம். எனவே படையினர் அடுத்த நடவடிக்கைக்கு தயாராக முன்னரே புலிகளது புதிய அணிகள் சண்டைக்கு தயாராகிவிடும்.

இன்னொன்று, படையினர் தமது இஷ்டப்படி தயாராகும்வரை புலிகள் பார்த்துக் கொண்டிருக்கமாட்டார்கள். இப்போதே வேவு நடவடிக்கைகள் தொடங்கிவிட்டன. தமக்கு சாதகமான பலவீனமான முனையறிந்து பாரிய பாய்ச்சல் ஒன்றை புலிகள் நடத்தலாம்.

அதுமட்டுமன்றி தமது சண்டை அணிகளை யாழ் குடாநாடு போன்ற பகுதிகளுக்குள் அனுப்பி தாக்குதல் நடத்தவும் வன்னியில் படையினரின் முடக்கம் புலிகளுக்கு உதவும்.

ஒட்டிசுட்டானை படையினர் சென்றடைய புலிகள் தடுக்கவில்லை. சண்டையிடவில்லை. அதற்கு காரணம் இல்லாமலில்லை.

இதுவரை மாங்குளம் முனையும், பரந்தன் முனையுமே வன்னிச் சமரில் இரு சண்டை முனைகளாக இருந்தன. இப்போது ஒட்டிசுட்டானும் சேர்ந்துள்ளது. மூன்று முனை திறக்கப்படுவதால், படையினரின் பலமும் மூன்று திக்கில் பரவலாக வேண்டியிருக்கிறது.

மாங்குளத்தில் இருந்து கிழக்கே உள்ள ஒட்டிசுட்டான்வரை உள்ள தூரம் 25 கிலோ மீட்டர். வவுனியா, யாழ் சாலையில் பக்கவாட்டாக 25 கிலோ மீட்டர் தூரம் படையினர் அகன்று நிலை கொண்டிருப்பதால் கணிசமான படைபலம் அதில் போய்விடுகிறது. எனவே பரந்தன் நோக்கி முன்னேறுவதற்கான படைபலம் பற்றாக்குறையாகிறது.

வவுனியா யாழ் சாலையில் மாங்குளம் வரை கிட்டத்தட்ட 45 கிலோமீட்டர் தூரம் வரை படையினர் நிலை கொண்டுள்ளனர். இந்தப் பகுதியில் நேராக அல்லாமல் உற்பாதைகளால் சுற்றிச் சுற்றியே படையினர் முன்னேறினர். அகன்று நிலைகொண்டனர்.

அகன்று நிலை கொள்வதை புலிகளும் அனுமதித்தனர். அதற்கான அவசியத்தை ஏற்படுத்தும் தாக்குதல்கள் நடத்தினர். ஏனெனில் படைபலத்தின் அடர்த்தியை குறைப்பதற்கான உத்தியே அதுவாகும்.

தற்போது மாங்குளம் பகுதியில் கிழக்காக ஒட்டிசுட்டான்வரை இருபத்தைந்து கிலோ மீட்டர் பரப்பில் படையினர் நிலை கொண்டிருப்பதும் இராணுவரீதியில் புலிகளுக்கு சாதகமே.

ஒட்டிசுட்டானில் உள்ள படையினருக்கு புலிகள் மோட்டார் தாக்குதல் நடத்துவது சுலபம். தமது ஆட்டிலெறிகளை நகர்த்தி வந்தும் புலிகள் ஷெல் மழை பொழியலாம்.

அப்படியிருந்தும் படையினர் ஒட்டிசுட்டானை நோக்கி முன்னேறும்போது புலிகள் அடையாளத்தாக்குதல்தான் நடத்தினர் என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயம். தந்திரோபாயம் கருதி பின்நகர்ந்து படையினர் நிலைகொள்ள அனுமதித்துள்ளனர்.

படையினர் அகன்று நிலைகொள்ளும் போது புலியணிகளும் அகன்று நிலை கொள்ள வேண்டியிருக்குமே என்று கேள்வி எழலாம்.

அந்த அவசியம் இல்லை. படையினர் முன்னேறுவதாக தெரிந்தால் அந்த முனையில் உள்ள காவலரணில் உள்ள புலிகள் தலைமைக்கு தகவல் கொடுப்பர். உதவும் அணிகள் அந்த முனை நோக்கி விரைந்து செல்லும். எனவே சகல முனைகளிலும் தமது அணிகளை பெருவாரியாக நிறுத்தும் அவசியம் படையினருக்கு உள்ளதுபோல, புலிகளுக்கு இருக்காது.

எனவே, படையினரின் புதிய முனை திறப்புக்களும், முன்னரங்க அரண்கள் அகன்று விரிவதும் படையினர் தமது முன்னைய இலக்கை விட்டு விலகிப் போய்க் கொண்டிருக்கின்றனர் என்பதன் அடையாளமாகும்.

ஒட்டிசுட்டானில் இருந்து மேலும் தமது பிரதான தளமான முல்லைத்தீவுக்கு ஆபத்தோ என்று புலிகள் அஞ்சப் போவதில்லை.

ஏனெனில், ஒட்டிசுட்டானில் இருந்து தொடர்ந்து படையினர் முன்னே எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும் புலிகளின் குகைக்குள் காலடி எடுத்துவைப்பது போன்றதே.

மாங்குளப் பகுதியில் இருந்து பரந்தன் நோக்கி முன்னேறுவதைவிட அது ஆபத்தான நகர்வாக இருக்கும்.

எனவே, 'ரிவிபல' நடவடிக்கையுடன் பெரும் முடக்கம் ஒன்றுக்குள் படையினர் சென்றுள்ளனர். அரசின் சண்டைப் படையணிகளில் பாதிக்கு மேற்பட்டவையும் இராணுவ தளபாடங் களில் முக்கால் வீதமும் இந்த முடக்கத்திற்குள் அடக்கம்.

எனினும் அரசின் நலன்கள் காரணமாக கைக்கு எட்டாத இலக்குகளுடன் மேலும் குறிப்பிட்ட காலத்திற்கு வன்னிச்சமர் தொடரும்.

நாரதர்

# அதிரடி அய்யாத்துரை



***நம் நாட்டு தமிழ்க் கட்சிகள்*** தென்னாபிரிக்க தூதுக்குழுவை போட்டி போட்டு சந்தித்தன. தாம் கொள்கை விளக்கம் கொட்டியதாகவும் கூறினவன்றோ? ஒவ்வொருத்தரும் ஒருத்தரை ஒருத்தர் காலை வாரிவிட்டிருப்பினம் போலகிடக்கு! அதுதான் வாழ்க்கை வெறுத்துப்போன தூதுக் குழுவினர், 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்று திரும்பத் திரும்ப சொல்லியிருக்கினம். ஆக, தங்கள் பொட்டுக்கேடுகளைக் காட்டியதால் சந்திக்க வந்தவையே இவையைச் சிந்திக்க வைக்க வேண்டியதாய்போச்சது.

***தென்னாபிரிக்க தூதுக்குழுவில்*** வந்த எம்.பி. ஒருவர் கூறிய மணிமொழிகள் என்ன தெரியுமோ? இங்குள்ள தமிழ்க் கட்சிகளுக்கு அரசியல் கம்பீரம்-ஆளுமை கிடையாதாம். அரசுக்கு தகுந்தமாதிரி போகிறார்களாம். தம்மைச் சந்தித்த பொதுவான தரப்பினர் கூறிய கருத்துக்களில் இருந்த ஆழமும், தெளிவான பார்வையும்கூட தமிழ்க் கட்சித் தலைவர்களிடம் காணப்படவில்லையாம். மிகுந்த சலிப்போடும், கவலையோடும் யாழ்ப்பாணத்தில் ஒரு முக்கியமானவரிடம் மேற்கண்டவாறு கூறினார்களாம்.

***வவுனியா நகரில்*** உள்ள ஆன்மீக நிலையம் ஒன்றில் ஒழுக்கக் கேடுகள் கொடிகட்டிப் பறக்குதாம். இந்தியாவில் உள்ள பிரபலமான சாமியாரின் பெயரில் இயங்கும் இந்த நிறுவனத்தின் வவுனியா தலைவர் பஜனைக்குவரும் இளம் ஆண்களுடன் முறைகேடாக நடக்கிறாராம். இந்தத் தலைவருக்கு வவுனியாவில் உள்ள தமிழ்க் கட்சிகளின் உதவியும் உண்டாம். அவர்களில் சிலரும் பக்தர்களாம். இந்த விவகாரம் தொடர்பாக கொழும்பில் உள்ள தலைமைப் பீடத்திற்கு இளைஞர்கள் அறிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லையாம். காரணம்: எல்லோருக்கும் மடியிலே கனமோ? மேலும் தகவல்கள் விரைவில் வெளியாகும்!

***தேனகத்தில் ரெண்டு எழுத்து*** தலைவரின் பெயர் தனக்கும் இருப்பதைக் கூறியே ஊரைச் சுருட்டி உலையில் போடுபவர் அந்தப் பிரதிநிதி. ஊர் நிலத்தில் கட்டியிருந்த அவரது கட்டடங்கள் சமீபத்தில் புல்டோசரால் இடித்து தரை மட்டமாக்கப்பட்டன. தமிழ்க் கட்சி ஒன்றின் உதவியோடு தடுக்கப்பார்த்தாராம். அக் கட்சியினர் உதவ மறுத்துவிட்டனராம். இந்த பிரதிநிதி அடுத்த தடவை வெகுஜனப் பிரதிநிதியாகப் போவதாகவும் கூறிவருகிறார். குட்டிப் பிரதிநிதியாக இருக்கும்போதே இந்த ஆட்டம் என்றால், வெகுஜன சபைக்கும் சென்றால் என்னாகும்? தேனக மக்களை அந்தளவு இளக்காரமாக நினைத்துப் போட்டாராக்கும்!

***தலையை வெட்டி*** கையில் வைத்தபடி போஸ் கொடுக்கும் படங்கள்-அலையில் அடிபட்டுப் போகாமல் ரெண்டு எழுத்தாரிடம் கிடைத்துள்ளன. புகைப்பட ஆல்பங்களில் இருந்து கண்டெடுத்தனராம். இப்படங்களில் ஒன்று முரசுக்கும் கிடைத்தது. வெளியிட தடை உண்டு- தணிக்கை உண்டு. பார்த்தாலே தலை சுற்றுகிறது. பயங்கரம்! எப்படித்தான் மனம் வந்ததோ? இப் புகைப்படங்களை தமது சர்வதேச கிளைகளுக்கும் அனுப்பி உள்ளனராம்.

***வெளிநாடுகளில்*** நம்மவர்களின் கடை நடத்தும் போட்டி சொல்லி வேலையில்லை என்றார் கனடாவில் இருந்து வந்த நண்பர் ஒருவர். ஒருவர் போட்ட கடையில் நல்ல வியாபாரம் என்றால் அதற்குப் பக்கத்திலேயே இன்னொரு கடையை திறப்பாராம் இன்னொரு நம்மவர். போட்டியாக விலையைக் குறைத்தும் விற்பாராம். இறுதியில் இரண்டுபேருமே கடையை இழுத்து மூடவேண்டியதுதான். கனடாவில் தான் இந்தக் கடை நடத்தும் போட்டி சிறப்பாக நடந்து வருகிறதாம். சோழன் படை நடத்தினான். இலங்கைத் தமிழன் திக்கெட்டும் கடை நடத்துகிறான். அதிலும் ஏன் தமக்குள்ளே மோதுகிறான்? எல்லாம் தொட்டில் பழக்கம்தான்!

***இந்தவார பொன்மொழி:***

**"சில நேரங்களில்
புத்தி
வெற்றி பெறுகிறது.
பல நேரங்களில்
வெற்றியே
புத்தியாகிவிடுகிறது!"**



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை




# மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இலண்டனில் பேச்சு!

விடுதலைப் புலிகள் நிபந்தனை இல்லாத சமாதானப் பேச்சுக்கு தாம் தயாராக உள்ளனர் என்று அறிவித்தனர். இதனால் பிரேமதாசா அரசுக்கு இராஜதந்திர ரீதியாக சில சங்கடங்கள் ஏற்பட்டன.

இலண்டனில் புலிகளின் சர்வதேச செயலகப் பொறுப்பாளர் கிட்டுவுடன் பிரிட்டிஷ் தூதர் சேபால ஆட்டிக்கல தொடர்பு கொண்டனர்.

சேபால ஆட்டிக்கல ஜே.ஆர். ஜனாதிபதியாக இருந்தபோது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் இருந்தவர்.

பிரேமதாசாவின் அனுமதியுடன்தான் சேபால ஆட்டிக்கல கிட்டுவுடன் பேச்சு நடத்தினார். ஆனாலும் உத்தியோகபூர்வ மற்ற முறையிலும், இரகசியமாகவுமே பேச்சுக்கள் நடத்த விரும்பினார்.

பேச்சுக்கள் என்பதைவிட பேச்சு ஒன்றுக்கான சூழலை உருவாக்கும் முன்னோடி நடவடிக்கை என்று கூறுவதே பொருத்தம்.

மூன்றாவது நாடு ஒன்றிலோ, அல்லது மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் முன்பாகவோ பேச்சு நடத்தத் தாம் தயாராக இருப்பதாக புலிகள் சார்பாக சேபால ஆட்டிக்கலவுக்கு தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் இரகசியமாக வைக்கப்பட்ட போதும் புலிகள் இரகசியமாக வைத்திருக்க விரும்பவில்லை.

இலங்கை அரசுடன் இரகசியமாக பேச்சுக்கள் வைத்துக் கொள்வதை பிரபாகரன் ஒரு போதும் விரும்பியது கிடையாது.

சிங்கள அரசுகளுடன் நாம் பேச்சு நடத்துவது அவர்களை நம்பியல்ல. நாம் சமாதானத்திற்கு எதிரிகளல்ல, அவர்கள் தான் எதிரிகள் என்பதை உலகின் முன்பாக எடுத்துக் காட்டுவதற்கே என்பதுதான் பிரபாகரனின் கொள்கை.

எனவே, பேச்சுக்களை பகிரங்கமாக நடத்துவதே அவரது விருப்பமாக இருந்திருக்கிறது. இதனை அறியாதவர்கள்தான் பிரேமதாசாவும் பிரபாகரனும் இரகசியமாக தொடர்பு வைத்திருக்கின்றனர் என்றும், இரகசியமாக பேச்சுக்கள் நடப்பதாகவும் அன்று கூறினர். இரகசிய பேச்சுக்கள் பற்றிய புரளிகள் கிளப்பினர்.

இலங்கை அரசுக்கு கூறியது என்னவென்பதை புலிகளின் அன்றைய பிரான்ஸ் பிரதிநிதி லோரன்ஸ் திலகர் பகிரங்கமாக அறிவித்தார்.

"ஐரோப்பிய நாடொன்றின் தலைநகரில் நேரடி சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வரும்படி ஸ்ரீலங்கா அரசுக்கு அழைப்பு விடுத்துள்ளோம்.

எவ்வித முன் நிபந்தனையும் இல்லாமல், கூட்டான ஐரோப்பிய நாடுகளின் அல்லது ஐரோப்பிய நாடு ஒன்றின் மத்தியஸ்தத்தின்கீழ் விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா அரசாங்கத்துடன் பேசத் தயாராக உள்ளனர்.

மீண்டும் போர் ஆரம்பித்து, கடந்த ஒருவருட காலமாக ஸ்ரீலங்கா அரசாங்கம் விடுதலைப் போராட்டத்தை இராணுவ நடவடிக்கை மூலம் நசுக்க முயன்றது. அதில் தோல்வியே கண்டுள்ளது.

எப்போதுமே நிறைவேற முடியாத இம் முயற்சியைக் கைவிட்டு சமாதான வழி மூலம் பிரச்சனையைத் தீர்க்க இன்னொரு சந்தர்ப்பம் கொடுத்துள்ளோம். எமது அழைப்பின் அர்த்தம் அதுதான்" என்று லோரன்ஸ் திலகர் கூறினார்.

## பிரிட்டன் தயார்

இந்த அழைப்பை புலிகள் ஏனோ தானோவென்று விடுக்கவில்லை. மத்தியஸ்தம் செய்ய சில ஐரோப்பிய நாடுகள் தயாராக இருப்பதை அறிந்த பின்னரே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றி புலிகள் கூறினார்கள்.

முக்கியமாக பிரிட்டிஷ் அரசின் முக்கியமான இராஜதந்திரிகளோடு கிட்டுவும், புலிகளின் முக்கியஸ்தர்களும் பேச்சு நடத்தினார்கள்.

வேறு சில ஐரோப்பிய நாடுகளுடனும் பேச்சு நடத்தினார்கள்.

பிரிட்டன் அரசு பச்சைக் கொடி காட்டியது. இலண்டனிலேயே பேச்சை வைத்துக் கொள்ளலாம். நாம் மத்தியஸ்தம் வகிக்கிறோம் என்று கூறிவிட்டது.


கிட்டு

அதனால்தான் ஐரோப்பிய நாடொன்றின் தலைநகரில் பேச்சு நடத்தலாம் என்று புலிகள் அறிவித்தனர். ஆனால் எந்தநாடு என்பதை அவர்கள் தாமாகக் கூறவில்லை.

இதேவேளை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இலங்கை இனப்பிரச்சனை பற்றி பேசப்பட்டதுடன், இலங்கை அரசு விரும்பினால் மத்தியஸ்தம் செய்யத் தயார் என்று பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பாக அறிவிக்கப்பட்டது.

## சாதனை

இந்த இடத்தில் முக்கிய விடயத்தை சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும்.

இலங்கைத் தமிழர் பிரச்சனையை உலகின் முன்வைத்து, ஆதரவை தேடுவதும் தாம் பாராளுமன்றம் செல்வதின் நோக்கங்களில் ஒன்று என்று கூட்டணியினர் கூறினர்.

அன்றைய தலைவரான அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார். உலக அனுதாபத்தை திரட்டி தமிழீழக் கோரிக்கையை வென்றெடுக்கவே எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்பதாக அறிவித்தார்.

அதன்படி அமிர் உட்பட பல கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் உலகின் பல நாடுகளுக்கு சென்று வந்தனர்.

ஆயினும் இலங்கைத் தமிழர் பிரச்சனையை சர்வதேசப் பிரச்சனைகளில் ஒன்றாக கருதுவதற்கு எந்தவொரு நாடும் முன்வரவில்லை. மத்தியஸ்தம் பற்றிய பேச்சும் எழவேயில்லை.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருந்தும்கூட அக்கட்சியின் கருத்தை உலகம் செவிசாய்க்கவில்லை. தமிழீழக் கோரிக்கைக்கு தமிழ் மக்கள் தேர்தல் மூலம் வழங்கிய ஆணையையும் எவரும் பெரிதாக மதிக்கவில்லை.

1977இல் கூட்டணியினரால் செய்யமுடியாததை 1990இல் புலிகளின் பிரதிநிதியாக கிட்டு பிரிட்டனில் செய்து முடித்தார்.

அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தால் முடியாததை ஆயுதம் ஏந்திய அரசியல் இராணுவ அமைப்பின் பிரதிநிதியான சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) சாதிக்க முடிந்தது.

ஆயுதப் போராட்டம் ஏற்படுத்திய அதிர்வலைகள்தான் உலகின் கவனத்தை இலங்கைத் தமிழரின் இனப்பிரச்சனை நோக்கி திருப்பியது.

## பிரேமா அறிவிப்பு

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் முன்பாக பேசத் தயார் என்று புலிகள் கூறியதையடுத்து, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு சில நாடுகள் தயாராக இருப்பதும் தெரியவந்தது.

ஆனால் இலங்கை அரசு அதற்கு தயாராக இருக்கவில்லை.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வருமானால், சிறீலங்கா சுதந்திரக் கட்சியை சொல்லி பூச்சாண்டி காட்ட முடியாது. இறுதியான தீர்வை கூறியாக வேண்டும். அதற்கு உடனடியாக பிரேமதாசா தயாராக இருக்கவில்லை.

ஆகவே, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றி எதுவும் குறிப்பிடாமல் பொதுப்படையாக ஒரு அறிவிப்பை வெளியிட்டார்.

"புலிகள் வன்முறையைக் கைவிடும் பிரகடனத்தை வெளியிட்டும். பேச்சுக்களை நடத்தலாம்" என்று கூறினார் பிரேமதாசா.

புலிகள் அரசை நம்பி ஆயுதங்களை கைவிட மாட்டார்கள் என்பதை பிரேமதாசா அறிவார். எனவே புலிகளால் உடன்பட முடியாத நிபந்தனையை வெளியிட்டார்.

இந்த நிபந்தனை தொடர்பாக புலிகளின் அன்றைய சர்வதேச செயலகப் பொறுப்பாளர் கிட்டு பின்வருமாறு கூறியிருந்தார்.

"சர்வதேசச் சட்டங்களின்படி ஆயுதம் ஏந்தும் உரிமை விடுதலைப் புலிகளுக்கு இருக்கிறது. அந்த உரிமையை சிறீலங்கா அரசு பறிக்க முடியாது.

சர்வதேச சட்டங்களின்படி ஆயுதப்படைகள் என்றால் என்ன? என்பதற்கு கொடுக்கப்பட்ட வரைவிலக்கணம் விடுதலைப் புலிகளுக்கும் பொருத்தமானது.

உள்நாட்டு யுத்தத்திற்கென சில விதிமுறைகள் உண்டு. ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டும். யுத்தத்தில் ஈடுபடும் அமைப்பிடம் கட்டுக்கோப்பான தலைமை இருக்க வேண்டும். ஆயுதங்களை ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகத் தாங்கிச் செல்வதுடன், பொது மக்களையும் அவர்களையும் பிரித்துக்காட்டக் கூடிய சீருடை அணிந்திருக்க வேண்டும்.

மோதல்கள் தொடர்ச்சியாக இருப்பதோடு, தேசத்தின் ஒருபகுதி அவர்களது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.

போர்முறைகளையும், போர்க் கைதிகளை பாதுகாக்கும் முறைகளையும், சுகவீனமுற்றோரையும், காயமடைந்தோரையும் பராமரிக்கும் முறைகளையும் செவ்வனே கடைப்பிடிப்பவர்களாக இருக்க வேண்டும்.

மேற்கண்ட விதிகளுக்கு அமைய விடுதலைப் புலிகள் அமைப்பு செயற்பட்டு வருவதால், ஆயுதம் ஏந்தும் அதன் உரிமையை பறிக்க முடியாது" என்று கிட்டு கூறினார்.

"பேச்சு ஆரம்பிக்கப்படுவதற்கான சாத்தியம் உண்டா?" என்ற கேள்விக்கு கிட்டு பதிலளிக்கும்போது, "அதற்கான சூழல் உருவாக்கப்படவில்லை" என்று கூறியிருந்தார்.

## புலிகள் நிர்வாகம்

தமது நிர்வாகத்தில் தென்னிந்திய சினிமா படங்கள், பாடல்கள் என்பவற்றுக்கு புலிகள் தடைவிதித்திருந்தனர்.

புலிகளின் எழுச்சிக் கீதங்கள் மட்டுமே யாழ் குடாநாட்டில் ஒலிபரப்பப்பட்டன. இதனால் அங்குள்ள சிறுவர்கள் முதல் அனைத்து தரப்பினருக்கும் அப்பாடல்கள் தலைகீழ் பாடம்

அப்போது நடைபெற்ற சுவாரசியமான ஒரு சம்பவம்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்கு வரும் பயணிகளை இராணுவத்தினர் வவுனியா தடை முகாமில் சோதனையிட்ட பின்னரே தொடர்ந்து பயணம் செய்ய அனுமதிப்பர்.

அப்படிச் சோதனையிட்டுக் கொண்டிருந்த போது ஐந்து வயதுக் குழந்தை ஒன்றிடம் பாட்டுப் பாடுமாறு கேட்டனர்.

அந்தக் குழந்தையும் மிக இயல்பாக, 'இந்த மண் எங்கள் சொந்த மண்...' என்ற பாடலை பாடத் தொடங்கிவிட்டது.

பெற்றோருக்கோ என்ன செய்வது என்றே தெரியவில்லை. இன்று தங்கள் கதி அதோகதி என்று நினைத்தனர்.

ஏதோ சினிமாப் பாடல்தான் என்று முதலில் நினைத்த இராணுவத்தினருக்கு பின்னர்தான் உண்மை விளங்கியது. அவர்களின் சிரிப்பு காணாமல் போய்விட்டது.

அதில் ஒரு சிப்பாய் குழந்தையின் பெற்றோரை திட்டிவிட்டு "உங்களுக்கு கொழும்பில் அலுவல் இல்லை. உங்கள சொந்த மண்ணுக்கே திரும்பிச் செல்லுங்கள்." என்று குழந்தையையும் பெற்றோரையும் திருப்பி அனுப்பினார்.

ஏதோ இந்த மட்டிலாவது விட்டார்களே என்று அவர்கள் திரும்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தை கேள்வியுற்ற பெற்றோர்கள் வவுனியாதடை முகாமுக்கு வருவதற்கு முன்னர் தங்கள் பிள்ளைகளுக்கு தனியாக ஒரு வகுப்பு நடத்திவிட்டுத்தான் அழைத்து வந்தனர்.

எந்தெந்த பாடல்களை பாடக்கூடாது என்பதுடன், தமக்கு தெரிந்த பழைய பாடல்கள் சிலவற்றைச் சொல்லிக் கொடுத்தவர்களும் இருக்கின்றனர்.

## அபராதம்

புலிகளின் நிர்வாகத்திலும் கிராம சேவகர்கள் போன்றோர் இலஞ்சம் வாங்கத் தவறவில்லை. மாட்டிக் கொண்டால் அவ்வளவுதான்.

அரியாலையைச் சேர்ந்த மு. ஐயாத்துரை என்னும் கிராமசேவகர் நற்சான்றுப் பத்திரங்கள் வழங்க ரூபா 100 முதல் 150வரை இலஞ்சம் வாங்கிவந்தார்.

கடவுச்சீட்டுப் பெறுவோரிடமும், வெளிநாடு செல்வோரிடமும் பணம் பெற்றுவந்தார்.

தகவல் புலிகளுக்குப் போனது. பொறி வைத்து ஆளை மடக்கிவிட்டனர். அபராதமும் விதித்தனர்.

அபராதம் எவ்வளவு தெரியுமா? 50 ஆயிரம் ரூபாய். அந்த அபராதப் பணம் வடக்கு-கிழக்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனையறிந்த சில இலஞ்சப் புகழ் கிராம சேவகர்கள் இலஞ்சம் வாங்குவதையே நிறுத்திவிட்டனர்.

*(தொடர்ந்து வரும்)*

# தென்னாபிரிக்காவில் புலிகளுக்கான ஆதரவு!

*'தென்னாபிரிக்காவில் புலிகளுக்கான ஆதரவை இல்லாமல் செய்கிறேன் பார்' என்று பறந்து போனார் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்.*

*அந்த முயற்சி பயன் தராமல் போனதால், அங்குள்ள பாராளுமன்ற தூதுக்குழுவை அழைத்து வந்தார்.*

*ஆனால் அந்த பாராளுமன்ற தூதுக்குழுவில் உள்ளவர்களுக்கு இலங்கைத் தமிழர் பிரச்சனை பற்றி அடிமுதல் நுனிவரை தெரியும்.*

*அந்தளவுக்கு தென்னாபிரிக்காவில் புலிகளும், அவர்களுக்கு சார்பான அமைப்புக்களும் பிரச்சனை பற்றி அக்குவேறு ஆணிவேறாக விளக்கியுள்ளன.*

*அதனால்தான் அரசின் அழைப்பின் பேரில் வந்த தூதுக்குழுவே தமிழ் மக்களுக்காக பரிந்து பேசியது.*

*தமிழ்க் கட்சிகள் புலிகள் பற்றி செய்த பிரசாரமும் எடுபடாமல் போனது. தமிழ்க் கட்சிகள் பற்றியும் ஏற்கனவே அவர்கள் விலாவாரியாக அறிந்து வைத்திருந்தனராம்.*

*தென்னாபிரிக்காவில் தமிழீழ ஆதரவாளர் அமைப்பு, சமாதானத்துக்கும் நீதிக்குமான திராவிடர்கள் போன்ற அமைப்புக்கள் உள்ளன. இவை முழுக்க முழுக்க இலங்கைத் தமிழருக்கு ஆதரவானவை.*

*இவை எத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதில்லை. தென்னாபிரிக்க சட்ட விதிகளின்படியே இயங்குகின்றன. எனவே இலங்கை அரசு ஒற்றைக்காலில் நின்று கோரிக்கை விடுத்தால்கூட அவற்றை தடைசெய்ய முடியாது.*

*தென்னாபிரிக்காவில் புலிகளின் முகாம்கள் இருக்கிறதா? யார் புலிகளை ஆதரிக்கிறார்கள் என்று தகவல் திரட்டி வருகின்றனர் சில சிங்களப் பத்திரிகையாளர்கள்.*

*றொஹான் குணரத்ன என்னும் சிங்களப் பத்திரிகையாளர் இந்திய சஞ்சிகையான ஃப்ரொண்ட்லைனுக்கு தென்னாபிரிக்காவில் புலிகள் பற்றி நீண்ட கட்டுரை ஒன்று எழுதியிருக்கிறார்.*

*அக் கட்டுரையில் தென்னாபிரிக்காவில் புலிகளதும், வேலுப்பிள்ளை பிரபாகரனதும் தீவிர விசுவாசிகளில் ஒருவரான டாக்டர் வீரபத்ரனும் அவரது ஆதரவாளர்களும் ஆயுதங்களுடன் நிற்கும் புகைப்படம் ஒன்றும் பிரசுரமாகியுள்ளது. அப்படமே இங்கு வெளியாகியுள்ளது.*

*டாக்டர் வீரபத்ரன் இந்திய வம்சாவளித் தமிழர். நீதிக்கும் சமாதானத்துக்குமான திராவிடர்கள்! என்ற அமைப்பின் தலைவரும் அவரே.*

*ஜனாதிபதி சந்திரிகா தென்னாபிரிக்கா சென்றபோது நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் முன்னின்றவர்களில் ஒருவர் வீரபத்ரன்.*

*வீரபத்ரனின் அலுவலக அறை சுவர் முழுக்க இலங்கைத் தமிழர் தொடர்பான புகைப்படங்கள்தான். இவர்கள் வைத்திருக்கும் துப்பாக்கிகள் தென்னாபிரிக்க அரசின் அனுமதி பெற்றவைதான்.*

*இப்படம் 1998 ஒக்டோபரில் எடுக்கப்பட்டது. தாம் புலிகளுக்கு ஆதரவானவர்கள் என்பதை அவர்கள் மறுக்கவில்லை. மறைக்கவும் இல்லை. ஆனால் சிங்களப் பத்திரிகையாளர்கள் சிலர் ஏதோ அங்குள்ள இரகசிய செயற்பாட்டை ஆய்வு செய்வது போல தகவல்கள் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர்.*

*படத்தில் வீரபத்திரனுடன் நிற்பவர்கள் (இடமிருந்து வலமாக) மார்க் ஜோசப், றெறன்ஸ் வீரபத்ரன், பான் கோவேந்தர், லியோன், ஹோல்ற்ஸ் காம்ப்ஃப்.* ◘



www.padippakam.com

அலசுவது- இராஜதந்திரி

# நெஞ்சை உலுக்கும் சோகங்கள்!

## இறுகிவரும் பொருளாதார முற்றுகை

நெஞ்சை உலுக்கும் சோகச் செய்திகள் வன்னியிலிருந்து வந்துகொண்டிருக்கின்றன.

கடந்த வாரத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் தீமூட்டிக் கொண்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

பிள்ளைகள் பட்டினியில் வாடுவதைக் காண அவரால் சகிக்க முடியவில்லை. எலும்பும் தோலுமாக பிள்ளைகள் உருக்குலைந்து நிற்பதைக் கண்டு உள்ளம் தாங்கவில்லை. இறுதியில் தற்கொலையை நாடியிருக்கிறார்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போன்றதே மேற்கண்ட சோகச் சம்பவமாகும். இது போன்ற பல சம்பவங்கள் வன்னியில் சகஜமாகி வருகின்றன.

ஆனால் ஆட்சியாளர்களோ இந்த அவலங்கள் குறித்து சிறிதும் கரிசனம் காட்டாதவர்களாகவே இருந்து வருகின்றனர்.

படையினரின் அபிப்பிராயத்தின்படியே வன்னிக்கு அனுப்பும் நிவாரணத்தின் அளவு தீர்மானிக்கப்படும் என்று ஜனாதிபதி சந்திரிக்கா தமிழ்க் கட்சித் தலைவர்களிடம் மிகத் தெளிவாக கூறியிருந்தார்.

அதன் பின்னரும், சில தமிழ்க் கட்சித் தலைவர்கள், நிவாரணம் அனுப்புவது பற்றி ஜனாதிபதி பரிசீலிக்க உள்ளதாக பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்திருந்தனர். குறிப்பிட்ட செய்திகள் வெளியாகி ஐந்து மாதங்கள் கடந்துவிட்டன.

நிவாரணவெட்டு தொடர்வது மட்டுமல்லாமல், மேலும் அவலங்களை உருவாக்கலும் இராணுவ முனைப்பும் தொடர்ந்து வருகிறது.

ஜனாதிபதியின் நேரடி பொறுப்பில் மேற்கொள்ளப்பட்ட 'ரிவிபல' நடவடிக்கையால் மேலும் பதினைந்தாயிரம் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

ஒட்டுசுட்டானில் தமது அன்றாட ஜீவனோபாயத்திற்கு விவசாயத்தை நம்பியிருந்த மக்கள், ரிவிபலவால் இடம்பெயர்ந்துள்ளனர். அதனால் அவர்களும் நிவாரணத்தை நம்பியே வாழ்க்கை நடத்த வேண்டியவர்களாகியுள்ளனர்.

வடமேல் மாகாண சபைக்கான தேர்தலுக்கு முன்னோட்டமாக மேற்கொள்ளப்பட்ட விளம்பர நடவடிக்கையே 'ரிவிபல'வாகும். 'ஜயசிக்குறுய்' பின்னடவை முடிமறைக்கும் இந்த விளம்பர நடவடிக்கைக்காக பதினைந்தாயிரம் தமிழ் மக்களை இடம்பெயர வைத்துள்ளனர் ஆட்சியாளர்கள்.

நிவாரண வெட்டை தளர்த்த மறுக்கும் அரசு, நிவாரணத்தை நம்பி வாழ்வோர் எண்ணிக்கையை அதிகரிக்கும் நடவடிக்கைகளையும் நிறுத்த முன்வரவில்லை.

வன்னியில் உள்ள-மக்கள் அனைவரையும் அலையவைத்தும், பட்டினி போட்டும் பணிய வைக்கும் போர் முறையாகவே இதனை நோக்க வேண்டியுள்ளது.

கடந்த நவம்பர் மாத இறுதியில் வன்னியில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் பொது மக்கள் பதினேழு பேர் பலியாகினர்.

இக் கோரச் சம்பவங்கள் செய்திகளாக வெளியாகியிருந்தும், அது தொடர்பாக ஆட்சியாளர்கள் எவ்வித வருத்தமும் தெரிவிக்கவில்லை.

கடந்த கால அரசுகள் ஒரு சம்பிரதாயத்துக்கு என்றாலும் இது போன்ற சம்பவங்களையிட்டு மறுப்போ, விளக்கமோ கூறிவந்தன. ஒரு பேச்சுக்காக என்றாலும், 'விசாரணை நடத்தப்படும்' என்று கூறவும் செய்தன.

இன்றைய ஆட்சியாளர்களோ தமிழ் மக்களின் உயிரிழப்புக்கள் தொடர்பாகவும், இலக்கு மாறிய தாக்குதல்கள் தொடர்பாகவும் வெகு அலட்சியமாக இருந்து வருவதையே அவதானிக்க முடிகிறது.

தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் அன்றாட அவலங்களையோ, அழிவுகளையோ பிடிவாதமாக காணமறுக்கும் போக்கு முன்பைவிட தற்போது மேலோங்கியுள்ளது.

அதேசமயம் வன்னி அவலங்கள் இங்குள்ள வெளிநாட்டு தூதரகங்கள், தொண்டர் நிறுவனங்கள் போன்றவற்றின் ஊடாக வெளியுலகின் காதுகளுக்கு எட்டாது தடுப்பதிலும் அக்கறை கொண்டுள்ளனர்.

"புலிகள் தடுத்தாலும், வன்னிக்கு உணவு அனுப்பப்படுவது தொடரும்" என்று பாதுகாப்பு அமைச்சு சில வாரங்களுக்கு முன்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

முழுப் பூசணிக்காயை ஒரு கோப்பை சோற்றுக்குள் மறைக்கும் முயற்சிபோன்றே அந்த அறிக்கை அமைந்திருந்தது.

புலிகளுக்கு நிவாரணம் செல்வதை தடுப்பதற்காகவே நிவாரணவெட்டு அமுலில் இருப்பதாக ஆட்சியாளர்கள் கூறிவருகின்றனர். பின்னர் நிவாரணம் செல்வதை புலிகள் தடுப்பதால்தான் அனுப்ப முடியாமல் உள்ளது போன்றும் அறிக்கை விடுக்கின்றனர்.

நிவாரண வெட்டு விடயத்தில் மட்டுமல்லாமல், பொதுவாக இனப்பிரச்சனை தொடர்பான விடயங்களிலும் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களையே இன்றைய ஆட்சியாளர்கள் வெளியிட்டு வருகின்றனர்.

எந்தவொரு பிரச்சனையிலும் சரியோ, தவறோ ஒரு நிலைப்பாடு, ஒரு கருத்து ஆட்சியளர்களுக்கு இருக்க வேண்டியது முக்கியமாகிறது.

பிரேமதாசா அரசு இனப்பிரச்சனை தீர்வுக்கு சர்வகட்சி மாநாடு நடத்தியது. தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஒற்றுமை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு இரண்டும் இருந்தால் அரசியல் தீர்வை காணலாம் என்று பிரேமதாசா கூறிவந்தார்.

காலத்தை இழுத்தடிக்கவே அதனை அவர் கூறியிருந்தாலும், ஆட்சிக்கு வந்ததில் இருந்து போகும்வரை அதனையே கூறிவந்தார்.

ஆனால் இன்றைய ஆட்சியாளர்கள் ஒவ்வொரு கட்டத்தில் ஒவ்வோர் கருத்தை கூறிவருகின்றனர்.

"ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் தீர்வுக்கு ஒத்துழைக்காது. அவர்கள் ஒத்துழைக்காவிட்டாலும் எம்மிடம் ஒரு திட்டம் இருக்கிறது. தீர்வை கொண்டு வந்தே தீருவோம்" என்று ஜனாதிபதி சந்திரிக்கா முதற்கொண்டு நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வரை பகிரங்கமாகவே தெரிவித்து வந்தனர்.

சர்வசன வாக்கெடுப்பை நடத்தப்போவதாகவும் சில ஆண்டுகளுக்கு முன்னர் ஆட்சியாளர்கள் கூறியிருந்தனர்.

தென்னிலங்கையில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டாம் என்றும், தேர்தல் நடத்தினால் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் கீரியும், பாம்புமாக மாறவேண்டி ஏற்படும் என்றும் தமிழ்க் கட்சிகளின் தூதுக்குழு சார்பாக கூட்டணித் தலைவர் முருகேசு சிவசிதம்பரம் அவர்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

ரணில் ஒருபோதும் அரசியல் தீர்வுக்கு ஆதரவளிக்கமாட்டார் என்பது தனக்குத் தெரியும் எனவும், ஐ.தே.கட்சி ஒத்துழைக்காவிட்டாலும் தீர்வை எப்படிக் கொண்டு வருவது என்று தனக்குத் தெரியும் எனவும் ஜனாதிபதி அந்த தூதுக்குழுவிடம் நேரில் தெரிவித்திருந்தார். 1997இல் தெற்கில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் முன்பாக இச்சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

ஆனால், சமீபகாலமாக ஜனாதிபதியும், நீதியமைச்சரும், ஏனைய முக்கிய அமைச்சர்களும் கூறிவரும் கருத்துக்கள் முன்னைய கருத்துக்களுக்கு முற்றிலும் மாறாக உள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைத்தால் மாத்திரமே இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண முடியும் என்று கூறத்தொடங்கியுள்ளனர்.

எனவே அரசியல் தீர்வு முதற்கொண்டு, அன்றாடப் பிரச்சனைகள் வரை முன்னுக்குப் பின் முரணான பேச்சுக்களால் பூசி மெழுகப் படுவதையே காணமுடிகிறது.

பிரச்சனைகளை தீர்ப்பதற்கு பதிலாக, அப்பிரச்சனைகளில் இருந்து தற்காலிகமாக தப்பிக் கொள்வதற்கும், வெளியுலகை திருப்தி செய்யவுமே ஆட்சியாளர்கள் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இராணுவத் தீர்வு காண்பதற்கான முனைப்பில் தமது சகல வளங்களையும் ஒன்று குவிப்பதை பேரினவாத சக்திகள் ஆதரித்து வருகின்றனர்.

அதேசமயம், இப்போரில் வடக்கு-கிழக்கு மக்களின் வளங்கள் அழிக்கப்படுவதையும் பேரினவாதிகள் விரும்பி நின்கின்றனர்.

பொருளாதார வளங்கள் மட்டுமன்றி, தாம் ஒரு தேசிய இனம் என்று வீறுகொண்டு எழுந்த உள வளமும் அழிக்கப்பட வேண்டும் என்பதே பேரினவாதிகளின் ஆசையாகியுள்ளது.

வன்னியில் நடைபெறும் பட்டினிக் கொடுமைகள், தற்கொலைகள், குடிமக்கள் மீதான தாக்குதல்கள் அனைத்தும் நியாயமானவை என்ற மனப்பாங்கே பேரினவாதிகளிடம் மேலோங்கியுள்ளது.

அதன் காரணமாகவே தெற்கின் சிங்கள, ஆங்கில வெகுஜன தொடர்பு சாதனங்கள் இந்த அவலங்கள் குறித்து வெளிப்படுத்துவதில்லை.

சாதாரண சிங்கள மக்கள் அப்பாவித் தமிழ்குடி மக்களின் அவலங்களை புரிந்து கொள்ளாதவாறு தடுக்கப்பட்டுள்ளனர்.

வியட்நாமில் அமெரிக்கப் படைகள் நடத்திய அட்டூழியங்களை அமெரிக்கப் பத்திரிகைகள் உடனுக்குடன் அம்பலமாக்கி வந்தன. புகைப்படங்களையும் வெளியிட்டன.

அதன் காரணமாக அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கையை அமெரிக்க மக்களே கண்டித்து கிளர்ந்தெழுந்தனர்.

இங்கு அவ்வாறான நிலை காணப்படவில்லை யுத்தம் அனாவசியமானது என்ற மனப்போக்கையோ, அரசியல் தீர்வே அவசியம் என்ற கருத்தையோ சிங்கள பொதுசனத்திடம் ஏற்படுத்த பத்திரிகைகள் முன்வரவில்லை.

புலிகளை யுத்தத்தில் வென்று சிங்கக்கொடியை பறக்கவிடவேண்டும் என்ற எண்ணப்பாட்டுடனேயே பெரும்பாலான சிங்கள பத்திரிகையாளர்களும் இருக்கின்றனர்.

சரியாக யுத்தம் செய்யவில்லை என்பதற்காக அரசை விமர்சிக்கிறார்களே தவிர, யுத்தமே கூடாது என்று பிரபல சிங்களப் பத்திரிகைகள் எதுவும் கருத்துக் கூறியதில்லை.

சமீபத்தில் சண்டே ரைம்ஸ் பத்திரிகையில், இக்பால் அத்தாஸ் தனது இராணுவ ஆய்வில் பாதுகாப்பு பிரதியமைச்சர் ரதவத்தையை கடுமையாக விமர்சித்திருந்தார். இறுதியில் அவரது ஆய்வில் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கையை தனது நேரடி பொறுப்பில் கொண்டுவந்துள்ள ஜனாதிபதியாவது, போரை ஒழுங்காக முன்னெடுக்க வேண்டும் என்று ஆலோசனை கூறியுள்ளார் இக்பால் அத்தாஸ்.

எனவே, ஆட்சியாளர்களின் இராணுவத்தீர்வு முனைப்போ இதன் காரணமாக தமிழ் பேசும் மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் அவலங்களோ சிங்கள பத்திரிகை உலகில் அக்கறைக்குரிய பிரச்சனைகளாக விளங்கவில்லை.

இவ்வாறான பின்னணியில்தான் வன்னியில் பட்டினிகள், இடம்பெயர்வுகள் பற்றி சிறிதும் கவலையின்றி நிவாரண வெட்டை ஆட்சியாளர்கள் தொடர்கின்றனர்.

தம் சொந்த மக்களின் பட்டினி



கொடுமைகளைக் கண்டும் வெறும் அறிக்கைகள் தவிர வேறெந்த நடவடிக்கையிலும் தமிழ்க் கட்சிகள் இறங்கவில்லை.

அதற்கு மாறாக, அரசு கரிசனையுடன் பரிசீலிக்கப் போகிறது என்ற எதிர்பார்ப்புக்களையே தமிழ்க் கட்சிகளும் உருவாக்கியிருந்தன.

தமிழ் கட்சிகள் குறிப்பாக பாராளுமன்றத்தில் உள்ள தமிழ்க் கட்சிகள் நினைத்திருந்தால் வன்னிக்கான நிவாரண வெட்டை நிறுத்துவதற்கு ஒன்றுபட்ட நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்க முடியும்.

பட்ஜெட் கூட்டத் தொடரை பகிஷ்கரிப்பது, பாராளுமன்றம் முன்பாக மறியல் போராட்டங்கள் நடத்துவது என்று எத்தனையோ போராட்டங்களை நடத்தியிருக்கலாம்.

தனிச் சிங்கள சட்டத்தை எதிர்த்து 1956இல் தமிழரசுக் கட்சியினர் காலிமுகத் திடலில் அன்றைய பாராளுமன்றம் முன்பாக போராட்டம் நடத்தியிருந்தனர். இரத்தம் சிந்தினார்கள். தனிச் சிங்களச் சட்டம் போராட்டம் காரணமாக உடனடியாக நீக்கப்படாவிட்டாலும், அப்போராட்டம் ஏற்படுத்திய எழுச்சி பாரிய விளைவுகளை ஏற்படுத்தியிருந்தது.

அன்றுபோல் அல்லாமல் சர்வதேச கவனம் இன்று இலங்கை நோக்கி திரும்பியுள்ளது.

இக் கட்டத்தில் தமிழ்க் கட்சிகள் பாராளுமன்றம் முன்பாக போராட்டங்களை நடத்தியிருந்தால் அகில உலகின் கவனத்தை ஈர்த்திருக்கும். அதுவும் பட்ஜெட் சமயத்தில் நடத்தப்பட்டிருக்குமானால் மேலும் முக்கியத்துவம் பெற்றிருக்கும்.

அன்றாடப் பிரச்சனைகளைத் தீர்க்கவே தாம் முயற்சி செய்வதாக தமிழ்க் கட்சிகள் கூறி வருகின்றன. யாழில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டபோதும் அதனையே கூறியிருந்தன.

வன்னியில் கிட்டத்தட்ட ஐந்து இலட்சம் தமிழ் மக்கள் பட்டினியால் வாடுவதுதான் இன்றைய மிக ஆபத்தான, அவசரமான அன்றாடப் பிரச்சனையாகும்.

இன உணர்வு என்பதை ஒருபுறம் வைத்துவிட்டு பார்த்தால்கூட, மிகப் பாரிய மனிதாபிமானப் பிரச்சனை என்ற வகையிலாவது தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்தை நெருக்குதலுக்கு உள்ளாக்கி இருக்க வேண்டும்.

யாழில் காணாமல் போனோர் விவகாரம், செம்மணி புதைகுழி விவகாரம் போன்றவற்றில் தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டிருந்தால் ஆட்சியாளர்களை சர்வதேச அரங்கில் அம்பலமாக்கியிருக்க முடியும்.

அந்தச் சந்தர்ப்பங்களை தவறவிட்டதோடு, ஆட்சியாளரின் சார்பாக உத்தரவாதங்களை வழங்கும் தரகு வேலையையும் தமிழ்க் கட்சிகள் மேற்கொண்டிருந்தன.

இப்போது பாரிய மனித உயிர் அழிவுக்கு வித்திடக்கூடிய நிவாரண வெட்டை நிறுத்துவதற்கான செயல்பூர்வமான எவ்வித நடவடிக்கைகளிலும் இக் கட்சிகள் இறங்கவில்லை.

தமது உள்ளூராட்சிச்சபை உறுப்பினர்கள் சிலர் பலியானதை கண்டிக்குமாறு உலகத் தலைவர்களுக்கு மகஜர் எழுத முன்வந்த தமிழ்க் கட்சிகள், தமது சொந்த மக்கள் ஐந்து இலட்சம் பேர் பட்டினி கிடப்பதையிட்டு சர்வதேச கவனத்திற்கு கொண்டு செல்வதற்கு துணியாதிருக்கின்றனர்.

புலிகளின் போராட்டத்தில் குளிர்காய்ந்தபடி, தாமும், தமது உறுப்பினர்கள் சிலரும் உயிர்வாழ்வதற்குரிய அனுமதியைத்தான் இக் கட்சிகள் ஜனநாயகம் என்று அர்த்தப்படுத்துகின்றன.

தமிழ் மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ள உயிர் வாழ்தலுக்கான உரிமை பற்றி இக்கட்சிகள் அலட்டிக் கொள்ளவில்லை.

மாபெரும் அவலங்களை காண மறுத்தபடி, பேச்சுவார்த்தைகள் நடந்தால் நாமும் கலந்து கொள்வோம், நாமும் பிரதிநிதிகளே என்றும் இக் கட்சிகள் கூறிவருகின்றன.

ஒரு இயக்கம் மட்டும் ஏகப் பிரதிநிதியாக இருக்கலாமா? என்று இக் கட்சிகள் கேள்வி எழுப்ப முன்னர், தாமும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்பதை நிரூபிக்கும் விதமான நடவடிக்கைகளில் இறங்க வேண்டியது அவசியமாகிறது.

அதனைவிடுத்து ஈழக் கோரிக்கைக்காக பலியான தமது அந்தநாள் உறுப்பினர்களின் தியாகங்களை கூறி, தம்மையும் பிரதிநிதிகளாக உரிமை கொண்டாடுவது கேலிக்குரியதாகும். ●

---

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

தொல்லை தவிர்ப்புக் குழுக் கூட்டத்தில் முரசைப் பற்றி இரா.சம்பந்தன் புகார் கூறியுள்ளாராம்.

தொல்லை தவிர்ப்புக் குழுவின் நாடகங்களை 'முரசு' முதலில் இருந்தே அம்பலப்படுத்தி வருகிறது.

"கைதுகள் தொடர்பாக தொல்லை தவிர்ப்புக் குழுவில் இரா.சம்பந்தன் எடுத்துரைப்பு!" என்று செய்தி வெளியிட்டால் அவர் மனம் குளிரும்.

தொல்லை தவிர்ப்புக் குழு என்பது ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது. ஆளும் தரப்புக்கு எதிரான எவரும் அதில் சேர்க்கப்படவில்லை.

இக் குழுபற்றி 'முரசு' கூறிய விமர்சனங்கள் சமீபத்தில் மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் பொலிஸ் நிலையங்களில் தமிழ் குடியிருப்பாளர்கள் பதிவு செய்ய வேண்டுமானால், இரண்டு புகைப்படங்களை சமர்பிக்க வேண்டும் என்று சில பொலிஸ் நிலையங்களில் கேட்கப்பட்டது.

இன்னொரு நாட்டில் தங்குவதற்கு விசா பெறுவதற்கும் இதற்கும் பெரிய வித்தியாசமில்லை.

தமிழ் மக்கள் அனைவரையும் சந்தேகக் கண்கொண்டு நோக்குவதை சட்டரீதியாக அங்கீகாரம் செய்வது போன்றதே இதுவும்.

இந்த விடயம் குறித்து தொல்லை தவிர்ப்புக்குழு பொலிஸ் அதிகாரிகளிடம் விளக்கம் கேட்டது. செய்திகள் பத்திரிகைகளிலும் கொட்டை எழுத்தில் வெளியாகின.

இப்போது பலன் கிடைத்துவிட்டது. தொல்லை தவிர்ப்புக்குழு விளக்கம் கோர முன்பாக கொழும்பில் உள்ள ஒரு சில பொலிஸ் நிலையங்களில் மட்டுமே புகைப்படம் கோரினார்கள்.

தொல்லை தவிர்ப்புக் குழு தலையிட்டதால், இனிமேல் கொழும்பில் சகல பொலிஸ் நிலையங்களிலும் புகைப்படம் கொடுத்தாக வேண்டும்.

தொல்லையை பரவலாக்கி, தமிழர் யாவருக்கும் பொதுவாக்கி பெரும்பணி செய்திருக்கிறது தொல்லை தவிர்ப்புக்குழு.

இந்த விமர்சனத்தை பார்த்தாவது ஜனாதிபதியிடம் எடுத்துக்கூறி, புகைப்படம் பெறும் நடைமுறையை தொல்லை தவிர்ப்புக் குழு நிறுத்தி வைக்கட்டும்! அதை விடுத்து முரசில் கோபப்பட்டு என்ன புண்ணியம்!

முன்னர் தமக்கு எதிரானவர்களை துரோகிகள் என்று இளைஞர்களிடம் காட்டிவிட்டனர். இப்போது தங்களை விமர்சிப்போரை வேறு விதமாக முத்திரை குத்திக் கொண்டிருக்கின்றனர். எப்போதுமே காட்டிக் கொடுப்புத்தானா?

●□●

### தென்னாபிரிக்க தூதுக்குழுவிடம் 'பிரமுகர்' கூறியது என்ன?

தென்னாபிரிக்க பாராளுமன்ற தூதுக்குழு கொழும்பு வந்திருந்தது. போட்டி போட்டுக் கொண்டு தமிழ்க் கட்சிகளும் சந்தித்தன. சந்திப்பை ஏற்பாடு செய்ததே வெளிநாட்டு அமைச்சுத்தான். அரசை எதிர்த்து காரசாரமாக கருத்துக் கூறக்கூடிய கட்சிகளை புத்திசாலித்தனமாக தவிர்த்தனராம்.

இங்குள்ள தமிழ்க் கட்சிகள் ஊடாக புலிகளை இடம் வலமாக கிழிப்பதற்காகத்தான் பாராளுமன்ற தூதுக்குழுவை இங்கு அழைப்பித்தனர் என்று தகவல்.

தென்னாபிரிக்க தூதுக்குழுவிடம் தாம் என்ன கூறினோம் என்று பத்திரிகைகளுக்கு தமிழ்க் கட்சிகள் பக்கம் பக்கமாக எடுத்துக் கூறின. விடுதலைப் புலிகள் பற்றி தாம் கூறியதை மட்டும் பத்திரிகைகளுக்கு கூறாமல் அமுக்கிவிட்டனர்.

'சகல தமிழ்க் கட்சிகளும் அரசுடன் பேசி வருகிறோம். பொதி முன்னேற்றமானது. புலிகளை பேச்சு மேசைக்கு கொண்டுவரத்தான் மூன்றாம் நபர் அனுசரணை தேவை' என்று ஒரு முக்கிய அரசியல்வாதி எடுத்துக் கூறினாராம்.

அதாவது தமக்கு அரசில் நம்பிக்கை உண்டு. பொதியில் நம்பிக்கை உண்டு. புலிகளுக்கு மட்டும் நம்பிக்கையில்லை, அவர்களுக்காகத்தான் மூன்றாம் நபர் அனுசரணை (மத்தியஸ்தமல்ல) தேவை என்றுள்ளார்.

இனப்பிரச்சனையை இந்த நாட்டுக்குள் தீர்க்கமுடியாது. அரசு தக்க தீர்வை தானாக முன்வைக்காது என்ற அடிப்படையில்தான் புலிகள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கோருகின்றனர். வெறுமனே யுத்தத்தை நிறுத்த மட்டுமல்ல. அல்லது ஏதோ தமக்கும் அரசுக்கும் இடையிலான தனிப்பட்ட பிரச்சனைக்குமல்ல.

ஆனால், தன்னை பழம்பெரும் அரசியல்வாதி என்று கூறிக்கொள்ளும் அந்த பிரமுகர் புலிகளை பேச்சுக்கு கொண்டுவரவே மூன்றாம் நபர் அனுசரணை தேவை என்று கூறியிருக்கிறார்



படிப்பகம்

www.padippakam.com

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 40

**கடந்தவாரம்**

**ஐக்கிய நாடுகள் சபை கூட்டத்தில் மனைவி பிள்ளைகளுடன் கலந்து கொண்டுவிட்டு திரும்புகிறான் அமீன். பணவீக்கம் உகண்டாவில் 400 மடங்காகிறது. நெருக்கடி முற்றுகிறது. அமீனின் இரும்புப்பிடி இறுகுகிறது.**

**இனி....**

# இடி அமீன்

இடி அமீனை சந்திக்க வந்திருந்த பெண் நடுத்தர வயதில் இருந்தார்.

தன்னைச் சந்திக்க வருபவர்களை முன்கூட்டியே பார்த்துவிடுவதற்காக, அலுவலக வரவேற்பறையில் வீடியோ கமரா ஒன்று வைத்திருந்தான்.

அந்தக் கமரா பதிவு செய்யும் காட்சிகள் அமீன் அறையில் இருந்த ரி.வி.திரையில் விரியும்.

ஐ.நா.சபைக்கு சென்றபோது நியூயோர்க்கில் இடி அமீன் வாங்கிவந்த சாதனம் அது.

தன்னைச் சந்திக்க வருபவர்களை அவர்கள் அறியாமலேயே அமீன் கண்காணிக்க அச் சாதனம் வசதியாக இருந்தது.

அதேபோன்று இன்னொரு சாதனம் அமீனின் பிரத்தியேக பாதுகாப்புப் பிரிவின் அறையிலும் இருந்தது.

தனது பாதுகாப்பு ஆட்களைக்கூட அமீன் முழுதாக நம்பவில்லை. அதனால் தான் தன் நேரடிப் பார்வையிலும் ஒன்று வைத்திருந்தான்.

தன்னைச் சந்திக்க வந்திருப்பது கவர்ச்சியான இளம் பெண்கள் என்றால் அவர்கள் அமர்ந்திருப்பதை ரி.வி. திரையில் பார்த்து இரசிப்பான் அமீன். பின்னர்தான் நேரில் சந்திக்க அழைப்பான்.

சோவியத் யூனியனில் உகண்டாவின் தூதராக இருப்பவர் மைக்கேல் ஒண்டோகா. அவரது மனைவிதான் அமீனைக் காண்பதற்கு வந்திருந்தார்.

நடுத்தரவயதில் கம்பீரமாக இருநத திருமதி மைக்கேல்மீது அமீனுக்கு ஒரு பிடிப்பு வந்தது.

அவருக்கு முன்னதாகவே அமீனைச் சந்திக்க வந்த பலர் காத்திருந்தனர். அதிகாரிகளும் இருந்தனர்.

**"அவர்கள் இருக்கட்டும். திருமதி மைக்கேலை வரச்சொல். பெண்ணுக்குத்தான் முதலிடம்"** என்று தன் உதவியாளரைப் பார்த்து கண்சிமிட்டினான் அமீன்.

உதவியாளருக்கு அமீனின் குறிப்புத் தெரியும். திருமதி மைக்கேலை அழைத்து வந்து அமீன் முன்பாக விட்டுச் சென்றார்.

திருமதி மைக்கேல் சற்று அதீதமாக உதட்டுச் சாயம் பூசியிருந்தாள். சற்று அதீதமாக கண்ணுக்கு மையிட்டிருந்தாள். சற்று அதீதமாகவே சகலதும் கொண்டிருந்தாள்.

அமீன் எழுந்து கைகொடுத்தான். கைகொடுக்கும்போதே அழுத்தம் கொடுத்தான்.

அப்படி அழுத்தும் போதே முகக் குறிப்புப் பார்த்துக் கொள்ளுவான். வரவேற்பு இருக்கிறதா? வெறுப்புத் தொனிக்கிறதா? என்பதை அறிந்து கொள்ளுவான்.

திருமதி மைக்கேலிடம் வரவேற்பு இருந்தது. உதடுகளில் புன்னகை இருந்தது. கண்களில் ஏற்பு இருந்தது.

**"என்ன வேண்டும்?"** என்று கேட்டான்.

சுற்றி வளைக்காமல் எடுத்த எடுப்பிலேயே அவள் கேட்டாள்; **"என் கணவருக்கு அமைச்சர் பதவி வேண்டும்."** எடுத்த எடுப்பிலேயே அவள் நேரடியாகக் கேட்டது அமீனுக்கேகூட அதிர்ச்சியாக இருந்தது.

சுதாகரித்துக்கொண்ட அமீன் அவளது உதடுகளையே பார்த்தபடி நேரடியாகக் கேட்டான்; **"கொடுத்தால் எனக்கு என்ன தருவாய்?"**

அவள் ரசியாவிலும் சில காலம் கணவருடன் தங்கியிருந்தவள். அதனால் ஆண்களுடன் சகஜமாகப் பழகக் கற்றவள். அந்த பழக்கத்தை அமீனின் பலவீனத்தில் அடிக்கப் பயன்படுத்தினாள்.

கிறக்கமாகச் சிரித்தபடி, கண்களைக் குறுக்கியபடி, நெற்றியில் வந்து விழுந்த முடிக்கற்றைகளை ஒரு கையால் ஒதுக்கி விட்டபடி சொன்னாள்: **"எது கேட்டாலும் தருகிறேன். அதாவது என்னிடம் உள்ளதாக என்னால் தரக்கூடியதாக கேட்டால்!"** என்றாள்.

இதைவிட வேறு எவ்விதம்தான் அவள் சம்மதத்தை கூறமுடியும்? அமீனுக்கு அக் கணமே அவளை அடையவேண்டும் போல் இருந்தது.

**"நான் ரொம்ப பொல்லாதவன். முரடன். என்னிடம் வந்த பெண்கள் அழுது கொண்டுதான் திரும்பிச் சென்றிருக்கிறார்கள்."** என்றான்.

"நானும் ரொம்ப பொல்லாதவள். ஆனால் என் கணவரைவிட யாரிடமும் இதுவரை நாட்டம் கொண்டதில்லை. உங்கள்மீது மட்டும் நீண்டநாட்களாக எனக்குள் ஒரு அவா இருந்தது!" என்றாள்.

**"உன் கணவருக்காக வந்தாயா? உனக்காக வந்தாயா?"** என்றான் இடக்காக.

"இரண்டுக்குமாகத்தான். இதில் ஏதாவது ஒன்றுக்காக என்று பொய் சொல்ல நான் விரும்பவில்லை." என்றாள். என்றபோது அமீன் அவள் அருகே, மிக அருகே வந்திருந்தான்.

எழுந்துகொண்டே அவள் கேட்டாள்: "இங்கு வேறு யாராவது வரமாட்டார்களா?"

"மாட்டார்கள். அறை உட்பக்கமாக மூடப்பட்டிருக்கிறது. இப்போது மூட **வேண்டியது உன்னை நானும், என்னை நீயும்தான்!"** என்றபடி மூக்கோடு தன் மூக்கை உரசினான். கைகளால் அவள் உடலெங்கும் அலசினான்.

அன்று மாலையே சோவியத் யூனியனில் இருந்த மைக்கேல் ஒண்டோகாவுக்கு தகவல் போனது.

**"வெளிநாட்டமைச்சராக பதவி ஏற்க நீங்கள் அழைக்கப்படுகிறீர்கள் உடன் புறப்படவும்."**

மைக்கேல் ஒண்டோகாவுக்கு ஆச்சரியம் என்றால் ஆச்சரியம். அவருக்கு அமைச்சர் பதவியில் பெரிய ஆசையொன்றும் கிடையாது.

அமீனின் அமைச்சரவையில் பணிபுரிவதை மிட்டும் அவருக்கு அத்தனை ஆர்வமில்லை. அப்படியிருந்தும் புறப்பட்டு வந்தார்.



**"சோவியத் யூனியனில் உங்கள் பணி என்னை கவர்ந்து விட்டது. அதனால்தான் என் பக்கத்திலேயே உங்களை வைத்திருப்பதற்காக இந்த அமைச்சர் பதவி"** என்றான் அமீன்.

மைக்கேல் ஒண்டோகா வெளிநாட்டமைச்சராக பதவி ஏற்றுக்கொண்டதாக அறிவிப்பு வெளியானது.

அமீன் உதவி ஜனாதிபதியாக இருந்தவன் முஸ்தபா அட்றிசி.

. அமீனின் உறவினன்... நம்பிக்கைக்கு பாத்திரமானவன். எத்தகைய படுபூதகச் செயலுக்கும் அஞ்சாதவன்.

. முஸ்தபா ஆட்றிசிக்கு மைக்கேல் ஒண்டோகாவை வெளிநாட்டமைச்சராக நியமித்தது பிடிக்கவில்லை.

அமீனிடம் தன் அதிருப்தியை கூறினான்; **"ஏற்கக்கூடிய காரணமாக இருந்தால் கூறு. சீட்டைக் கிழிக்கலாம்"** என்றான் அமீன்.

"மைக்கேல் புத்திசாலி. பல நாடுகளுடன் தொடர்பு உள்ளவன். எங்களுடன் முரண்டு பிடிக்கலாம். அவன் அமைச்சரவையில் இருந்து விலகி ஓடினால், அவன் செய்யும் பிரசாரத்தால் நாங்கள் நாறிப்போவோம்!" என்றான் முஸ்தபா.

அமீனுக்கு அப்போதுதான் தனது தவறு உறைத்தது. **"நீ சொல்வதும் யோசிக்க வேண்டியதுதான். நான் பார்த்துக் கொள்கிறேன்."** என்று அவனை அனுப்பினான்.



உதவி ஜனாதிபதியாக இருந்த முஸ்தபா அட்றிசி ஒரு கூட்டத்தில்

அமீனின் அழைப்பை ஏற்று உடனடியாகப் புறப்பட்டு வந்திருந்தார் மைக்கேல். அதனால் சோவியத் யூனியனில் தன் உடமைகள் மற்றும் சில ஆவணங்களை விட்டு வந்திருந்தார்.

அவற்றை எடுத்துவருவதற்கு மீண்டும் சோவியத் யூனியனுக்கு சென்றிருந்தார் மைக்கேல்.

உகண்டா வானொலி வெளியிட்ட அறிவிப்பு பலரையும் யோசிக்க வைத்தது.

'இந்த நாட்டில் என்னதான் நடக்கிறது? எல்லாமே மர்மமாக இருக்கிறதே' என்று ஆளாளுக்கு முணுமுணுத்தனர்.

**"வெளிநாட்டமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள மைக்கேல் ஒண்டோகா இரண்டு நாட்களுக்குள் நாடு திரும்பி பதவி ஏற்கத்தவறினால், அவரது பதவியே பறிபோகும்"** என்று தான் வானொலி அறிவித்தது.

இந்த அறிவித்தல் பற்றி மைக்கேல் ஒண்டோகா அறிந்திருந்தால் நாடு திரும்பாமலேயே இருந்திருப்பார்.

திருமதி மைக்கேல் அமீனை தொடர்பு கொள்ள முயன்றாள். அமீன் அவளை சந்திப்பதையும், பேசுவதையும் தவிர்த்தான்.

அறிவித்தல் பற்றி அறியாது விட்டாலும் மைக்கேல் இரண்டு நாடகளுக்குள் நாடு திரும்பிவிட்டார். அதனால் பதவிபறிபோகவில்லை.

தான் இல்லாதபோது விடுக்கப்பட்ட அறிவித்தலைப் பற்றிய விபரம் அறிந்த மைக்கேல் சினமுற்றார்.

"என்ன இது, நீங்கள்தானே பதவியைத் தந்தீர்கள். பின்னர் ஏன் இதுமாதிரி அவமானப் படுத்தினீர்கள்?" என்று அமீனிடம் நேரடியாகவே கேட்டுவிட்டார் மைக்கேல்.

அமீன் உடனடியாக பசுத்தோலைப் போர்த்திக் கொண்டான்.

**"என்ன நடந்தது?"** என்று கேட்க, அமைச்சர் விபரங்களைக்கூற, எதுவும் அறியாதவன் போல, **"அப்படியா? நான் விசாரித்துப் பார்க்கிறேன். என்னையறியாமல் தவறு நடந்துவிட்டது. நடவடிக்கை எடுக்கிறேன்"** என்று கூறியனுப்பினான்.

"கட்டாயம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இல்லையானால் நான் ராஜினாமா செய்ய வேண்டிமிருக்கும்இருக்கும்" என்று கூறிவிட்டு சரேலென்று போய்விட்டார் மைக்கேல்.

தன்னிடம் இப்படிப் பேசும் ஒருவரை தொடர்ந்து அமைச்சராக வைத்திருப்பது ஆபத்து என்பதை அமீன் அப்போதே குறித்து வைத்துக் கொண்டான்.

மைக்கேலை ராஜினாமா செய்யவைக்க முன்பாக அவரைச் சீண்டிப்பார்க்க நினைத்தான்.

ஆசிய நாட்டவர்கள் விட்டுச் சென்ற வீடுகளில்தான் ஏனைய அமைச்சர்கள் குடியிருந்தனர். தானும் அப்படியான வீடொன்றில் குடியேறினார் மைக்கேல்.

இராணுவப் பொலிசார் அந்த வீட்டை முற்றுகையிட்டனர். மைக்கேலுக்கு ஒரே குழப்பம்.

**"என்ன, எங்கே வந்தீர்கள்?"** என்று கேட்டார்.

**"ஆசிய நாட்டவர்களது உடமைகளைப் பாதுகாப்பது அரசின் கடமை. இந்த வீடு பொலிஸ் பாதுகாப்பில் இருக்கிறது. அதனால் நீங்கள் உடனடியாக காலி செய்ய வேண்டும்"** என்று கூறினார்கள் இராணுவப் பொலிசார்.

இடி அமீனுடன் தொடர்பு கொள்ள முயற்சி செய்தார் மைக்கல். முடியவில்லை.

வீட்டை காலி பண்ணிவிட்டு தன் பழைய வீட்டுக்கே சென்றார்.

திருமதி மைக்கல் இரகசியமாக கண்ணீர் விட்டாள். தன் ஆசையால் தன் கணவர் படும் கஷ்டத்தைக் காண அவள் மனம் திருந்தியது.

"அமைச்சர் பதவியை தூக்கி வீசிவிட்டு எங்காவது ஓடிப் போய்விடலாம்" என்று கூறினார்.

இப்போது அமைச்சர் மைக்கேல் திடமாக கூறினார்; **"போகலாம் அதற்கு முன் நான் யாரென்று காட்டப்போகிறேன்"**

"அதற்கு முன் உங்கள் உயிரையே உருவிவிடுவார்கள்!" என்று பயந்தாள்.

"இல்லை. என் செல்வாக்கு என்னவென்று அமீனுக்கு தெரியும். உடனடியாக கைவைக்க மாட்டான். சதிதான் செய்வான். அதனால் எனக்குரிய பாதுகாப்பை நானே தேடிக்கொள்கிறேன்" என்றார் மைக்கல்.

தனது நம்பகமான ஆட்களை மெய்காப்பாளர்களாக நியமித்தார் அமைச்சர். அவர்கள் எந்நேரமும் அவரைச் சுற்றியே காணப்பட்டனர்.

**தருவது ரசிகன்**

அமைச்சரவைக் கூட்டத்தை கூடினான் அமீன்.

அந்தச் கூட்டத்தில் அமைச்சர் மைக்கலை நோக்காது, வேறு எங்கோ பார்த்தபடி அமீன் கூறினான்; **"தங்களை முக்கியமானவர்கள் என்று கருதும் சில அமைச்சர்கள் பிரத்தியேக மெய்க்காப்பாளர்களை நியமித்துக் கொள்கின்றனர். தங்கள் உயிர்கள்மீது அவர்களுக்குள்ள அக்கறையை பாராட்டுகிறேன்"** என்று இடிச் சிரிப்பை உதிர்த்தான்.

அவன் மூளையில் அதற்கான பயங்கரத் திட்டமும் உதித்தது.

(இடி தொடரும்)

## பாபாவுக்கு ஆபத்து–பொலிஸ் பாதுகாப்பு



சத்யசாயி பாபாவுக்கு கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. நவம்பர் 23ம் திகதி நடைபெற்ற பாபாவின் பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்ட பக்தர்களும் பொலிசாரின் சந்தேகப் பார்வையில் தப்பவில்லை.

பாபாவின் 'பிரசாந்தி' நிலையத்தில் பொலிஸ் தலையீடோ, சட்டத்தின் தலையீடோ இருக்கக்கூடாது என்று பாபாவே கூறியிருந்தார்.

ஆனால் இப்போது வேறு வழியின்றி அவரே பொலிஸ் பாதுகாப்பை அனுமதிக்க வேண்டிய கட்டாயம்.

சாய்பாபாவை கொன்றுவிட்டு, அவரது வாரிசு நானே என்று உரிமை கொண்டாட ஒரு சாமியார் பேயாய் அலைகிறாராம்.

அந்தச் சாமியார் ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவர். கிசி தக்கஹஷி என்பது அவர் பெயர். பத் குரு என்றழைக்கப்படுகிறார். ஜப்பானில் ஆசிரமம் உண்டு. பக்தர்கள் கூட்டமும் உண்டு.

பாபாவின் மேலும், அவரது ஆயிரக் கணக்கான கோடிச் சொத்துக்கள்மீதும் ஜப்பான் சாமியார் கண்வைத்தார். அதனால் பாபாவின் பக்தர்போல பிரசாந்தி நிலையத்துக்கு சென்று பாபாவை தரிசித்தார்.

தன் தொண்டர்களையும் புட்டபத்திக்கு கொண்டுவந்து பாபாவின் ஆசிரமத்தை அங்குலம் அங்குலமாக அறியவைத்தார்.

என்றாவது ஒரு நல்ல தருணத்தில் பாபாவை கொன்று விட்டு, ஆசிரமம் முழுவதையும் தன் பிடியில் கொண்டுவருவதுதான் ஜப்பான் சாமியாரின் கில்லாடித் திட்டம்.

எப்படியோ இந்த ஜப்பான் சாமியாரை முதலில் நன்கு நம்பிய பாபா பின்னர் உஷாராகிவிட்டார். ஜப்பான் சாமியாரையும் அவரது சிஷ்யர்களையும் சந்திக்க மறுத்தார்.

ஆனால் அவர்கள் விடவில்லை. "எங்கள் தெய்வமான பாபாவை சந்திக்க அனுமதியுங்கள்" என்று போராட்டம் நடத்தி வருகின்றனர்.

"சத்ய சாயிபாபாவின் கடவுள் அவதாரம் முடிந்துவிட்டது. இனி கடவுள் நானே" என்று பிரகடனப் படுத்தியுள்ளார் ஜப்பான் சாமியார்.

இதனால்தான் பாபாவுக்கு ஆபத்து நேரலாம் என்று பயங்கரமான பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு பக்தர்கள்மீது பொலிஸ் கடும்பார்வை வீசுகிறது. பாபாவின் பிறந்த நாள் உரையை பதிவு செய்ய வந்த ஜப்பானியர்கள் சிலரை மடக்கிப்பிடித்து துருவிப் பார்த்தனர். பின்னர்தான் சந்தேகம் நீங்கியதாம்.

"பாபாவின் முகத்தில் முதுமை குடியேறிவிட்டது. இந்தப் பிறவியை 2007ம் ஆண்டு அல்லது 2002ம் ஆண்டு முடித்துக்கொள்வதாக பாபாவே கூறியுள்ளார். எனவே அடுத்த எட்டு ஆண்டுகளில் புது அவதாரம் தன் பணியைத் தொடர வேண்டும். ஆகவே அந்த அவதாரம் இப்போதே எங்கோ ஓரிடத்தில் பிறந்திருக்க வேண்டும். அந்த அவதாரம்தான் எங்கள் பத்குரு தக்கஹஷி" என்று பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி கொடுத்துள்ளனர் ஜப்பான் சாமியாரின் சிஷ்யர்கள்.

## பெண்களுக்கும் தயார்

ஆண்களுக்கான வயாக்ரா செக்ஸ் மாத்திரையை கண்டு பிடித்தவர் சைமன் காம்ப்பெல். இவர் தெரிவித்திருக்கும் மற்றொரு செய்தி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



'வயாக்ராவுக்கு உலகம் முழுவதும் கோடிக்கணக்கான ரசிகர்கள் உருவாகிவிட்டனர். இவர்கள் தரும் ஆதரவின் அடிப்படையில் பெண்களுக்கான வயாக்ரா மாத்திரை தயாரிக்கும் முயற்சி நடந்துவருகிறது" என்று கூறியிருக்கிறார்.

"ஐரோப்பாவில் பெண்களுக்கான வயாக்ரா மாத்திரையை வைத்து பரிசோதனை நடத்தினோம். 19 வயது முதல் 70 வயது வரையான பெண்களிடம் ஆரம்ப கட்ட சோதனை நடந்தது. சோதனை திருப்திகரமாக உள்ளது." என்றும் அவர் கூறியுள்ளார்.

"கொலம்பஸ் இந்தியாவைக் கண்டுபிடிக்க புறப்பட்டு அமெரிக்காவை கண்டுபிடித்தது போல, வேறு ஒரு மாத்திரையை கண்டுபிடிக்க முயன்று வயாக்ராவை கண்டுபிடித்தேன்.

வயாக்ராவில் சில குறைகள் இருந்தாலும் 80 சதவீதம் திருப்தியான மாத்திரை. இதனை டாக்டர்களின் ஆலோசனைப்படி சாப்பிடலாம்." என்று ஆலோசனையும் கூறியுள்ளார் சைமன் காம்ப்பெல்.

## மூன்று வயதுச் சாமியார்

இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலத்தில் மூன்று வயது சாமியார் ஒருவர் தூள் கிளப்பிக்கொண்டிருந்தார்.



இந்தக் குழந்தை சாமியார் அஜ்ஜா மஹாராஜ் என்று அழைக்கப்பட்டார்.

வெள்ளி சிவலிங்கமும், மலர் மாலைகளுமாக பக்தர்களுக்கு வழங்கி புல்லரிக்க வைத்தார்.

ஒரே ஒருவார்த்தை மட்டும்தான் ஆசிர்வாதமாக் கூறுவார். இதனால் சந்தேகம் கொண்ட மூட நம்பிக்கை ஒழிக்கும் குழுவினர் இவரைக் கண்காணித்து வந்தனர்.

இந்த குட்டிச் சாமியாரின் புகழ் எங்கும் பரவி, பக்தர் கூட்டம் திரண்டது. இனியும் பொறுப்பதில்லை என்று குட்டிச் சாமியாரை பிடித்து மூட நம்பிக்கை ஒழிப்புக் குழுவினர் பொலிசில் ஒப்படைத்தனர்.

அப்போதுதான் விஷயம் தெரிந்தது. குழந்தையின் பெற்றோர்தான் அதனை பிழைப்புக்காக பயன்படுத்தியுள்ளனர்.

'தன்னை விளையாடவே அனுமதிப்பதில்லை' என்று பொலிசில் சொல்லி அழுததாம் அந்த மூன்று வயதுக் குழந்தை.

## வியக்க வைக்கும் குட்டி நடிகை

தேசிய விருது பெற்ற ஒளிப்பதிவாளர் சந்தோஷ் சிவன். அவர் இயக்கும் படம் மல்லி. அப்படத்தில் காது கேளாத சிறுமி ஒருவர் நடிக்கிறார்.



சிறுமியின் பெயர் வனிதா. ஒன்பது வயது. இவள் ஒன்பது மாத குழந்தையாக இருந்தபோது நோயுற்றாள். மும்பாய் மருத்துவமனை ஒன்றில் சேர்த்தனர். அங்கு கொடுக்கப்பட்ட 'ஓவர் டோஸ்' காரணமாக காது கேட்கும் சக்தியை இழந்தாள்.

காது கேளாது போனால் பேசும் சக்தியும் போய்விடும் என்று பெற்றோர் பயந்தனர். ஆனால் வனிதா தன் கடும் முயற்சியால் நன்றாக படித்தாள். சரளமாக ஆங்கிலம் பேசுவதோடு வகுப்பில் முதல் இடத்தில் வருகிறாள்.

ஒன்பது வயதிலேயே கராத்தே பயிற்சி பெற்று கறுப்பு பெல்ட் வாங்கியுள்ளாள்.

இந்த அதிசய சிறுமி பற்றி அறிந்த சந்தோஷ் சிவன் தன் படத்தில் நடிக்க வைத்திருக்கிறார்.

எந்தக் காட்சியைக் கூறி நடித்துக் காட்டினாலும் அதனை அப்படியே நடித்துக் காட்டி அசத்துகிறாளாம்.



படிப்பகம்

www.padippakam.com


## வேறு வழியில்லை



ருவாண்டா நாட்டில் ஆயுதம் ஏந்தியுள்ள சிறுவன். கையில் துப்பாக்கி. புஜத்தில் செருகிய கத்தி. தன் எதிரிகளிடம் இருந்து தப்ப இவனுக்கு வேறு வழியில்லை.

சிறுவர்கள் ஆயுதம் ஏந்தக் கூடாது என்று கூறுவது எளிது. முதலில் அதற்கான சூழல்களை இல்லாதொழிக்கவும் முன்வரவேண்டும்.

## வில் உடல்கள்



வெண்கலச் சிலைகளும் அல்ல, பொம்மைகளும் அல்ல, உயிருள்ள மனிதர்கள்.

ஃபிரான்ஸ் தலைநகரான பாரிசில் ரசிய நாட்டு சிறுமிகள் நடத்திய சாகசக் காட்சியில் ஒரு கட்டம் இது. என்னமாய் உடலை வில்லாக வளைத்து கண்களுக்கும் கருத்துக்கும் வியப்பளிக்கிறார்கள் பார்த்தீர்களா! 'நாளைய சேர்க்கஸ்' என்ற குழுவைச் சேர்ந்தவர்கள் இந்த சிறுமிகள்.

**தகவல் பெட்டி**

காண்போர்
திறந்த விழி மூடாமல்
அசந்துபோய்
இரசித்தனராம்.
ஒரு கட்டமே
இப்படியென்றால்
முழுதாகப்
பார்த்தவர்கள்
அசந்ததில் என்ன
ஆச்சரியம்!


## துப்பினால் தப்பமுடியாது

நல்ல பாம்புகள் பொதுவாக தமக்குத் தீங்கிழைக்கப் போவதாகக் கருதப்படும் பிராணியை அல்லது மனிதனைக் கொத்தி விடும். அதன் வாயிலுள்ள விஷப்பல்லிலிருந்து வெளியேறும் விஷம் உடனடியாக பாதிக்கப்பட்ட பிராணியையோ மனிதனையோ உயிரிழக்க வைத்துவிடும்.

மொஸாம்பிக் போன்ற சில ஆபிரிக்க நாடுகளில் காணப்படும் கறுப்பு நல்ல பாம்புகள், எதிரியை அழிக்க கொத்துவது கிடையாது. எதிரியையோ, தன் இரையையோ எதிரில் கண்டதும் தனது வாயைத் திறக்கின்றன. வாயுள்ளிருந்து விஷம் எதிரியின் மீது பீச்சப்படும். இவ்வாறு பீச்சப்படும் விஷம் எதிரியை உடன் கொன்றுவிடும், அல்லது முற்றாகச் செயலிழக்க வைத்துவிடும். அது இரையானால் உடனடியாக அந்த இரையை விழுங்கிவிடும்.

படத்தில் காணப்படும் பாம்பு தனது எதிரியின் முகத்தை குறிவைத்தே விஷத்தைப் பீச்சுகிறது. இவ்விஷம் கண்களில் பட்டால் கண்களும் குருடாகிவிடும்.

நல்ல பாம்புகளில் மிகப் பெரியது ராஜ நாகம். 5.58 மீட்டர் நீளம்வரை இவை வளரும். தனது வால் பகுதியை மட்டும் தரையில் ஊன்றி, ஒரு மனிதனின் உயரத்துக்கு மேல் தனது படத்தை விரிக்கும். இதன் விஷம் ஒரு மனிதனை 10 நிமிடங்களில் கொன்றுவிடும்.






## மூழ்காத ஷிப்

மனிதர்களிடம் மெல்ல மறைந்துவரும் பரஸ்பர பரிவு மனிதர்களின் மூத்த குடிமக்களான சிம்பன்சிகளிடம் மறையாமல் இருக்கிறது. பாருங்கள் என்னமாய் ஒரு அந்நியோன்யம்! மூழ்காத ஷிப் சிம்பன்சிகளிடமும் உண்டு!

## உருக்கும் முறுக்கும்!



முறுக்கேறிய உடம்பு என்பதற்கு அர்த்தம் இதுதானோ? யம்மாடி! கல்லிலே செதுக்கிய சிலை மாதிரி இருக்கிறதே. இந்த கட்டழகர் பெயர் நசார் எல் சன்பெற்றி. மிஸ்டர் ஒலிம்பியா போட்டிகளில் தூள்கிளப்பும் சூரர்.


இது மனித உடலே அல்ல என்று வியக்கவைக்கும் உடலமைப்பு. மாபிசைந்து விரும்பிய பலகாரம் செய்வது போல, பயிற்சியால் உடலைப் பிசைந்து என்ன மாதிரியெல்லாம் மாற்றி வைத்திருக்கிறார்.

உருக்கும்
இதுதான்!
முறுக்கும்
இதுதான்!

## நாற்காலியில் நாற்காலி

நாற்காலியின் மேலே நாற்காலியும் மேசையும் போட்டு அமர்ந்திருக்கிறார்கள் பாருங்கள். அந்தளவுக்கு பிரமாண்டமான நாற்காலி இது. இத்தாலியில் உள்ள உடைன் என்ற ஊரில் உதைபந்தாட்ட மைதானத்தில் இந்த மாபெரும் நாற்காலி பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. இதன் உயரம் பற்றி சரியாகத் தெரியவில்லை. இதன் அருகிலுள்ள மாடிக் கட்டடத்தை வைத்தும் பிரமாண்டத்தை அறிய முடிகிறதல்லவா. மூன்று அடுக்கு மாடியின் உச்சியை தொடும் உயரம் யப்பா! என்ன பிரமாண்டம்!

இந்த பெரும் நாற்காலியை உருவாக்கியவர் பியர்ஹொஃப். ஆச்சரியமூட்டும் முயற்சி.





படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 82

# எம்.ஜி.ஆர். விஜயத்தில் ஏற்பட்ட சர்ச்சை

## 'உடலை கோவிலாக மதித்தவர்'

தமிழக சினிமா விமர்சகர் எஸ்.விஜயன் எழுதிய எம்.ஜி.ஆர் கதையில் இருந்து ஒரு பகுதி:

"எம்.ஜி.ஆரின் அந்தரங்கமானது பாமரன் அறியாதது. சினிமா வட்டாரத்தினர் மட்டுமே எம்.ஜி.ஆரின் அந்தரங்கம் அறிவார்கள்.

1966ல் இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் எம்.ஜி.ஆர். இலங்கை சென்றிருந்தார். எம்.ஜி.ஆருடன் சரோஜாதேவியும் சென்றிருந்தார்.

'தன் மனைவியை விட்டு சரோஜாதேவியை எம்.ஜி.ஆர். அழைத்துச் செல்லலாமா?' என்று காங்கிரஸ் கட்சியினர் சிலர் கேட்டனர். சில பத்திரிகைகளும் விமர்சனம் செய்தன.

'எம்.ஜி.ஆர். ஒரு நடிகராக இலங்கை சென்றிருக்கிறார். அதனால் சக நடிகை என்ற முறையில் சரோஜாதேவியை அழைத்துச் சென்றுள்ளார். இதில் என்ன தவறு? என்று எம்.ஜி.ஆர். தரப்பில் பதிலடி தரப்பட்டது.

சில சமயம் அரசியல் மேடையில் எம்.ஜி.ஆர். பேச்சு வேடிக்கையாக இருக்கும். 1971 இல் நடந்த சட்டமன்ற தேர்தல் பிரசாரத்தில் எம்.ஜி.ஆரும், சிவாஜியும் கடுமையாக மோதிக் கொண்டனர்.

அப்போது சிவாஜி ஒரு கூட்டத்தில் "என்னோடு நடித்து நீ ஜெயிக்க முடியுமா?" என்று சவால் விட்டார்.

அதற்கு எம்.ஜி.ஆர். "எனது படங்களின் வசூலை உனது படங்கள் எட்டிப் பிடிக்க முடியுமா? நான் வாங்கும் சம்பளம் நீ வாங்க முடியுமா? என்னைப்போல் சண்டைக்காட்சிகளில் நீ நடிக்க முடியுமா? நீ நடிப்புக்கு போட்டிக்குத்தானே சவால் விட்டாய். நான் தயார்" என்று பேசினார்.

### எம்.ஜி.ஆர் கோபம்

எம்.ஜி.ஆர். சரோஜாதேவி நடித்து பயங்கரமான வெற்றி பெற்ற படம் 'அன்பே வா'. அதன் இயக்குநர் ஏ.சி. திருலோக சந்தர் எம்.ஜி.ஆர். பற்றி கூறும் சுவாரசியமான தகவல்கள்:

"'அன்பே வா'வில் எம்.ஜி.ஆர். நடிக்கிறார். என்றபோது எனக்கு பெரு மகிழ்ச்சி. படத்தின் இயக்குநர் நான்தான் என்றபோது எம்.ஜி.ஆருக்கு மகிழ்ச்சி.

படப்பிடிப்பு ஊட்டியில் நடைபெற்றது. ஒருநாள் எம்.ஜி.ஆர். வருவதற்கு முன்பாகவே சரோஜாதேவி வந்து விட்டார். சும்மா இருப்பானேன் என்று அவரை வைத்து படமாக்கினேன்.

எம்.ஜி.ஆர். வந்தபோது அவரது முகம் ஒரு மாதிரியாக இருந்தது. யாரிடமும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. தான் நடிக்க வேண்டிய சமயம் போக மற்ற சமயங்களில் உம்மென்று இருப்பார்.

என்ன சமாச்சாரம் என்று தெரிந்து கொள்ளாவிட்டால் எனக்கு தலையே வெடித்துவிடும் போலிருந்தது.

மதிய உணவு நேரத்தில் எம்.ஜி.ஆரிடம், "உங்களுக்கு ஏதாவது கோபமா? எதுவாக இருந்தாலும் சொல்லி விடுங்கள்." என்று உரிமையோடு கேட்டேன்.

சற்று மௌனமாக இருந்தவர்: "என்னை வச்சு ஏன் இன்னிக்கு முதல் ஷாட் எடுக்கலை?" என்று குழந்தையைப்போல் கேட்டபோது என் குழப்பமெல்லாம் தீர்ந்தது.

"இவ்வளவுதானா? இதற்கு போய் எங்களை இப்படி படுத்திவிட்டீர்களே. இனிமேல் உங்களை வைச்சுத்தான் படப்பிடிப்பு ஆரம்பமாகும்." என்று அவருக்கு சமாதானம் கூறினேன்.

பொதுவாக எம்.ஜி.ஆர். படம் என்றால், அவர் எவ்வளவு தாமதமாக வந்தாலும் அவர் வந்த பின்பே படப்பிடிப்பு ஆரம்பமாகும்.

### உடல் பலம்

'அன்பே வா' படத்தில் எம்.ஜி.ஆர். நெல்லூர் காந்தாராவுடன் சண்டையிடும் காட்சி ஒன்று உண்டு. சண்டையின் முடிவில் காந்தாராவை எம்.ஜி.ஆர். அலாக்காகத் தூக்கி வீசுவார். அது ஒரே ஷாட்டில் வரும்.

நெல்லூர் காந்தாராவ் நல்ல உடல்வாகும் கிட்டத்தட்ட முன்னூறு பவுண்டும் எடையுள்ளவர். உடற்பயிற்சி விதிகளின்படி அவரை எம்.ஜி.ஆர். தூக்கிப் பிடித்தால் மூன்று செக்கண்ட் தூக்கிப் பிடிக்கலாம். அதற்கு மேல் தூக்கி வைத்திருப்பது ஆபத்து.

ஆனால் அன்பேவாவில் எம்.ஜி.ஆர். காந்தாராவை தூக்கியபோது அந்தக்காட்சி ரசிகர்கள் மனதில் பதிய வேண்டும் என்பதற்காக, இன்னும் கொஞ்சம் பிடிச்சிரு என்று கமிரா ஓடிக்கொண்டிருக்கையில் குரல் கொடுத்தேன்.

மேலும் ஐந்து செக்கண்ட் வைத்திருந்த பின்பே காந்தாராவை கீழே போட்டார்.

அதுபோன்ற சாகசங்களை எம்.ஜி.ஆர். போன்ற அற்புத மனிதரால் மட்டுமே சாதிக்க முடியும். அதற்கு காரணம், அவர் உடலை கோயில்போல எண்ணக் கூடியவர். சென்னையில் இருக்கும்போது தவறாமல் உடற்பயிற்சி சாதனங்களையும் எடுத்து வந்துவிடுவார்.

திருலோக சந்தர் கூறியதை அருகில் உள்ள எம்.ஜி.ஆரின் கட்டான தோற்றம் உறுதிப்படுத்துகிறது அல்லவா.

**மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்—அது முடிந்த பின்னாலும் என் பேச்சிருக்கும்!**



எம்.ஜி.ஆர்.

### விக்னேஷ் ஜோடிகள்

விக்னேஷ் நடிக்கும் புதிய படம் ஒன்றுக்கு 'பொண்ணு' என்று பெயரிட்டுள்ளனர். இப்படத்தில் விக்னேசுக்கு இரண்டு ஜோடிகள். அஞ்சு அரவிந்த், இந்து. இசையமைப்பாளர் எம்.எஸ். விஸ்வநாதனும் இப்படத்தில் முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.

தலைவாசல் விஜய், வையாபுரி, விஜய் கிருஷ்ணராஜ், விஜயசந்திரிக்கா, சபீதா ஆனந்த், பேபி சுபாஸ்ரீ ஆகியோரும் நடிக்கின்றனர்.

'செல்லக்கண்ணு' படத்தை இயக்கிய ஜெயராம் இப்படத்தை இயக்குகிறார். இசை: தேவா.

சே…

'சேது… இயக்கி வ… அதியமா… கிறார்.

### பெண் குழந்தை

கவர்ச்சி நடிகை ஜோதிலட்சுமிக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது. அதனை தன் உறவினர் ஒருவரிடம் கொடுத்து வளர்க்கச் சொல்லியிருக்கிறார். குழந்தை பிறந்தது என்று தெரிந்தால் கவர்ச்சி குலுக்கலுக்கு மவுசு இல்லாமல் போய்விடுமாம்.





பிரபு-தேவயானி
படம்: என் உயிர் நீதானே

### மணமகன் கிடைச்சாச்சு

'ஜென்டில்மேன்' படத்தில் 'பார்க்காதே பார்க்காதே பஞ்சாங்கத்தை பார்க்காதே என்று பாடி அர்ஜுனுடன் குழைந்துதிரியும் பாத்திரத்தில் நடித்தவர் சுபாஸ்ரீ

தெலுங்கில் கவர்ச்சி காட்டிய சுபாஸ்ரீயை அங்குள்ள தொழிலதிபர் ஒருவருக்கு பிடித்துவிட்டது. தூண்டில் வீசினார். மீன் சிக்கியது. திருமணமும் நடந்தேறிவிட்டது. இரகசியமாக வைத்திருக்கிறார் சுபாஸ்ரீ.

### அம்பிகாவுக்கு சிபாரிசு வடிவேலு சரண்

நகைச்சுவை நடிகர் வடிவேலுவை தன் பிடியில் வைத்திருக்கிறார் அம்பிகா. கிசுகிசுவாக வெளியாக இப்போது பரகசியமான சமாச்சாரம் இது.

வடிவேலு நடிக்க வருவதற்கு முன்னரே அம்பிகாவின் பரம ரசிகர். ஊரில் தரை ரிக்கற்றில் படம் பார்க்கும்போது அம்பிகாவைப் பார்த்து ஜொள்ளுவிட்டவர்.

வடிவேலு நடிகராக பிரபலமானபோது அம்பிகா அமெரிக்காவில். மீண்டும் திரையுலகில் வலம்வர வந்த அம்பிகாவுக்கு போதிய வரவேற்பு கிடைக்கவில்லை.

தன் முன்னாள் தோழர்களான நடிகர்களை நாடினார். அவர்களில் சிலர் அவரிடம் மீண்டும் பலன் பெற்றுக் கொண்டனர். ஆனால் தமது படங்களில் சிபாரிசு செய்யவில்லை.

அப்போதுதான் வடிவேலு தனது ரசிகர் என்பதை அறிந்துகொண்டார் அம்பிகா. அவரை அழைத்துச் சந்தித்தார். அம்பிகாவை நேரில் கண்டதும் வைகைப் புயலுக்கு புல்லரிப்பு. புல்லரிப்பை மெல்ல மெல்ல போக்கினார் அம்பிகா.

மாயம் என்ன செய்தாரோ அம்பிகா? வைகைப்புயல் வசமாகிவிட்டது. பல படங்களில் நடிப்பதுடன், வியாபாரம் செய்தும் பல கோடிகளுக்கு அதிபதியாக இருப்பவர் வடிவேலு. அதனால் இறுக்கி கொக்கி போட்டுவிட்டாராம் அம்பிகா.

வடிவேலுவின் சிபாரிசில் சேதுபதி சீமையிலே என்ற படத்திலும் நடிக்கிறார் அம்பிகா. இப்படத்தின் நாயகரான ராஜ்கிரணிடமும் அம்பிகாவை நல்ல விதமாக அறிமுகம் செய்திருக்கிறாராம் வடிவேலு.

### தயாராகிறது 'அந்தப்புரம்'

'சொர்ணமுகி' படத்தில் பார்த்திபனும், பிரகாஷ்ராஜும் இணைந்து நடித்தனர். சுமாராக ஓடியது.

இன்னொரு படத்திலும் இருவரும் இணைந்து நடிக்கின்றனர். அப் படத்திற்கு 'அந்தப்புரம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கதாநாயகியாக நடிப்பவர் செந்தர்யா. இப்படத்தை இயக்குபவர் தெலுங்கு இயக்குநர் கிருஷ்ணாவம்சி. இசை: இளையராஜா.

இப்படத்தை தயாரிப்பவர் பிரகாஷ்ராஜ். பாலசந்தரின் படமான 'டூயட்' படத்தில் அறிமுகமானதால் அந்த நன்றியுடன் தனது பட நிறுவனத்திற்கு பெயர் சூட்டியுள்ளார். 'டூயட் சினிமா' என்பதுதான் அவர் வைத்துள்ள பெயர்.

* அடுத்த வருடம் விஜய், ஏ.வி.எம்., கவிதாலயா, ஜீ.வி. ஃபிலிம்ஸ் ஆகிய பெரிய நிறுவனங்கள் தயாரிக்கும் படங்களில் நடிக்கவிருக்கிறார்.
* மலேஷியா வாசுதேவன் மகன் யுகேந்திரன் படத்தில் முதலில் நாயகியாக நடிக்கவி… பதிலாக தற்போது சிம்ரான் நடித்து வ…
* பிரபுதேவா தெலுங்கில் நடித்த 'லவ் … 'நீ எனக்கு உயிரம்மா' என்ற பெயரி… வெளியாகவுள்ளது.
* 'பூவெல்லாம் கேட்டுப்பார்' படத்தில் சூ… நடித்து வரும் நக்மாவின் கடைசித்… அமிதாப்பச்சன் தயாரிக்கும் புதிய படமொ…
* 'சக்தி' தொலைக்காட்சித் தொடரில் அரு… நடிக்கும் ஜெகன் நிவாஸும், கோபா… நடிக்கும் ஷியாம் கணேஷும் 'என்ஜினி… வருகிறார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

## ...துபதி சீமையிலே

...தி சீமையிலே' என்னும் புதிய படத்தை ...கிறார் சீமான். இயக்குநர் கே.எஸ். ... இப்படத்தை தயாரிக் ... ராஜ்கிரன் ஜோடியாக தேவயாணி நடிக்கிறார். மற்றும் அம்பிகா, வடிவேலு, சந்திரசேகர், இளவரசி ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: தேவா.




ரஜினியின் கண்டுபிடிப்பான ப்ரியாராமன், கவர்ச்சி நடிப்பில் ...த எல்லைக்கும் செல்ல தயாராக இருக்கிறார். அதற்காக அவர் கேட்கும் ...ம் இந்திய மதிப்பில் ஐந்து இலட்சம். தயாரிப்பாளர்களுக்கு தலை சுற்றுகிறதாம்.

# காதோடு சொல்லுகிறோம்

சுந்தரமான இயக்குநருக்கு மூன்றெழுத்து நடிகைகள் என்றால் உருக்கம். 'பூ' நடிகையை ஏற்கனவே காதலித்துக்கொண்டே இருக்கிறார். இடையே மூன்றெழுத்து ரம்ப நடிகையுடன் உல்லாசித்தார். இப்போது மூன்றெழுத்து சுவாச நடிகைதான் இயக்குநரின் சந்தோசங்களைப் பகிர்ந்து கொள்ளுகிறார். 'பூ' நடிகைக்கும் மூன்றெழுத்து ராசியில்லை. நடிகரானால் என்ன, நடிகையானால் என்ன மூன்றெழுத்து என்றால் 'பூ' நடிகைக்கு எட்டாம் பொருத்தம்.

நட்சத்திர தம்பதியான மஞ்சள் நடிகையும், அவர் மகளான 'ப்ரி' நடிகையும் சூப்பர் ஸ்டாருடன் பேசி சான்ஸ் பெற்றுவிட்டார்கள். 'ப்ரி' நடிகை நடிக்க இருந்த பாத்திரத்தில் மகேஸ்வரி நடிக்க இருந்தாராம். வாய்ப்புப் போனதால் மகேஸ்வரி புலம்புகிறாராம். "தாயும் மகளும் 45 நிமிஷத்திற்குள் சூப்பர் ஸ்டாரிடம் சான்ஸ்வாங்கி விட்டார்களே, இவர்கள் கதையை அம்பலமாக்காமல் விடமாட்டேன்." என்று சபதம் செய்து கொண்டிருக்கிறாராம்.

பெயரில் ஸ்ரீ கொண்டிருக்கும் வித்யமான நடிகை இந்திய மத்திய அமைச்சர் ஒருவரை அடிக்கடி சந்திக்கிறாராம். எரிபொருளோடு தொடர்புடைய அந்த அமைச்சருக்கு மார்க்கெட் டல்லான நடிகைகள்மீது பாசம் உண்டாம். நடிகையின் சேவையில் மயங்கிய அமைச்சர் சமையல் வாயு கோட்டா கொடுத்து நடிகையின் பொருளாதார உயர்வுக்கு உதவியுள்ளாராம்.

'காலமெல்லாம் காதல் வாழ்க' என்று பிரபலமான நாயகி 'கா'நடிகர் புராணம் பாடித்திரிந்தது தெரிந்ததே. இருவரும் மூன்றெழுத்து படத்தில் நடித்து வருகின்றனர் என்பதும் தெரிந்ததே. படப்பிடிப்பு வெளியூர்களில் நடக்கும்போது, படப்பிடிப்பு முடிந்ததும் கார்த்திக் அறைக்குச் செல்கிறாராம் நடிகை. கார்த்திக்கின் அணுகுமுறைகள் ரொம்பவும் கவர்ந்துவிட்டதால் புராணத்தில் தொனி கூடியிருக்கிறதாம். இதனை அறிந்த மூன்றெழுத்து 'மு' நடிகர் 'வசியமருந்து கொடுத்து விட்டார்' என்று 'கா' நடிகரை திட்டுகிறாராம்.

**முகப்பில்**

மக்கள் திலகம்

**எம்.ஜி.ஆர்**

ஐஸ்வர்யா ராய்




விஜயகாந்த்-ரோஜா
படம்: வீரம் விளைஞ்ச மண்ணு



"ஆடிக் கலக்கும் ஆட்டம்—அதில் ஆணும் பெண்ணும் நாட்டம்!"

தேவயாணி-அஜித்-ஹீரா
படம்: தொடரும்

## கண்ணைத் தோண்டலாமா?

'சொல்லாமலே' காதலுக்காக நாக்கைத் துண்டிக்கிறார் லிவிங்ஸ்டன். இப்படியெல்லாம் படத்தில் காண்பிக்கலாமா? என்று சர்ச்சைகள் கிளம்பின.

இப்போது விஜய் நடிக்கும் 'துள்ளாத மனமும் துள்ளும்' படத்தின் கடைசிக் காட்சியில் தன் கண்களை விஜய் தோண்டுவதுபோல கதை பண்ணியுள்ளனராம். காதலியைக் காணாத கண்கள் எதற்கு? என்று தோண்டுகிறாராம்.

இந்த கிளைமாக்ஸ்சை வைத்தால் சர்ச்சைகள் கிளம்பும். ரசிகர்களும் ரசிகைகளும் ஏற்றுக் கொள்வார்களா? என்ற குழப்பத்தில் இருக்கிறாராம் விஜய். அதனால் கிளைமாக்ஸ் மாற்றப்படலாம்.

## பிரபுதேவா சீற்றம் நாயகிக்கு கல்தா!

பிரபு தேவா நடிக்கும் புதிய படங்களில் ஒன்று 'டைம்'. இப்படத்தில் இரண்டு மும்பாய் அழகிகள் நடிக்க வந்தது ஏற்கனவே நாம் தெரிவித்த செய்தி.

அதில் ஒருவர் பெயர் மேனகா. வெண்ணெய் கட்டி மாதிரி இருந்த மேனகாவுடன் நடன ஒத்திகையில் விஷமம் பண்ணியிருக்கிறார் நடனப் புயல். இடம் கொடுக்க மறுத்திருக்கிறார் மேனகா.

நேராக இயக்குநரிடம் சென்ற புயல், கதாநாயகியாக மேனகா நடிக்கக்கூடாது. உடனே தூக்குங்கள் என்று உத்தரவு போட்டிருக்கிறார்.

இப்படியான உத்தரவுகளை கதாநாயகர்கள் ஏன் போடுவார்கள், எதற்கு துள்ளுவார்கள்? என்பதை நன்கறிந்த இயக்குநர் சமாதானம் செய்ய முயன்றிருக்கிறார். அது புதுப் பொண்ணு. நான் பேசிப்பார்க்கிறேன். இனிமேல் பக்குவமாக நடந்துக்கும்' என்று கூறிப்பார்த்தாராம்.

'அதெல்லாம் முடியாது அந்த நடிகையை தூக்கினால் தான் நான் நடிப்பேன்' என்று வெட்டொன்று துண்டுரெண்டாக கூறிவிட்டார் புயல். அதனால் அந்த நடிகை நீக்கப்பட்டு விட்டார்.

## ...விசிட்

...கும் 'மௌனமே' ... தேவயாணிக்குப் ...ார்.

... படம், தமிழில் ...ாழிமாற்றப்பட்டு ...

...க்கு ஜோடியாக ...கை ஜோதிகா, நடிக்கவுள்ளார்.

...ற பாத்திரத்தில் ...ற பாத்திரத்தில் ...டத்தில் நடித்து

*கன்னடத்தில் 'ஆஹா' என்ற புதிய படமொன்று தயாராகி வருகிறது. இது தமிழில் வந்த 'ஆஹா' அல்ல. இது பல கொலைகள் நிகழும் மர்மப் படம்.

* 'மன்னவரே சின்னவரே' படத்தை அடுத்து தாணு தயாரிக்கும் படத்தை இயக்குபவர் ராஜீவ்மேனன். இப்படத்திற்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார்.

* 'கரிசல் காட்டுக் காதல்' படத்தில் முதலில் அஜித்-சுவலட்சுமி ஜோடியாக நடிப்பதாக இருந்தது. அஜித் ஆஸ்பத்திரியில் இருப்பதால் அவருக்குப் பதிலாக அப்பாஸ் நடிக்கிறார்.

* தமிழில் 'டைம்' என்ற படத்தை இயக்கி வரும் தெலுங்கு இயக்குநர் கீதா கிருஷ்ணா, இந்திப் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார். இப்படத்தை அமிர்ஜான் இயக்குகிறார்.

* பிரபு-ரேவதி- ஜெயராம் நடித்த 'பிரியங்கா' படம் கன்னடத்தில் தயாராகி வருகிறது. பிரபு நடித்த வக்கீல் வேடத்தில் கன்னடத்தில் பிரகாஷ்ராஜ் நடிக்கிறார்.

## ரம்யா வரவில்லை — படப்பிடிப்பு தாமதம்

கார்த்திக்கை தனியாக சந்தித்து அவரது அன்பை சம்பாதித்தது முதற் கட்டம். தெலுங்கு படவுலகில் ரம்யா கற்று வந்த திறமைகளைக் கண்டு கார்த்திக்கே பொறி கலங்கிப்போனார்.

ரம்யாவை 'அத்தை மகன்' படத்தில் தனது ஜோடியாக நடிக்க வைத்தார். அனுசரித்து நன்றாகத்தான் நடித்து வந்தார்.

படையப்பாவில் ரஜினியுடன் நடிக்க வந்தது வாய்ப்பு. அத்தை மகனுக்கு கொடுத்த திகதிகளை படையப்பாவுக்கு ஒதுக்கிவிட்டார். இதனால் 'அத்தை மகன்' இயக்குநர் ரம்யாவுக்கு பதிலாக வேறு நடிகையைப் போட முடிவு செய்திருக்கிறார்.

பழகிய தோஷம் காரணமாக கார்த்திக் தான் இயக்குநரிடம் பேசி முடிவை தள்ளிப்போட வைத்திருக்கிறார். அத்தை மகனை திருப்தி செய்ய ரம்யா வருவாரா?

## விஜயகாந்த் படம்

'புதுவசந்தம்', 'பூவே உனக்காக' 'சூர்யவம்சம்' உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' ஆகிய வெற்றிப் படங்களை வழங்கியவர் விக்ரமன்.

விக்ரமன் இயக்கத்தில் நடிக்க முன்னணி நடிகர்கள் பலர் ஆவலாக உள்ளனர். ஆனாலும் விஜயகாந்த்துக்கே அந்த வாய்ப்பு.

விக்ரமன் அடுத்து இயக்கும் படமான 'கவுரவர்' படத்தின் நாயகன் விஜயகாந்த் தான். நாயகி மற்றும் நடிகர்கள் விபரம் விரைவில் வெளியாகும்.

www.padippakam.com

# ந ம் பி க் கை

துப்பாக்கி கூவி,
செல் முழங்கி,
சப்பாத்துச் சத்தத்தில்
விடியும் காலம்
எப்போது எம் தேசத்தில்
முடியும்?
**
எம்மை நாமே
கைதியாக்கி...,
எம் இல்லங்களே
சிறையாகின்றன...!
**
உறவுகளை நினைக்கவோ,
நிலவு வானை இரசிக்கவோ,
இரவுகளில் முடிவதில்லை!
**
நம்புகிறோம்
இரவுகளின் முடிவில்
தவறுவதில்லை ஒரு
விடியல்!


எஸ். கார்த்திக்-
கரடியன் ஆறு.



# மக்கள் திலகம்



# தேன் கிண்ணம்


எம். ஜி. ராமச்சந்திரன் MGR

# தனிமையில் இ(ற)ருக்க விடு!

இந்த பட்ட மரத்தை
இன்னும் ஏன்
சுரண்டுகின்றாய்?
பச்சையுள்ளதா
எனப் பார்க்கவா?
**
விழுதுகள்
இறக்க வேண்டிய
வயதில்
வேரும் இலையும்
இற்ற நிலையில்
நான்...!
**
வெந்த புண்ணில்
வேல் பாய்ச்சவதுதான்
உன்
வேலையாய்ப்
போய்விட்டது!
**
உன் கடிதக்
கைகள்
ஏன்
இன்றுமின்றும்
உசுப்பி உசுப்பி
என் உறக்கத்தைக்
கலைக்கின்றன.
**
தொண்டைக்குள்
துடிக்கும்
இந்த ஜீவனுக்கு
(கொதி)நீருற்றாதே!
**
இறப்பிலாவது
நிம்மதி கொடு.
நான்
நானாகவே
இறக்க வேண்டும்!

மாரிமுத்து யோகராஜன்-
மட்/ ஆசிரியர்
கலாசாலை.

# அங்கும்...

செவ்வாய்க் கிரகத்தில் மனிதன்
குடியேறலாமாம்...!
ஆராய்ச்சி செய்கிறார்கள்.
விஞ்ஞானிகள்- வேண்டாம்
இன்னும் ஒரு கிரகம் எமக்கு!
ஏனென்றால் அங்கும்
தமிழன் குடியேறிவிடுவான்-
அகதியாக!

சசிகலா- யாழ்.

# ஷெல்-சொல்

நேற்று அகதிகள்
ஷெல்லடியில்!
இன்று வந்தேறுகுடிகள்
சொல்லடியில்
நாளை
......?

இன்னும் மௌனமாய்
எங்கள் தலைவர்கள்!

ரோஜா ஆனந்தராஜா-
பதுளை.

டிசம்பர் 24. மக்கள் திலகம் எம். ஜி. ஆர். நிரந்தர ஓய்வுக்காக தன் சிந்தனையை நிறுத்திக் கொண்ட நாள்!

எம். ஜி. ஆர். என்ற மந்திரச் சொல்லுக்கு இன்றுவரை வலிமை குறையவில்லை.

பட்டினி கிடந்தும், பல தடைகளைக் கடந்தும் பெரிய நடிகராகி, தமிழகத்தையே ஆளும் முதல்வரான தன்னம்பிக்கையின் சின்னம் எம். ஜி. ஆர்.

எம். ஜி. ஆர் நூறு ரூபாய் உதவி கேட்டு எழுதிய கடிதம் அருகில் காணப்படுகிறது. பின்னர் அவரிடம் உதவி கேட்டோர் எத்தனை பேர்? வாரித்தான் கொடுத்தார். ஈழப் போராளிகளுக்கும் கொடுத்தார். வெளியே தெரிந்தது சில கோடிகள். தெரியாமல் கொடுத்தது...! அதுதான் எம். ஜி. ஆர்.

# நான் கண்ட எம். ஜி. ஆர்.


## - ரஜினி காந்த் -

பெங்களூரில் 'நான் ஆணையிட்டால்' படம் திரையிடப்பட்டது.

எப்படியாவது மக்கள் திலகம் எம். ஜி. ஆர். சார் நடித்த அந்தப் படத்தை முதல் நாள், முதல் காட்சியே பார்த்துவிட வேண்டும் என்று எனக்கு ஒருவித வேகம்!

பகல் 3 மணி காட்சிக்கு காலையில் 7 மணிக்கே போய் டிக்கெட் கவுண்டர் முன்னால் வரிசையில் நின்றேன். எனக்கு முன்பு அந்தக் கியூவில் பலர் நின்று கொண்டிருந்தனர். நான் காலையில் 7 மணிக்கு சென்றே இவ்வளவு கூட்டம். அவர்களெல்லாம் முதல்நாள் இரவிலேயே வந்திருப்பார்கள் போலிருக்கிறது.

நேரம் செல்லச் செல்லக் கூட்டம் பெருகியது.


எம்.ஜி.ஆர்.

கியூ வரிசை நீண்டுகொண்டே போனது. டிக்கெட் கொடுக்கும் சமயத்தில் கூட்டம் அதிகமாகி அலை மோதியது. காலை முதல் கால் கடுக்க வரிசையில் நின்று கொண்டிருந்த என்னைக் கொஞ்சம் கொஞ்சமாக எங்கேயோ தள்ளிவிட்டுவிட்டார்கள்.

எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இன்றைக்கு எம். ஜி. ஆர். சார் படம் பார்க்காமல் வீட்டுக்குப்போகக்கூடாது என்று ஒரு பிடிவாதம் எழுந்தது.

ஒரு ஆள் பிளாக்கில் டிக்கெட் விற்றுக் கொண்டிருந்தான். அவனைச் சூழ்ந்து கொண்டு ஒருகூட்டம் நின்று கொண்டிருந்தது.

ஒரு ரூபாய் பத்து காசு டிக்கெட் விலை 15 ரூபாய். மற்றவர்கள் யோசிப்பதற்கு முன்பு பையில் கையைவிட்டு பணத்தை எடுத்து நீட்டினேன்.

எப்படியாவது பார்த்தே தீருவது என்ற பிடிவாதத்திற்கு வெற்றி கிடைத்து விட்டது.

காலையில் 7 மணிக்குச் சென்று மதியம் 3 மணிக்குப் படம் பார்க்கும் வரையில் எனக்குப் பசி வராமல் இருந்ததற்குக் காரணம்-

அப்போதெல்லாம் எம். ஜி. ஆர். சார் படம் திரையிடப்படும் தியேட்டர்களில் வரிசையில் நிற்பவர்களுக்கும், மற்றவர்களுக்கும் மன்றத்தினர் பானகம், நீர்மோர் கொடுப்பார்கள். அதை வாங்கி வாங்கி தாராளமாகக் குடித்து விட்டதால் பசி தெரியவில்லை.

படம் பார்த்து முடிக்கும்வரை ஒரே குஷிதான். அப்புறம்...?

வீட்டிற்கு எப்படி திரும்பிப் போவது என்கிற பயம்!

மளிகைச் சாமான்கள் வாங்குவதற்காக வீட்டில் கொடுத்த 15 ரூபாயையும் பிளாக்கில் டிக்கெட் எடுத்து செலவழித்து விட்டேன்.

எதிர்பார்த்தது வீட்டில் தாராளமாகக் கிடைத்தது. செமர்த்தியான உதை... அடிதான்...!

நான் நடிக்கவந்த புதிதில் அவரைப் பார்த்து பழகக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்காவிட்டாலும் ஸ்டண்ட் குரூப்பில் உள்ளவர்கள் அடிக்கடி எம். ஜி. ஆர். சாரைப் பற்றி சொல்லிக்கொண்டே இருப்பார்கள்.

ஒருமுறை-

'அலாவுதீனும் அற்புத விளக்கும்' படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. எந்தக் காட்சியாக இருந்தாலும் ஒரு மாறுதல் வேண்டும் என்று கருதி ஏதாவது செய்கின்ற நான், கீழே கிடந்த கத்தியை காலால் ஸ்டைலாக எடுத்தேன்.

"இந்தச் சமயத்தில் அண்ணன் எம். ஜி. ஆர். இருந்திருந்தால் உங்களை கண்டித்திருப்பார்கள். இப்படியெல்லாம் செய்யக் கூடாது!" என்று ஸ்டண்ட் மாஸ்டர் கூறினார்.

எனக்கும் ஒன்றும் புரியவில்லை.

"ஏன்... நான் என்ன தவறு செய்தேன்...?" என்று கேட்டேன்.

"கத்தி ஒரு ஆயுதம். கத்திச் சண்டை செய்வது ஒரு வித்தை. நடிப்பது நமது தொழில். எந்த தொழிலையும் வித்தையையும் பக்தியோடு செய்யவேண்டும். நீங்கள் கத்தியை அலட்சியமாகக் காலால் ஸ்டைலாக எடுப்பது பார்ப்பதற்கு வேண்டுமானால் நன்றாக இருக்கலாம். ஆனால், தொழிலையும் வித்தையையும் கேவலப்படுத்தும் வகையில் உள்ளது. இதைக் கண்டால் எம். ஜி. ஆர். சார் கோபப்பட்டிருப்பார்!" என்று அவர்கள் எனக்கு விளக்கமாகச் சொன்னார்கள்.

அதன் பின்புதான் நான் செய்தது தவறு என்பது புரிந்தது.

இப்படி எல்லோரும் பாராட்டிப் புகழ்கின்ற எம். ஜி. ஆர். சாரை, நேரில் கண்டு மனம் விட்டுப் பேச வேண்டுமென்று எனக்கு ஆசையாக இருந்தது.

எந்த ஊருக்குச் சென்றாலும் எல்லா ஊர்களிலும் நான் சந்திக்கின்ற இரசிகர்கள் பொதுமக்கள் பலர், "எம். ஜி. ஆரைப் பார்த்து விட்டீர்களா?" என்று அடிக்கடி கேட்பார்கள்.

'தர்மயுத்தம்' படத்தில் நான் நடித்துக் கொண்டிருந்த சமயம்.

7 மணிக்கு சந்திக்கலாம் என்று முதல்வர் எம். ஜி. ஆர். அலுவலகத்திலிருந்து தகவல் மாலை 5 மணிக்குத்தான் கிடைத்தது. அவசர அவசரமாக ஒரு மாலை வாங்கிக்கொண்டு ஆசை நிறைவேறப் போகின்றது என்கிற அக மகிழ்வோடு மாம்பலத்தில் உள்ள அவரது அலுவலகத்திற்குச் சென்றேன். அன்று அவரை சந்தித்தது என் வாழ்க்கையில் பெரும் திருப்பத்தையே உண்டாக்கியது. மாம்பலம் அலுவலகத்திற்குச் சென்ற என்னை எம். ஜி. ஆர். சார் சிரித்துக்கொண்டே வரவேற்றார். அவரோடு அதிக நேரம் பேசிக்கொண்டிருக்க முடியாது. நிறைய அலுவல்கள் உள்ளவர். சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு வந்து விடலாம் என்றுதான் நான் சென்றேன்.

மாலையைப் போட்டதும் மகிழ்ச்சியோடு என்னைக் கட்டிப்பிடித்து, தட்டிக்கொடுத்து வாழ்த்திவிட்டு, அருகில் உட்கார வைத்தும் கொண்டார்.

55 நிமிடங்கள் நான் அவரோடு பேசிக் கொண்டிருந்தேன். அந்த 55 நிமிடங்கள் வாழ்க்கையில் என்றும் மறக்க முடியாத ஓர் இனிய அனுபவம் என்று கூறவேண்டும்.

திரையுலகில் உள்ள என்னைப்போன்ற கலைஞர்கள் எப்படி இருக்க வேண்டும் என்று கூறினார்.

"இளைஞர்கள் ஆர்வத்தின் காரணமாக டூப் போடாமலே ஸ்டண்ட் செய்ய வேண்டும் என்று நினைப்பார்கள். நாம் ஆம்பிளை இல்லையா? நாமே செய்து பார்க்கலாம் என்கின்ற துடிப்பு அதிகமாக உங்களுக்கு இருக்கும். செட்டில் இருக்கின்ற சிலருக்காக ஆர்வத்தினாலோ, ஆவேசத்தினாலோ நீங்களே எல்லா ஸ்டண்ட் காட்சிகளிலும் நடிக்க வேண்டுமென்று நினைக்கக்கூடாது. அதனால் யாருக்கு இழப்பு என்பதை சிந்திக்க வேண்டும். ஏதாவது அடிபட்டு விட்டால் படப்பிடிப்பு பாதிக்கப்பட்டு பல நாட்கள் தள்ளி வைக்கப்படலாம். உங்களுக்கு காயம் என்பது மட்டுமல்ல. தயாரிப்பாளருக்கும் மற்ற அனைவருக்கும் அதனால் பெரும் கஷ்டம் ஏற்படும். பெரிய அளவு அடிப்பட்டு விட்டால் நிலைமை மிகவும் மோசமாகிவிடும். ஆகையால் ரிஸ்க் ஷாட்களில் நடிப்பதைத் தவிர்க்க வேண்டும்!"

வாஞ்சையுடன் ஒரு மூத்த சகோதரனைப் போல் இவ்வளவு பரிவோடு அறிவுரை கூற வேண்டிய அவசியம் என்ன?

அவர் பேசப் பேச நான் அவரோடு ஒன்றிப் போனேன். ரொம்ப சின்சியராக எனக்கு எம். ஜி. ஆர். சார் அ.:.பெக்ஷனோடு புத்திமதி சொன்னார்.

அத்துடன் என்னை அழைத்துச் சென்று "இது அண்ணா படம்." என்று அறைக்குள் இருந்த படங்களை காண்பித்தார்.

அவரைப் பிரிந்து வரும்போது இன்னமும் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்க மாட்டோமா என்று தோன்றியது. இதுதான் அவருக்கு உள்ள தனிச்சக்தி என நினைக்கிறேன்.


ரஜினி



படிப்பகம்

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

## முத்துப் பற்கள் கெட்டுப் போகலாமா?



"அம்மா, அம்மா பற்பசை எடுத்துத் தாருங்கள்" குழந்தை நல்லபிள்ளையாகக் கேட்கிறானே என்று சந்தோஷப்படத் தேவையில்லை. அவன் பற்பசை கேட்பது பல் துலக்குவதற்கல்ல; சாப்பிடுவதற்கு. மாதத்திற்கு 2,3 பேஸ்ட் வாங்க வேண்டிவரும்.

பற்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ள, பாற்பற்கள் முளைத்து, வளர்ந்த இரண்டாவது வயதிலிருந்தே குழந்தைக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். 6,7 வயதுகளில் இவை விழுந்து விடும் என்பதால் இவை முக்கியமான பற்கள் அல்ல என்று பெரும்பாலானோர் நினைத்திருப்பது சரியல்ல. பாற்பற்களில் ஏற்படும் சொத்தைபார்க்க அசிங்கமாக இருக்கும். பல்வலி ஏற்படும் என்பதைவிட தீமையும் உண்டு. தொற்று நோய் ஏற்படவும்,பற்கள் முன் கூட்டியே உதிர்ந்து பின்னாளில் வளரவிருக்கும் நிரந்தரப் பற்கள் வரிசை தப்பி வளரவும்கூட இந்தச் சொத்தை வழிவகுக்கும்.

2,3 வயதிலேயே பற்களைத் துலக்கும் முறையை ஒரு குழந்தையால் கற்றுக் கொள்ள முடியும்.

குழந்தைக்கு ஒரு வயது நிறைந்தவுடனேயே பல் வைத்தியரைப்பார்ப்பது நல்லது. இரண்டு வயது நிறைவடைவதற்கு முன்னால் கட்டாயம் பார்த்துவிட வேண்டும்.

குழந்தைக்கு ஒழுங்காகப் பல்தேய்க்கும் பழக்கம் வர சில குறிப்புக்கள்:

* பெற்றோர்களே காலையில் பல் துலக்காமல் தேனீர் குடிக்கக் கூடாது. குழந்தை தன் அம்மா, அப்பாவைத்தான் பின்பற்ற விரும்பும். எனவே பெற்றோர் காலையில் படுக்கையில் இருந்து எழுந்ததும் ஒழுங்காகப் பல்துலக்கும் பழக்கம் உள்ளவராக இருக்க வேண்டும்.

* 'பல் துலக்கலாமா, அப்புறம் பால் குடிக்கலாமா?' என்று சும்மா ஒரு பாட்டுப் பாடி, குழந்தை பல் துலக்கும் நேரத்தை வேடிக்கை நேரமாக மாற்றுங்கள்.

* பல் துலக்கியதும் குழந்தையைத் தூக்கிக் கண்ணாடி முன் காட்டி, "பாத்தியா, பல் எவ்வளவு அழகா பளீர்னு இருக்கு..." என்று சொல்லுங்கள்.

## பரிசு வென்றவர்



முரசின் பட்டுச்சேலை பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளில் ஒருவர் இவர்:-

**செ. மகிழினி, சோயா ஒழுங்கை, வவுனியா.**

## முகத்தில் பூசலாம்



● பட்டர், மாஜரின் சுற்றிவரும் காகிதங்களைத் தூக்கி எறிந்துவிட வேண்டாம். அதை எடுத்து உதட்டிற்கும், முகத்திற்கும் தடவுங்கள். முகத்தை, அரைமணிநேரம் கழித்து கழுவி விடுங்கள். முகம் பளிச்சென்றும், உதடுகள் ஈரப்பசையுடனும் இருக்கும்.

● சிலருக்கு நுளம்பு கடித்ததும் அந்த இடம் தடித்து விடும். உடனே உப்பைத் தண்ணீரில் கரைத்து, தடித்த இடத்தில் தடவ எரிச்சலும் வீக்கமும் குறையும்.

● வீட்டில் யாருக்காவது வெற்றிலை போடும் பழக்கமுண்டா? அப்படியானால் வெற்றிலைக் கறை எந்தத் துணியிலாவது பட்டிருக்கும். இந்தக் கறையைப் போக்க, எலுமிச்சம்பழத் தோலையோ அல்லது புளித்த மோரையோ தடவ கறை போய்விடும்.

## எண்ணெய்யில் வதக்காதீர்!

காய்கறிகளை எண்ணெயில் வதக்கி உண்பது உடலுக்கு நல்லதல்ல. வேக வைத்து உண்பதே சிறந்தது. கூட்டாகச் சமைத்து உண்பது சிறந்தது. வேக வைத்து நீரில் சத்து வீணாகும் காய்கறிகளை நீர்தெளித்து வதக்கி உண்ணலாம்.

கரட் போன்ற காய்கறிகளை வேக வைத்துச் சமைப்பதாக இருந்தால், வேக வைத்த நீரை இரசத்திற்குப் பயன்படுத்தலாம். எஞ்சிய காய்கறிகளைத் தூக்கி எறிந்துவிடாது, அவியல், சாம்பார் போன்றவற்றிற்குப் பயன்படுத்தலாம்.

பீட்ரூட், முள்ளங்கி இலைகளையும், கோலா தண்டையும் வீணாக்காது சூப் தயாரிக்கப்பயன்படுத்தலாம். அவை அதிக சத்துள்ளவை.

பூசணி விதைகளை வீணாக்காது குழம்பில் போடலாம். அல்லது உலர்த்தி அரிசியுடன் சேர்க்கலாம்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** EX

பெயர்:.......................

முகவரி:.......................

.......................

தொழில்:.......................

கையொப்பம்:.......................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 26-12-1998**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

### காத்தான்குடி வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான் **ஹாஜறா முத்தலிப்,**
**இல 44, தீன் வீதி, காத்தான்குடி-6**

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# கண்ணீரில் கரைந்த இரவுகள் 66

புவனா



## டயானாவுக்கு கிடைத்த சொத்து மதிப்பு

சாள்ஸ் தானாக முன்வந்து விவாகரத்து தந்தால் போதும் என்று மட்டுமே டயானா கருதினார். அத்தோடு தன் பிள்ளைகள் இருவரையும் தன்னிடமிருந்து பிரிக்கக்கூடாது என்பதுதான் அவரது முக்கிய நிபந்தனையாக இருந்தது.

டயானாவின் சட்ட வல்லுநர்களும், சிநேகிதிகளும் டயானாவின் முடிவை ஏற்கவில்லை.

"அரச குடும்பத்திடம் இருந்து ஒரு குறிப்பிட்ட தொகை நஷ்டஈடு கேட்க வேண்டும். வேல்ஸ் இளவரசி என்ற பட்டத்தை விட்டுக் கொடுக்கக்கூடாது" என்றெல்லாம் யோசனை கூறினார்கள். டயானாவின் மனதைக் கலைத்தார்கள்.

"உன் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கும் பணம் தேவை. அந்தஸ்து தேவை. நீ என்னதான் விரும்பினாலும், சாதாரண வாழ்க்கை நடத்த முடியாது. ஆகவே பெரும் பணம் தேவைப்படும்." என்றெல்லாம் அவர்கள் எடுத்துக்கூறினார்கள்.

"அரச குடும்பத்தை சும்மா விடக்கூடாது. உனக்குச் செய்த துரோகத்துக்கு அவர்கள் விலை தந்தேயாக வேண்டும்!" என்றும் கூறினார்கள்.

டயானாவின் மனதும் கரைந்தது. தன் சட்ட வல்லுநர்கள் மூலம் சில நிபந்தனைகளை விதித்தார். தனக்குச் சேரவேண்டிய தொகை பற்றியும் அறிவித்தார்.

அரச குடும்பத்தினர் உடனடியாக இணங்கவில்லை. அதனால் விவாகரத்து இழுபட்டது.

### சோகமான நாள்

இறுதியில் 1996 பெப்ரவரி 28ம் திகதி டயானா விவாகரத்துக்கு சம்மதிப்பதாக அறிவித்தார்.

அந்த அறிவிப்போடு டயானா கூறிய ஒரு வார்த்தை சாள்ஸை வியப்பில் தள்ளியது.

"விவாகரத்துக்கு நான் சம்மதித்த இந்த நாள்தான் எனது வாழ்க்கையில் மிக சோகமான நாள்" என்று கூறியிருந்தார் டயானா.

தானாக விவாகரத்து செய்யவில்லை, சாள்ஸ்தான் விவாகரத்துக்கு முன்வந்தார் என்று உலகறியச் செய்யும் டயானாவின் எண்ணம் நிறைவேறியது.

இது பற்றி தன் சிநேகிதி ஒருவரிடம் டயானா கூறுகையில்: "தாம்பத்திய வாழ்க்கையில் சாள்ஸிடம் ஏமாந்துபோனாலும், விவாகரத்தில் என் திட்டப்படிதான் எல்லாம் நடந்துள்ளன. நான் ஒன்றும் தான் நினைத்ததுபோல ஏமாளியல்ல என்பதை சாள்ஸ் புரிந்துகொண்டிருப்பார்!" என்றாராம்.

விவாகரத்துக்கான அலுவல்களை கவனிக்க சென் ஜேம்ஸ் மாளிகையில் இளவரசர் சாள்ஸ், டயானா உட்பட அரச குடும்பத்துக்கு நெருங்கியவர்கள் பலரும், சட்ட நிபுணர்களும் கூடினார்கள். சுமார் 45 நிமிடம் பலதரப்பட்ட விடயங்களை ஆராய்ந்தனர்.

அந்த 45 நிமிடங்களும் சாள்ஸும், டயானாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளவில்லை. முகத்தை தொங்கப்போட்டிருந்தனர்.

இக் கூட்ட முடிவில் டயானா வெளியிட்ட அறிக்கையைப் படித்த மகாராணி தன் வாயாலேயே கூறினார், 'டயானா துணிச்சல்காரிதான்!'

அந்த அறிக்கையில் டயானா கூறியிருந்தது இதுதான்: "இளவரசர் சாள்ஸின் வேண்டுகோளுக்கு இணங்க, வேல்ஸ் இளவரசி விவாகரத்துக்கு ஒப்புதல் அளிக்கிறார். பிள்ளைகள் தொடர்பான தீர்மானங்கள் எடுப்பது தொடர்பாக இளவரசி தொடர்ந்து தன் பங்கினை வகிப்பார். கென்சிங்டன் மாளிகையில் தொடர்ந்து தங்குவார்.

அத்துடன் அவரது அலுவலகங்கள் சென் ஜேம்ஸ் மாளிகையிலேயே தொடர்ந்து இருக்கும். 'வேல்ஸ் இளவரசி டயானா' என்றே அழைக்கப்படுவார்.

அறிக்கையைப் பார்த்து இளவரசர் சாள்ஸும் அரண்டுதான் போனார்.

சென் ஜேம்ஸ் மாளிகையில்தான் இளவரசர் சாள்ஸ் தங்கியிருந்தார். அது தெரிந்தும் அங்கேயே தன் அலுவலகம் இயங்கும் என்று டயானா கூறியிருந்தார்.

தன்னை வேண்டுமென்றே தர்மசங்கடத்திற்கு உள்ளாக்க விரும்புகிறார் டயானா என்பது சாள்ஸுக்கு புரியாமலில்லை.

தனக்குரிய ஜீவனாம்ச பணத்தை காலத்துக்குக்காலம் தராது, ஒரேயடியாக தந்துவிடுமாறு டயானா கோரினார்.



ஒரேயடியாக தரமுடியாது என்று அரச குடும்பத்தினர் கூறிவிட்டனர். விடாப்பிடியாக நிற்குமாறு டயானாவின் சட்டவல்லுநர்கள் ஆலோசனை கொடுத்தனர்.

### மொத்த பெறுமதி

நான்கு மாதங்கள் பேச்சுவார்த்தைகள் நடந்தன. இருபக்க சட்டவல்லுநர்களும் கூடிப் பேசினார்கள்.

இறுதியில் அரச குடும்பம் இறங்கிவந்தது. ஒரேயடியாக பணம், மற்றும் அவருக்குக் கொடுக்க வேண்டிய சொத்துக்களை தருவதற்கு சம்மதமளித்தனர்.



அவற்றின் பெறுமதி நம்மை மூர்ச்சையடைய வைக்கக்கூடியது.

ஒரு கோடியே எழுபது இலட்சம் பவுண். இன்றைய நம்நாட்டு பணமதிப்பில் 192 கோடியே பத்து இலட்சம் ரூபாய்கள்.

மாட்சிமை தங்கிய இளவரசி என்று டயானாவை அழைப்பதை சட்டப்படி அகற்றவேண்டும் என்றும் அரச குடும்பத்தினர் கூறினர்.

ஒரு கோடியே எழுபது இலட்சம் பவுண் பெறுமதியான சொத்துக்களும் பணமும் டயானாவுக்கு கொடுக்கப்படுவதை பெரிதாகப் போடுமாறு அரச குடும்ப வட்டாரத்தால் பத்திரிகைகளுக்குக் கூறப்பட்டது.

அதனால் அரச குடும்பத்தின் தாராள குணம் மெச்சப்படும் என்று நினைத்தனர்.

ஆனால் செய்தியைப் பார்த்த பலர், "ப்பூ... அரச குடும்ப சொத்துக்களின் பெறுமதியோடு ஒப்பிட்டால் இது கால்தூசுக்கு சமம்!" என்றுதான் கூறினார்கள்.

மாட்சிமை தங்கிய என்று அழைக்க முடியாது. ஆனால் அரச குடும்பத்தில் ஒருவராகவே தொடர்ந்து டயானா கணிக்கப்படுவார் என்று கூறப்பட்டது.

இந்த முரண்பாடான சம்பிரதாயத்தை கேலி செய்த டயானாவுக்கு, தன்னை 'மாட்சிமை தங்கிய' என்று அழைக்காததால் எவ்வித வருத்தமும் இல்லை.

### முடிவு

1996 ஜூலை 28ம் திகதி சட்டப்படியான விவாகரத்து அறிவிக்கப்பட்டது.

அன்றுதான் உலகைக் கவர்ந்த, தேவதையின் கனவுக் கல்யாணம் முடிவுக்கு வந்தது.

'ஜோடிப் பொருத்தம் கச்சிதம்' என்று பல கோடிக்கண்கள் பட்ட கல்யாணத்தின் ஜோடி இறுதியாகப் பிரிந்து கொண்டது.

பிரிவதற்கு முன்பாக இருவரும் அருகருகே இருந்தனர். டயானாவின் முகத்தில் மலர்ச்சியில்லை. முள்மேலே அமர்ந்திருப்பது போல அவர் காணப்பட்டார்.

சாள்ஸின் முகம் இருண்டு போய்க் கிடந்தது.

அப்போதும் கமராக்கள் ஓய்வில்லாமல் 'கிளிக்'காகிக் கொண்டிருந்தன.

மாபெரும் கல்யாண ஜோடிகளின் பிரிவுச் செய்தியை, பிரிவின் இறுதித் தருணத்தை புகைப்பட வாயிலாக மட்டுமன்றி, தொலைக்காட்சிகள் வழியாகவும் உலகெங்கும் மக்கள் கண்ணுற்றனர்.

உண்மையாகவே பலர் கண்ணீர் விட்டனர். தலையில் அடித்துப் புலம்பினர்.

டயானா–சாள்ஸ் ஜோடிப் பொருத்தத்தால் எத்தனை தூரம் அவர்கள் கவரப்பட்டனர் என்பதற்கு, பிரிவுக்காக அவர்கள் விட்ட கண்ணீரே சான்று.

தங்கள் வீட்டில் நடந்த சோகமான சம்பவம் போன்றே பலரும் எண்ணிக் கலங்கினார்கள்.

பிரிட்டனிலோ, மேலைத்தேய நாடுகளிலோ மனப்பொருத்தம் இல்லையானால் விவாகரத்துச் செய்வது சர்வசாதாரணம்.

அப்படியிருந்தும் சாள்ஸ்-டயானா திருமண உறவு முறிந்ததை பலரால் ஜீரணிக்க முடியவில்லை.

டயானா புது வாழ்க்கைக்குள் காலடி எடுத்து வைத்தார்.

**(அடுத்த வாரமும் வரும்)**



படிப்பகம்





யந்திர சாலை யென்பார்
எங்கள் துணிக ளென்பார்
மந்திரத் தாலே யெங்கும்- கிளியே!
மாங்கனிவீழ்வ துண்டோ?

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# ஈசாப்பின் நீதி

சிறுவர்களுக்காக நீதிக் கதைகள் பலவற்றை எழுதியவர் ஈஸாப். அவருடைய நீதிக் கதைகள் சிறுவர்களுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் வழிகாட்டியாக விளங்குகின்றன.

ஒரு நண்பர் ஒருவருடன் ஈசாப் தமது நாட்டின் வீதியின் ஒரமாக அமர்ந்திருந்தார். அந்த வழியாகச் சென்று கொண்டிருந்த ஒருவன் ஈசாப்பிடம் வந்தான்.

"உங்கள் நாட்டில் எப்படிப்பட்ட மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்?" என்று கேட்டான் அவன்.

ஈசாப் அவனைப் பார்த்து,

"நீங்கள் எந்த நாட்டில் இருந்து வருகிறீர்கள்? உங்கள் ஊரில் எப்படிப்பட்ட மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்?" என்று கேட்டார்.

அதற்கு அவன் முகத்தைச் சுளித்துக் கொண்டு,

"நான் ஆர்கோஸ் என்ற நாட்டில் இருந்து வருகிறேன். அங்குள்ள மக்கள் அனைவரும் திருடர்கள். சுயநலவாதிகள். எந்நேரமும் சண்டையிடுவார்கள். மிகவும் மோசமானவர்கள்," என்று கூறினான்.

ஈசாப் அவனைப் பார்த்து,

"உங்களுடைய நாட்டு மக்களைப் போலத்தான் இந்த நாட்டு மக்களும் மோசமானவர்கள்," என்று கூறினார்.

சிறிது நேரம் கழித்து இன்னொருவன் அங்கு வந்து ஈசாப்பிடம் இதே கேள்வியைக் கேட்டான்.

அவன் எந்த இடத்தில் இருந்து வருகிறான் என்றும் அவனுடைய நாட்டு மக்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதையும் கூறும்படி ஈசாப் கேட்டுக்கொண்டார்.

அதற்கு அவன்,

"நான் ஆர்கோஸ் என்ற நாட்டில் இருந்து வருகிறேன். அங்கு வாழ்ந்து வரும் மக்கள் மிகவும் நல்லவர்கள். மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனப்பான்மை கொண்டவர்கள். அவ்வளவு நல்ல மக்களை விட்டு



வந்தற்குக் காரணம், எனது மேல் படிப்புக்காகத்தான்." என்று கூறினான் அவன்.

ஈசாப் அவனிடம்

"நண்பா! உன் நாட்டு மக்களைப் போலவே இவர்களும் நல்லவர்கள். இவர்களும் உனக்கு உதவி செய வார்கள்," என்று கூறினார்.

ஈசாப் இருவருக்கும் வெவ்வேறு விதமாகக் கூறியதை ஆச்சரியத்துடன் பார்த்தார் நண்பர்.

உடனே ஈசாப் நண்பரிடம்,

"கெட்டவன் எங்கு சென்றாலும் கெட்டவர்களுடைய சேர்க்கையைத் தான் நாடிச் செல்வான். நல்லவன் எங்கு சென்றாலும் நல்லவர்களுடைய சேர்க்கையைத்தான் நாடுவான். முன்பின் தெரியாத என்னிடம் தனது நாட்டைப் பற்றிக் குறை கூறியவன் எங்கு சென்றாலும் குறைதான் கண்டுபிடிப்பான். அதனால்தான் அப்படிக் கூறினேன்!" என்று சொன்னார்.

## அதிசயம் - ஆனால் உண்மை!



↑ பிரான்ஸில் 1684ம் அண்டு மோரான் என்பவருக்கு, தீ வைத்த குற்றத்திற்காக 100 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. அப்போது அவருக்கு வயது 17. 100 வருடங்களும் அவர் சிறைத்தண்டனை அனுபவித்தார்.

→ பிலிப்பைன்ஸ் நாட்டில் 1934ம் அண்டு 6.36 கிலோ எடையுள்ள மிகப் பெரிய முத்து கிடைத்தது. இதன் நீளம் 34 செண்டி மீட்டர். விட்டம் 14 செண்டிமீட்டர். உலகிலேயே மிகப் பெரிய முத்து இதுதான்.





← இன்றும் நல்ல நிலையில் இயங்கக் கூடிய நிலையில் உள்ள மிகப் பெரிய காற்றாடி இயந்திரம் இங்கிலாந்தில் சர்ரே என்ற இடத்தில் உள்ளது. இது1665ம் ஆண்டு உருவாக்கப் பட்டது.



↑ இங்கிலாந்தில் 1957ம் ஆண்டுவரை 'மா' என்ற பூனை 34 வயதுவரை வாழ்ந்தது. மிக அதிக ஆண்டுகள் உயிர்வாழ்ந்த பூனை இதுதான்.

## வாரம் ஒரு நாடு

தலைநகர்- இலண்டன்
பரப்பு- 2,44,108 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை- 5.83 கோடி
மொழி - ஆங்கிலம், வெல்ஷ், ஸ்கொச் கேலிக்
சமயம் - கிறிஸ்தவம்.
எழுத்தறிவு - 99%
நாணயம் - ஸ்டேர்லிங் பவுண்ட்
தனிநபர் வருமானம் - 17,760 டொலர்.

**அமைவிடம்:**

ஐரோப்பாவில் மிக முக்கியமானதோர் இடத்தை வகிக்கிறது பெரியபிரித்தானியா. இதில் இங்கிலாந்தும் பிரதானமானது. அத்லாந்திக் பெருங்கடலில் ஃபிரான்ஸ நாட்டுக்கு வடக்கேயும், ஜெர்மன் நாட்டுக்கு மேற்கேயும் அமைந்துள்ளது. ஆங்கிலக் கால்வாய் என்ற குறுங்கடல் ஃபிரான்ஸையும் இங்கிலாந்தையும் பிரிக்கிறது.

**வரலாறு:**

இங்கிலாந்து, வேல்ஸ் மற்றும் ஸ்கொட்லாந்து சேர்ந்த பகுதிகளே பெரிய பிரித்தானியா என்றழைக்கப்படுகிறது. பிரிட்டனுடன் ஒன்றாக இருந்த அயர்லாந்து 1921ம் ஆண்டு பிரிந்தது. எனினும் வட அயர்லாந்து



### பெரிய பிரித்தானியா

இங்கிலாந்தின் ஒருபகுதியாக உள்ளது.

பாராளுமன்றமே அதிகாரம் படைத்தது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரே பிரதமர் ஆகிறார். இவரே ஏனைய அமைச்சர்களை நியமிக்கிறார்.

**பொருளாதாரம்:**

மொத்தப்பரப்பின் 78 சதவீதமும் விவசாயம் செய்யப்படுகிறது. கோதுமை, பார்லி, உருளைக் கிழங்கு முக்கிய விளைபொருட்கள். நிலக்கரி முக்கிய கனிப்பொருள். எண்ணெய் வளமும் உண்டு. தொழிற்துறையில் பெரு வளர்ச்சி கண்டுள்ளது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 26.12.1998.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 276**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 274

**பரிசுக்குரியவர்:**
அ.அரிகரன்,
காளி கோயில் வீதி, கிரான்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எஸ். ருமேஸ், தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை. | த. தசரதன், சந்திவெளி சித்தி வினாயகர் வித்., மட்டக்களப்பு. |
| செல்வி நிஷாந்தினி ரட்ணம், பலாங்கொடை த.ம.வித்தியாலயம், பலாங்கொடை. | மு.லா.கா. வஸீலா அப்பாஸ், கமு/ஸம்ஷ் மத்திய கல்லூரி, மருதமுனை. |
| சர்வலிக்னோபன் சந்திரசேகரம், வெஸ்லி கல்லூரி, கொழும்பு. | செல்வி பி.நிரோசினி, புளியாவத்தை தமிழ் மகா வித்தியாலயம், டிக்கோயா. |
| எல். ஃபத்திமா றிம்ஸா, அல்-மனார் தேசிய பாடசாலை, கண்டி. | பா. அபராதிதன், மட்/மகிழவட்டவான் ம.வி., ஆயித்தியமலை, செங்கலடி. |
| என். ரூபிணி, ரோ.க. தமிழ் கலவன் பாடசாலை, வத்தளை. | எம். நிஸ்தார், அப்துல் மஜீது வித்தியாலயம், கிண்ணியா-01. |

## கடலைப் பற்றி....

ஐக்கிய நாடுகள் சபை 1998 ஆண்டை 'சர்வதேச சமுத்திர ஆண்டு' எனப் பிரகடனப்படுத்தியிருந்தது. உலக சனத்தொகையில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் கடற்கரை ஓரங்களில் வசிக்கிறார்கள். மேலும் கடல், சமுத்திரம் பற்றிய தகவல்கள் இதோ:

* கண்டங்களைச் சூழ்ந்திருப்பவை சமுத்திரங்கள். கடல் என்பது சமுத்திரத்தின் ஓர் அங்கம்.
* சமுத்திரத்தின் சராசரி ஆழம் 3500 மீட்டர் (11500 அடி)
* சமுத்திரத்தின் மிக ஆழமான இடம் மத்திய பசிபிக் சமுத்திரத்தில் குவாம் தீவுக்கு அருகே உள்ள மரியானா ஆழி.
* கடல் மைல் என்பது 1852 மீட்டர் தூரத்தைக் குறிக்கும்.
* கடல் நீரோட்டங்கள், கடற்படுகையில் இருக்கும் பாறைகள், கடலில் வாழும் மீன், ஏனைய உயிரினங்களைப்பற்றி ஆராய்தல் 'ஓஷனோகிரஃபி' எனப்படும்.
* 'ஓஷியானா' என்பது பசிபிக் சமுத்திரத்தில் உள்ள தீவுகளையும் அவற்றிக்கு அருகேயுள்ள தீவுகளையும் குறிப்பது.



### அதிக உற்பத்தி

உலகிலேயே அதிகளவு பால் உற்பத்தி செய்யும் நாடு எது தெரியுமா? நமது அண்டை நாடான இந்தியா தான்.

அது மட்டுமன்றி உலகில் அதிக எண்ணிக்கையான கால் நடைகளை கொண்ட நாடும் இந்தியாதான்.

### ஆமை கலண்டர்

பப்புவா நியூகினிய நாட்டு பழங்குடி மக்களுக்கு கலண்டர் முறை தெரியாது. அங்கு ஒவ்வொரு வருடமும் கிறிஸ்துமஸ் காலத்தில் கடற்கரைக்கு முட்டையிட ஆமைகள் கடற்கரைக்கு வருவதைக் கொண்டு தங்கள் வயதைக் கணக்கிடுவார்கள்.

## முதன் முதலில்

இயேசு கிறிஸ்து மனிதனாகப் பிறந்த நாளை கிறிஸ்துமஸ் என்று ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் கொண்டாடுவார்கள்.

கிறிஸ்துமஸைச் கொண்டாடும் கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்துமஸ் வாழ்த்துமடல்கள் வந்திருக்கும். கிறிஸ்துமஸ்சைக் கொண்டாடாத வேறு மதத்தினர் தமது கிறிஸ்தவ நண்பர்களுக்கு கிறிஸ்துமஸ் வாழ்த்து மடல்களை அனுப்பியிருப்பார்கள்.



கிறிஸ்துமஸ் வாழ்த்து மடலை முதன் முதலில் அனுப்பியவர் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?

ஹென்றி கோல் என்பவர்தான் முதன் முதலாக 1843ம் ஆண்டு கிறிஸ்துமஸ் வாழ்த்து மடலை அனுப்பினார்.

## நாணயச் செய்திகள்

* நைலோன் துணியில் நாணயத்தை அச்சடித்த நாடு ஜெர்மனி.
* பிளாஸ்டிக்கில் நாணயத்தை அச்சடித்த நாடு அவுஸ்திரேலியா.
* ஆசியாவிலுள்ள பொப் தீவுகளில் சில வகைக் கற்களை நாணயமாகப் பயன்படுத்துகின்றனர்.



* சுவீடன், இஸ்ரேல், ஹொலண்ட் ஆகிய நாடுகளில் பார்வை இழந்தவர்களும் தொட்டுத் தடவி அறிந்து கொள்ளும் வகையில் பிரெய்லி முறையில் தாள் நாணயங்கள் அச்சடிக்கப்படுகின்றன.
* நியூகினிய பழங்குடி மக்கள் திமிங்கலம், நாய் போன்றவற்றின் பற்களை நாணயமாகப் பயன்படுத்துகின்றனர்.
* லாவோஸ் மற்றும் பரகுவே நாட்டிலும் உலோக நாணயங்கள் புழக்கத்தில் இல்லை. எல்லாமே தாள் நாணயங்கள் தான்.

## கண்டுபிடிப்பாளர்கள்

சில நோய்கள் வராமல் இருப்பதற்காக தடுப்பூசிகள் போடப்படுகின்றன. அந்தத் தடுப்பூசிகளைக் கண்டுபிடித்தவர்கள் பற்றி விவரம் வருமாறு:

| தடுப்பூசி | கண்டு பிடித்தவர்கள் | வருடம் |
|---|---|---|
| * சின்னம்மை | எட்வேர்ட் ஜென்னர் | 1786 |
| * கொலரா | லூயி பாஸ்டர் | 1880 |
| * டிப்தீரியா மற்றும் டெட்டனஸ் | எமில் அடோல்ஃப் வொன் பெல்மிங், ஷிபாசவுரோ கிடாசடோ | 1891 |
| * காசநோகம் | லியோன் கொல்மட் கேமிலி குயெரின் | 1922 |
| * போலியோ | ஜோனாஸ் ஈசால்க் | 1954 |
| * தட்டம்மை | ஜோன் எஃப் என்டெர்ஸ் | 1960 |



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# டிசம்பர் பௌர்ணமி

**08**

**மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்**

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்**

**இதுவரை**

பிரபல தொழிலதிபர் ருத்ரமூர்த்தியின் ஒரே மகன் நித்தியன். பம்பாயில் சிறையிலிருந்து விடுதலையாகி வருபவனை வெளிநாட்டில் இருந்து வருபவனாகக் கூறி விசாலிக்கு மணம்முடிக்க திட்டமிடுகிறார். நித்தியனோ சாந்தாவைக் காதலிக்கிறான். நித்தியன் சிறையில் இருந்து வந்தவன் என்ற விடயம் விசாலி வீட்டுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவ்வாறு இருந்தும் கல்யாணம் செய்ய சம்மதம் என்கின்றனர். நித்தியனோ சாந்தாவை கல்யாணம் செய்ய விரும்புகிறான். சாந்தாவை கல்யாணம் செய்தால், தான் தற்கொலை செய்வேன் என்று தந்தை ருத்ரமூர்த்தி மிரட்டுகிறார். நித்தியன் பணிவதாக நடிக்கிறான்.

**இனி......**

நித்தியன் சில வினாடிகளுக்கு உறைந்து போய் பின் மீண்டும் அந்த ஜெக்தீஷைப் பார்த்தான்.

"சா... சாந்தா..?"

ஜெக்தீஷ் புன்னகைத்தான். "இது கொஞ்சம் தர்மசங்கடமான கேள்விதான். இருந்தாலும் இந்த நேரத்தில் உங்ககிட்ட கேட்கவேண்டிய கேள்வி. விசாலியை கல்யாணம் பண்ண நீங்க ஓ.கே. சொல்லிட்ட இந்த நிலைமையில் சாந்தாவை எப்படித் தவிர்க்கப் போறீங்க?"

நித்தியனுக்கு இப்போது நெற்றி வியர்த்துப் போயிருக்க, அதைக் கர்ச்சிப்பால் ஒற்றிக் கொண்டே கேட்டான்.

"சா... சாந்தாவை உங்களுக்கு எ... எப்படித் தெரியும்?"

ஜெக்தீஷ் தன் உதட்டில் நிறுத்தியிருந்த புன்னகையை சற்றே பெரிதாக்கினான்.

"அவசியம் தெரிஞ்சுக்கணுமா?"

"ம்...."

"சாந்தா இப்போது தங்கியிருக்கிற ஒர்க்கிங் விமன் ஹாஸ்டலுக்கு வேண்டிய பர்னிச்சர்கள் சப்ளை செய்த வகையில் எனக்கும் அந்த ஹாஸ்டல் மனேஜர் அம்மாவுக்கும் நல்ல பழக்கம் உண்டு. மாசத்துக்கு ரெண்டு தடவையாவது அந்த ஹாஸ்டலுக்கு ஃபார்மல் விசிட் போவேன். அப்படிப் போன சில சமயங்களில் ஹாஸ்டல் விசிட்டர்ஸ் ஹாலில் உங்களை அந்த சாந்தாவோடு பார்த்திருக்கிறேன். அந்தப் பெண்ணோட பேர் சாந்தான்னு எனக்கு முதல்ல தெரியாது. மானேஜர் அம்மாகிட்ட கேட்டுத்தான் தெரிஞ்சுக்கிட்டேன்."

நித்தியனின் முகத்தில் இப்போது கணிசமான வியர்வை. உலர்ந்து போன உதடுகளோடு கேட்டான்.

"இந்த சாந்தா விஷயம் உங்க மனைவி ரூபாவுக்கு தெரியுமா?"

"தெரியாது. போன நிமிஷம் வரைக்கும் சொல்லலை. இனிமேலும் சொல்லப் போறதா உத்தேசம் இல்லை. ஏன்னா பெண்கள்கிட்ட இது மாதிரியான விஷயங்கள் போனா பிரச்சனை எவ்வளவு பெரிசா விஸ்வரூபம் எடுக்கும்னு எனக்குத் தெரியும். சாந்தாவுக்கும் உங்களுக்கும் இருக்கிற காதலைப் பத்தி எனக்குத் தெரியும்னு உங்ககிட்ட நான் காட்டினதுக்கு காரணம் சாந்தாவை இந்த விஷயத்துல எப்படித் தவிர்க்கப் போறீங்கன்னு தெரிஞ்சுக்கத்தான்."

நித்தியன் ஒரு பெரிய அனல் மூச்சோடு ஜெக்தீஷை ஏறிட்டான்.

"எனக்கும் இந்த விஷயத்துல நிறைய குழப்பம் இருக்கு. அப்பாவோட கட்டாயத்துக்காக இந்தக் கல்யாணத்துக்கு தலையாட்ட வேண்டிய நிலைமை. அதே சமயத்துல சாந்தாவை எப்படி கன்வின்ஸ் பண்றதுன்னும் தெரியலை."

"உங்கப்பாவுக்கு நீங்க சாந்தாவைக் காதலிக்கிற விஷயம் தெரியுமா?"

"தெரியாது."

"நீங்க தெரியப்படுத்தியிருக்கலாமே?

"தெரியப்படுத்தினாலும் அதனால பிரயோஜனமில்லை என்கிற எல்லையை கடந்துவிட்டது- இந்த விவகாரம்."

"நீங்க என்ன சொல்றீங்க... நித்தியன்?"

நித்தியன் பதில் சொல்வதற்குள் ரூபாவின் குரல் கேட்டது.

"வாஷ்பேஷின்ல ரெண்டு பேரும் கை கழுவிட்டிருக்கீங்களா? இல்லை குளிச்சிட்டிருக்கீங்களா?"

இருவரும் மேஜைக்குத் திரும்பினார்கள். பீங்கான் கோப்பையில் இருந்த தக்காளி சூப்பில் பெப்பரையும் சால்ட்டையும் தூவிக் கொண்டே விசாலி கேட்டாள்.

"வாஷ் பேசின்கிட்ட ரெண்டு பேரும் அப்படியென்ன அரட்டை?"

"பிஸினஸ் பத்திதான்."

"இது டின்னர் நேரம். நோ பிஸினஸ் ஹியர்."

நித்தியன் விசாலிக்குப் பக்கத்தில் நாசூக்காய் சிறிது இடம் விட்டு உட்கார்ந்தான்.

ரூபா சிரித்தாள். "நோ அப்ஜெக்ஷன் மிஸ்டர் நித்தியன். நீங்க இன்னும் கொஞ்சம் சேர்ந்தே உட்காரலாம். கல்யாண டேட்டைக் கூட ஃபிக்ஸ் பண்ணியாச்சு. அப்புறம் எதுக்கு இந்த இருபது செண்டிமீட்டர் இடைவெளி? நல்லா சேர்ந்து உட்காருங்க"

நித்தியன் ரூபா சொன்னதைக் கேட்டு அவஸ்தையாய் புன்னகை பூக்க விசாலி தன் நாற்காலியை சற்றே இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார விசாலியின் தோள்பட்டை ஒரு பூச்செண்டாய் மோதியது.

நித்தியன் முகத்தில் எந்த ஒரு சலனத்தையும் காட்டாமல் சூப் கிண்ணத்தை நகர்த்தி, வைத்துக் கொண்டு, ஸ்பூனைப் போட்டுக் கலக்க, ரூபா விசாலியைப் பார்த்துக் கண் சிமிட்டிச் சிரித்தாள்.

"விசாலி! கல்யாணத்துக்குப் பிறகு நீ இவருக்கு நிறைய டிரெய்னிங் கொடுக்க வேண்டியிருக்கும். அந்த விசயத்துல உன்னோட 'வுட்பி'க்கு வோல்டேஜ் கம்மின்னு நினைக்கிறேன்."

விசாலி அந்த ரூபாவின் தலையைத் தட்டினாள்.

"ஏய் சும்மா கிண்டலடிக்காதே... பேசாம நீ சூப்பை சூப்பு. அவருக்கு எப்படி டிரெய்னிங் தர்றதுன்னு எனக்குத் தெரியும். இதுக்காக நீ ஒண்ணும் பெரிசா கவலைப்பட்டுக்க வேண்டாம்."

பக்கத்து மேஜையில் இருந்தவர்களும் இதைக் கேட்டுச் சிரிக்க, நித்தியன் வேண்டா வெறுப்பாய் உதட்டில் ஒரு புன்னகையை நிறுத்தினான்.

இரத்த ஓட்டமும், இருதயத்துடிப்பும் நொண்டியது.

மறுநாள் காலை ஒன்பது மணி.

சாந்தா கருநீல காட்டன் சில்க் புடவையொன்றை உடம்புக்குக் கொடுத்து டிரஸ்ஸிங் டேபிளுக்கு முன்னால் நின்று அணிந்திருந்த ஜாக்கெட்டோடு பொருந்துகிறதா என்று பார்த்துக் கொண்டிருந்த போது ஹாஸ்டல் ஆயா அறைக்குள் எட்டிப் பார்த்தாள்.

"சாந்தாம்மா...."

"என்ன ஆயா?"

"உனக்கு ஃபோன் வந்திருக்கு...."

"போன்ல யாரு?"

"தெரியல்லேம்மா?"

அறைக்கதவை வெறுமனே சாத்திவிட்டு வராந்தாவில் வேக நடைபோட்டு டெலிஃபோன் இருந்த அலுவலக அறைக்குள் நுழைந்தாள்.

ஒருக்களித்து காத்திருந்தது டெலிஃபோன். ரிஸீவரை எடுத்து காது மடலுக்குக் கொடுத்தாள்.

"ஹலோ..."

மறுமுனையில் ஒரு ஆண்குரல் கேட்டது.

"பேசறது யார் சாந்தாவா?"

"ஆமா! நீங்க யாரு?"

"நான் யார்ன்னு உனக்கு இப்போ தெரிய வேண்டியது முக்கியமில்லை. சொல்லப்போகிற விஷயம்தான் முக்கியம்!"

"என்ன விஷயம்?"

"நித்தியனை நீ காதலிக்கிறது- உண்மை தானே?"

"........"

"என்ன பேச்சையே காணோம்?"

"நீங்க யார்ன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

"வேண்டியதில்லை. உனக்கு நான் உதவி பண்ணத்தான் இந்தப் ஃபோன்கால். உபத்திரவம் தர்றதுக்காக இல்லை. உனக்கு என்கூட பேசப் பிரியம் இருந்தா பேச்சை கன்டினியூ பண்ணலாம். இல்லேன்னா ரிசீவரை வெச்சுடலாம். என்கூட நீ பேசித்தான் தீரணுங்கிற கட்டாயம் இல்லை. பேசறியா? ரிசீவரை வெச்சுடறியா?"

"பேசறேன்."

"அப்படீன்னா பதில் சொல்லு! நீ நித்தியனை காதலிக்கிறது உண்மையா?"

"உண்மைதான்."

"நித்தியன் உன்னை, நீ விரும்பற அளவுக்கு விரும்பறாரா?"

"ம்.... விரும்பறார்."

"அப்படீன்னு நீ நினைச்சுக்கிட்டிருக்கே?"

"என்ன சொல்றீங்க?"

"உண்மையைச் சொல்றேம்மா...

நித்தியன் உன்னை மனப்பூர்வமா காதலிக்கிறது உண்மையாயிருந்தா, விஜயராகவனோட பொண்ணு விசாலியைக் கல்யாணம் பண்ணிக்க அவர் சம்மதம் கொடுத்து தலையை ஆட்டியிருப்பாரா?"

"அது.... அது.... வந்து...."

"சொல்லு......!"

"விசாலியைக் கல்யாணம் பண்ணிக்கிறதுல அவருக்கு விருப்பம் இல்லை. அது அவரோட அப்பா எடுத்த முடிவு. அதுக்கு அவர் கட்டுப்படமாட்டார்."

ரிசீவரில் குரல் சிரித்தது.

"அப்படீன்னு நீ நினைச்சுட்டிருக்கே! ஆனா, நேத்து ராத்திரி ஹோட்டல் சோழாவில் 'நித்தியன்-விசாலி' ரெண்டு பேருக்கும் ஏறக்குறைய நிச்சயதார்த்தமே ஆயிடுச்சு"

"நோ...."

"என்ன நோ?"

"அவர் என்னைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறார்.....!"

"கனவு காணாதே! நித்தியனைப்பத்தி எனக்குத் தெரியும். ஆள் நல்ல டைப் கிடையாது. பம்பாய் ஜெயில்ல ஒரு வருஷம் உள்ளே இருந்துட்டு வந்ததுக்கான உண்மை யான காரணம் என்னன்னு உனக்குத் தெரியுமா?"

"உண்மையான காரணமா, என்ன?"

"பம்பாய் ஏர்போர்ட்ல ஒரு பொண்ணுகிட்ட அவன் தப்பா நடந்துக்கப் பார்த்தான். கற்பழிப்பு முயற்சி."

சாந்தா உறைந்து போன குரலில் குறுக்கிட்டாள். "நோ... நான் நம்ப மாட்டேன்."

"நீ நம்பாததைப் பத்தி எனக்கு கொஞ்சம் கூட கவலையில்லை. நித்தியனை நம்பி உன்னோட வாழ்க்கையை நாசம் பண்ணிக்க வேண்டாம்னு எச்சரிக்கை பண்ணத்தான் இந்த ஃபோன். எனக்குத் தெரிஞ்சதை சொல்லிட்டேன். அப்புறம் உன்னோட இஷ்டம்."

மறுமுனையில் ரிஸீவர் வைக்கப்பட்டுவிட சாந்தாவும் ரிஸீவரை சாத்திவிட்டு அறையை நோக்கி மௌனமாய் நடந்தாள்.

இருதயத்துக்குள் இப்போது ஒரு புயல் மையம் கொண்டுவிட்ட உணர்ச்சி.

'ஃபோனில் பேசிய நபர் சொன்னதெல்லாம் உண்மையா?'

'நிச்சயமாய் இருக்காது'

'என் நித்தியன் அப்படிப்பட்டவர் இல்லை.'

'இந்த ஃபோன்காலைப் பத்தி அவரிடம் பேசியாக வேண்டும்.'

மணிக்கட்டில் நேரம் பார்த்தாள் சாந்தா.

மணி 9.15.

'சரியாய் பத்து மணிக்கெல்லாம் பனகல் பார்க் பஸ் ஸ்டாப்புக்கு நித்தியன் வரச் சொல்லியிருக்கார். பட்டுப்புடவையும் நகையும் வாங்குவதாய் ஏற்பாடு.'

'போய்ப் பார்க்கலாம்.'

அறைக்குள் நுழைந்த சாந்தா வெளியே புறப்பட்டு செல்வதற்கான ஆயத்தத்தில் ஈடுபட்டாள்.

★★

பனகல் பார்க் பஸ் நிறுத்தம்.

சரியாய் பத்து மணி.

எதிர் வெய்யில் முகத்தை தீய்ப்பதையும் பொருட்படுத்தாமல் கும்பலோடு கும்பலாய் நின்றிருந்தாள் சாந்தா. பஸ்கள் வருவதும் பயணிகளை உதிர்ப்பதும் ஏற்றிக் கொள்வதுமாய் நிமிஷங்கள் கரைந்து கொண்டிருந்தன.

நேரம் 10.15.

நித்தியனைக் காணோம். சாந்தாவின் பார்வை சாலையில் ஊர்ந்து வரும் மாருதி கார்களை ஆவலாய்ப் பார்த்து விட்டு இருண்டது.

'என்றைக்கும் இப்படி லேட் செய்ய மாட்டாரே!'

நேரம் 10.25. வெய்யில் இப்போது முன் மண்டையைப் பிளந்தது. அடித்த காற்றில் அனல். சாந்தாவுக்கு கால்கள் இற்றுப் போகிற மாதிரி கெஞ்ச பஸ் ஷெல்டருக்கு கீழே இருந்த திட்டு ஒன்றில் அசௌகர்யமாய் உட்கார்ந்து கொண்டாள்.

நேரம் உள்ளங்கையில் வைத்த பனிக்கட்டியாய் கரைய நித்தியனைக் காணோம்.

10.30, 10.40, 10.45, 10.55. சாந்தா பொறுமையிழந்து எழுந்தாள். நேரம் இப்போது சரியாய்ப் பதினொரு மணி.

'அவருடைய கம்பெனிக்கு ஃபோன் செய்தாவது பார்க்கலாமா?'

யோசித்த வினாடி அந்த இளைஞன் தயக்கமாய் பக்கத்தில் வந்து நின்றான். மெல்லிய குரலில் கேட்டான்.

"நீங்கதானே சாந்தா?"

"......."

(பௌர்ணமி தொடரும்)



**அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை**

# சதாம் உசேன்

**ராஜையா**

**20**

"நதீம் வீட்டில் இல்லை. அவர் வந்தவுடன் எனக்கு ஃபோன் பண்ணச் சொல்லுங்கள்!" என்று கூறி டெலிஃபோனை வைத்து விட்டு, தனக்கு விசுவாசமான குடியரசு காவல் படையை உஷார்ப்படுத்தும் உத்தரவை அனுப்பினார் சதாம்.

திடீரென்று அவர் மூளையில் பொறி தட்டியது...

'ஜனாதிபதி பக்கர் ஊரில் இல்லை. கிழக்கு ஐரோப்பாவில் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருக்கிறார். 1973 ஜூன் 30ந் திகதியாகிய இன்று பிற்பகலில்தான் அவர் விசேஷ விமானம் மூலம் பாக்தாத் திரும்புகிறார். அவர் நாடு திரும்புகிற நாளை, ஆட்சிக் கவிழ்ப்புக்குத் தேர்ந்தெடுத்த அயோக்கியர்கள் அவர் உயிருக்கு ஆபத்து விளைவிக்க திட்டமிட்டிருந்தால்...?'

இந்த சந்தேகம் எழுந்தவுடனே, உஷார் நடவடிக்கையாக, வெளிநாட்டிலிருக்கும் பக்கருக்கு ஒரு டெலக்ஸ் செய்தி அனுப்பினார். "பாக்தாத்துக்கு இரண்டு மணி நேரம் தாமதமாக வந்து சேரவும். அவசரம்!"

சதாம் சந்தேகப்பட்டது போலவே நடந்து விட்டது. பக்கர் வந்து சேருவதாக முதலில் குறித்திருந்த நேரத்தில் பாக்தாத் விமான நிலையத்தில் பயங்கர வெடிகுண்டு வெடித்தது. அந்நேரம் பக்கர் வந்து இறங்கியிருந்தால், பலியாகி இருப்பார்!

பக்கரை கொல்ல சதிகாரக் கும்பல் போட்டிருந்த திட்டம் இவ்விதம் முறியடிக்கப் பட்டது. திட்டம் தோற்ற பயத்தில் அந்தக் கும்பல் ஈரான் எல்லைப்பகுதிக்குத் தப்பி ஓடியது. அப்போதுதான் கும்பலின் தலைவன் யார் என்று தெரிந்தது...

ஜெனரல் நதீம் ஜார்! உள்நாட்டு பாதுகாப்புப்படை டைரக்டர்! மறுமலர்ச்சிக் கட்சியைச் சேர்ந்த இராணுவ உயர் அதிகாரி. சதாமின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். அவரைத்தான் சி.ஐ.ஏ. பதவி ஆசை காட்டி தூண்டிவிட்டு, இந்த ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் இறக்கி விட்டிருந்தது..! ஆபத்தின்றி தன் காரியத்தை சாதிக்க வேண்டும் என்ற நினைப்பில் முன்னெச்சரிக்கையாக நதீம் இரண்டு அமைச்சர்களை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கிறார்...!

விவரத்தைத் தெரிந்து கொண்டவுடன், சதாம் ஆத்திரமடைந்தார். 'துரோகி நதீம்! நீ இந்த உலகத்துல எந்த மூலைக்கு ஓடி ஒளிஞ்சாலும் உன்னை விட மாட்டேன்!' என்று வெகுண்டெழுந்தார்....

நதீம் கும்பலைப் பிடிக்க அமைக்கப்பட்ட அதிரடிப்படைக்கு தானே தலைமை ஏற்று, ஈராக்-ஈரான் எல்லைப் பகுதிக்கு விரைந்தார்.

நதீம் கும்பலைச் சுற்றி வளைத்தார்...

இரு தரப்புக்கும் கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது.

"நீ தப்ப முடியாது நதீம்! வந்திருப்பது சதாம்! பேசாம சரணடைந்து விடு!" என்று வயர்லெஸில் சதாம் எச்சரித்தார்.

"வந்த வழியே திரும்பிப் போ சதாம். நான் சரணடைய மாட்டேன். நெருங்கி வராதே. மீறி வந்தா நான் பிடிச்சு வச்சிருக்கிற மந்திரிகளை சுட்டுக் கொன்னுடுவேன்..." என்று மிரட்டினார் நதீம்.

மிரட்டலைப் பொருட்படுத்தாமல் சதாம் அதிரடிப் படையுடன் முன்னேறினார்...

அதைத் தடுக்கவும், சதாமை எச்சரிக்கவும் நதீம் தன் பிடியிலிருந்த இராணுவ மந்திரி ஹமீது சாகிப்பைச் சுட்டுக் கொன்று சடலத்தை தூக்கி எறிந்தார்.

அவ்வளவுதான்! ஆவேசமாய் தாக்குதலில் இறங்கிய சதாம், முழுமூச்சுடன் முன்னேறி நதீம் கும்பலை அப்படியே மடக்கிப் பிடித்தார்.



ஒருவார விசாரணைக்குப் பின், நதீமும், அவரை ஆதரித்த பதிமூன்று இராணுவ அதிகாரிகளும் தூக்கிலிடப்பட்டார்கள்.

நதீமை ஒழிக்க சதாமே களத்தில் இறங்கியது மற்ற இராணுவ அதிகாரிகளுக்கு அச்சத்தைக் கொடுத்தது. 'ஆட்சியைக் கவிழ்க்கும் எண்ணம் எனக்கு கனவில்கூட வரக்கூடாது, கடவுளே!' என்று அவர்கள் பிரார்த்தித்துக் கொண்டார்கள்.

சி.ஐ.ஏ. உளவாளிகள் சோர்வடைந்து விடவில்லை.

அடுத்த முயற்சியில் இறங்கினார்கள். ஜீப் வேகமாக வந்து கொண்டிருந்தது... அதில் துணியால் கண்கள் கட்டப்பட்ட இரண்டு பேர் பின்பக்கமாய் சாய்ந்து உட்கார்ந்திருந்தார்கள். அவர்களின் இருபுறமும் இரண்டு போராளிகள், கையில் எந்திரத் துப்பாக்கியுடன்.

கண்கள் கட்டப்பட்ட நிலையிலிருந்த இருவரும் இந்தப் போராளிகளின் பகைவர்களோ, கைதிகளோ அல்ல...! விருந்தினர்கள்..!

போராளிகளின் தலைவரான முஸ்தபா பர்ஸானியைச் சந்தித்துப் பேச தாங்களாகவே விருப்பத்துடன் முன்வந்தவர்கள்.

இப்போது பர்ஸானியைச் சந்திப்பதற்குத்தான் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

போராளிகளின் முக்கிய தளபதிகள் தவிர வேறு எவருக்கும் தங்கள் தலைவரின் மறைவிடம் தெரிந்துவிடக்கூடாது என்பதில் உஷாராக இருந்த போராளிகள், தங்கள் விருந்தினர்களை கண்ணைக்கட்டியே அழைத்துச் சென்றார்கள்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# உதட்டில் ஒரு மச்சம்

## 09

சுபா

### இதுவரை

அரவிந்த்
ஒரு பைலட்.
அவனது மனைவி ஜ்யோதி.
அவர்களது நண்பன் விக்ரம்.
அவனுக்கு ஜ்யோதி மீது ஆசை.
இதற்கிடையே அரவிந்த்,
அமைச்சர் பிரகாஷ் குப்தாவுடன்
பைலட்டாக ஓடக்கரை
கிராமத்திற்குச் செல்கிறான்.
அக்கிராமத்தை வளைத்துப்போட
அமைச்சர் திட்டமிட
அதை எதிர்க்கிறார்கள்
கிராம இளைஞர்கள்.
பொலிஸ் சுடுகிறது.
சீனு காயமடைகிறான்.
அவன் மருத்துவமனையில்
அனுமதிக்கப்படுகிறான்.
கிராம இளைஞர்கள்
கொதிக்கின்றனர்.
அமைதி வழி சரிப்படாது
என்று ஆயுதம் ஏந்த
முடிவு செய்கின்றனர்.
நிலத்தை அபகரிப்பதில்
அமைச்சர் தீவிரம் காட்டுகிறார்.
அமைச்சரைக் கொல்ல
இளைஞர்கள் திட்டமிடுகின்றனர்.
சீனு மருத்துவமனையில்
இறக்கிறான்.

இனி....

சீனு எரிந்துகொண்டிருந்தான். விறகு சிலாம்புகள் மற மறவென்று சப்தத்துடன் நெருப்பால் சாப்பிடப்பட்டான். ஆள் உயரத்திற்கு நெருப்பும், அதற்கு மேல் கரும்புகையுமாக எழுந்து கொண்டிருந்தது.

மயானத்தில் கூடிய ஊர் அழுது தீர்த்து விட்டு கலைந்து விட்டது.

இளைஞர்கள் மட்டும் மிஞ்சியிருந்தனர். இளைஞர்களின் அழுகைகளும் காய்ந்து போய், வறண்டு போய் இறுகிய முகத்தோடு நின்றிருந்தார்கள்.

ஷிவா கொள்ளி வைத்த தன் வலது கையைப் பார்த்துப் பார்த்து சற்று நேரம் அழுதுவிட்டு ஓய்ந்திருந்தான்.

எல்லோருடைய பார்வையும் பொதுவாக தேவேந்திரன் மீதே மொய்த்தன. தேவேந்திரன் நகர்ந்து நிற்க அவனை எல்லோரும் சூழ்ந்து நின்றனர். சின்னச் சின்ன சத்தங்களுடன் நீளம் நீளமான தன் நாக்குகளை ஆகாயம் நோக்கி நீட்டிக் கொண்டிருந்த நெருப்பின் மஞ்சள் வெளிச்சம் அவர்கள் முகங்களில் விழுந்து, அந்தக் காட்சியையே மௌன உணர்ச்சிக் கலவையாகக் காட்டியது.

"நம்மில் ஒருவன் சாம்பலாகி விட்டான்." என்றான் தேவேந்திரன்.

"இதற்குப் பழிவாங்கத்தான் போகிறோம். ஆனால், உணர்ச்சி வசப்படாமல். உணர்ச்சி வசப்பட்டு யாரும் செயற்பட மாட்டோர்கள் என்று சீனுவின் நெருப்பின் மீது சத்தியம் செய்யுங்கள்."

"சத்தியம்...சத்தியம்...சத்தியம்..."

"ஷிவா, பரமேஷ்வரன், கைலாஷ், அர்த்தநாரி நான்கு பேருடன் நான் தனியே பேச விரும்புகிறேன்... மலை குகைக்குப் போவோமா?"

நால்வரும் பெரும் வரம் கிடைத்து விட்டது போல விறைப்பானார்கள். உணர்ச்சிவசப்பட்டு அவன் பின்னே நடந்தார்கள்.

★★

சர்ரக்...தீக்குச்சி பற்றிக் கொண்டது. மெழுகுவர்த்திக்குக் கொள்ளி வைத்தது. குகைக்கு வெளியே சூரிய வெளிச்சம் செத்துக் கொண்டிருந்தது.

"தேவ்... திட்டத்தைத் தெரிந்து கொள்ள துடிப்பாயிருக்கிறோம்." என்றான் கைலாஷ்.

"வரும் ஞாயிறுக்கு அடுத்த ஞாயிறு சென்னையில் இளைஞர் தினம் ஒன்றுக்கு மெட்ரோபாலிடன் கிளப் ஏற்பாடு செய்திருக்கிறது. அன்றைக்கு மாலை பாதுகாப்பு அமைச்சர் அந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை தருகிறார். பரிசுகளை வழங்குகிறார். அஃப்கோர்ஸ செக்யூரிட்டி ஏற்பாடுகள் பலமாய்த்தான் இருக்கும். ஆனாலும் அமைச்சரை நெருங்க நான் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன்," என்றான் தேவேந்திரன், அவர்களது முகங்களை ஒவ்வொன்றாய்ப் பார்த்துக் கொண்டே.

அவர்கள் நால்வரும் அவன் முகத்தையே உன்னிப்பாகக் கவனித்தார்கள்.

"இளைஞர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்படவிருக்கின்றன. டிராமா, பாட்டு, டான்ஸ், டென்னிஸ், கட்டுரை, ஸ்விம்மிங், கேரம், செஸ் என்று போட்டிகள் இன்னும் இரண்டு நாட்களில் ஆரம்பிக்கின்றன. இந்தப் போட்டிகளில் சென்னை இளைஞர்கள் மட்டும்தான் கலந்து கொள்ளலாம் என்று ஒரு கண்டிஷன். என்னுடைய மிக நெருக்கமான நண்பன் ஒருவன் மூலம் ஒரு வீடு பிடித்திருக்கிறேன். அந்த முகவரி கொடுத்து, கிளப் நடத்தும் போட்டிகளில் நம் இளைஞர்கள் இரண்டு பேர் சேரப் போகிறோம். எப்படியாவது முழு முனைப்புடன் பயிற்சி செய்து வெற்றியும் பெறப்போகிறோம். அப்புறம் மேடையில் அமைச்சரைக் கைகுலுக்கும் தூரத்தில் சந்திப்பது கஷ்டமில்லை."

"தேவ்... அருமையான ஐடியா. என் கையால் அந்த மிருகம் சாக வேண்டும்...!" என்றான் ஷிவா, கண்கள் சிவக்க...

"நோ, ஷிவா, உன்னை இதில் சேர்த்துக் கொள்ள முடியாது."

"ஏன் தேவ்?" ஷிவா ஏக்கத்தோடு கேட்டான்.

"இரண்டு காரணங்கள். இப்பொழுது தான் உன் அண்ணன் இறந்திருக்கிறான். அவனுடைய மரணம் உன்னை உணர்ச்சி வசப்படச் செய்யும். உன்னால் திட்டமிட்டப்படி நடக்க முடியாது."

"இரண்டாவது காரணம்?"

"நம்முடைய முதல் முயற்சி தோற்று விட்டால், நீ எனக்குத் தேவைப்படுவாய்."

"என்ன சொல்கிறாய் தேவ்?"

"ஃபிளையிங் கிளப்பில் உன்னை செலக்ட் பண்ணியிருக்கிறார்கள் என்று ஒரு கடிதம் வந்ததே.... அந்த வேலை உனக்கு இருக்கிறது."

"விமானம் ஓட்டக் கற்றுக் கொள்ள வேண்டும். ஏர்ஃபோர்ஸில் பெரிய ஆளாக வர வேண்டும் என்று நான் ஆசைப்பட்டதென்னவோ நிஜம்தான், தேவ். ஆனால், இப்போது இருக்கும் நிலையில் நான் ஓடக்கரையை விட்டு எங்கேயும் போவதாக இல்லை. நம்முடைய போராட்டத்தில் பங்கு கொள்வதைவிட, விமானம் கற்றுக் கொள்வது எனக்கு முக்கியமானதாகத் தோன்றவில்லை."

"முடிவை நீ எடுக்காதே ஷிவா. நான் எடுக்கிறேன்," என்றான் தேவேந்திரன் அழுத்தமாக.

"நீ சென்னை கிளம்பிப் போ... உனக்கு வகுப்பு எடுக்கப்போகிற ரங்கராஜன் என்னுடைய நெருக்கமான நண்பன். உனக்கு அதிக மணி நேரம் கற்றுத்தரச் சொல்லி அவனிடம் நான் பேசியிருக்கிறேன். நீ சீக்கிரம் கற்றுக்கொள். சீக்கிரம் திரும்பி வா."

"ஆனால் தேவ்"

"குறுக்கே பேசாதே" என்று கைகுலுக்கித் தடுத்தான் தேவேந்திரன். "உன் அம்மாவை நாங்கள் பார்த்துக் கொள்வோம். நீ மெட்ராஸ் போ. பறப்பதற்குப் பழகு. தேவை என்கிற போது நானே உன்னைக் கூப்பிடுவேன்."

ஷிவா ஏமாற்றத்துடன் எல்லோரையும் பார்த்தான்.

"பிரகாஷ் குப்தா கலந்துகொள்ளும் விழாவிற்கு வருவதற்காவது எனக்கு அனுமதி உண்டா?"

தேவேந்திரன் அவன் தோளை அழுத்தமாகத் தட்டிக்கொடுத்தான். "வா, ஆனால் நம்மூர் ஆட்கள் யாரையும் சந்திக்காதே. முகத்துக்கு நேரே கடந்து போனால்கூட ஒரு சிரிப்போ, ஹலோவோ, வேண்டாம். மேடையருகே இடம் பிடிக்காதே. கடைசி வரிசையில் முடிந்தால் கதவருகே நில். ஒருவேளை நம் முயற்சி வெற்றி பெற்றுவிட்டால், அங்கே ஒரு கணம்கூட யாருக்கு என்ன ஆயிற்று என்று பார்ப்பதற்குக்கூட வீணாக்காதே. கூட்டத்தில் கரைந்துவிடு... தப்பித்துவிடு..."

"தேவ்... அங்கே என்ன நடக்கப்போகிறது என்று நான் தெரிந்து கொள்ளலாமா?"

"இந்த மூன்று பேரும் நீச்சலில் கெட்டிக்காரர்கள் என்று எனக்குத் தெரியும். இவர்களுக்குள் இங்கே போட்டி வைக்கப்போகிறேன். அதில் சளைக்காமல் வெற்றி பெறுகிறவன் யாரோ அவனுக்கு மட்டும்தான் திட்டம் பற்றி, முழுமையாகச் சொல்லப் போகிறேன்."



புதுடில்லி

அரவிந்திற்கு விமானத்திற்கு அடுத்தபடி தன் மோட்டார் சைக்கிளை ஓட்ட ரொம்பப் பிடிக்கும். டில்லியின் அடர்த்தியான போக்குவரத்தில், சாலைகளின் அகலம் தந்த சௌகர்யத்தில் யமஹாவை விரட்டிச் செல்வது பிடிக்கும். ஒரு அசல் வீடியோ கேமில் ஈடுபட்டிருப்பவனாகத் தன்னைக் கற்பனை செய்துகொண்டு, பைக்கை செலுத்துவான். லாரிக்கும், பஸ்ஸிற்கும் நடுவில் இருக்கும் இடைவெளியில் சீறுவான். டாக்ஸிக்கும், ஆட்டோவிற்கும் மத்தியில் புகுந்து கடப்பான்.

இன்றைக்கும் அப்படித்தான்.

மாளவியா நகரின் அமைதியான சின்னத் தெருக்களில் புகுந்து, வளைந்து அந்த ரெஸ்ட்டாரண்டின் வாசலில் நிறுத்தினான். இறங்கினான்.

நியான் சிவப்பாய், நீலமாய் மாற்றி மாற்றி எழுதி, அழித்த வெளிச்சத்தில் கம்பளிக் குல்லாக்களைப் பரப்பி வைத்துக் கொண்டு ஒரு நடைபாதை வியாபாரி, அவனுக்கு அடுத்தபடி தகரத்தால் காற்றை எதிர்த்து அரண்கட்டி, கெரஸின் ஸ்டவ்வில் சுண்டலை சூடு பண்ணும் உத்தரப் பிரதேசன். பிரெட் ஸ்லைஸ்கள், பேல்பூரி, பானிபூரி, சன்னா இத்யாதி, வட்டத்தட்டில் பித்தளைப் பாத்திரங்களும், வாளித் தண்ணீரில் மிதக்கும் வெற்றிலைகளுமாய் பீடாவாலா.

அரவிந்த் அந்த ரெஸ்ட்டாரண்டில் நுழைந்தான். அடக்கப்பட்ட வெளிச்சமும் அரை இருட்டுமாய் மேஜைகள். கண்களைப் பழக்கப் படுத்திக்கொண்டு தேடினான். கண்டு பிடித்தான். திரைச்சீலைகளிட்ட ஜன்னல் அருகில் இருந்த மேஜையில் கண்ணாடிக் கோப்பைகள், ஐஸ்கட்டிகள் சகிதமாய் விக்ரம்.

"ஹாய் விக்ரம்"

விக்ரம் கனவில் நிமிர்ந்தான். கண்களில் அரவிந்த் பதிவானானா? அவன் அங்கே இல்லாதது போல், விக்ரம் கடக் கடக் என்று சில மில்லி லிட்டர்களை தொண்டையில் சரித்துக் கொண்டான்.

அரவிந்த் விக்ரமைத் தோளில் தட்டி விட்டு அவனுக்கு எதிரே இருந்த நாற்காலியில் சொல்லாமலே உட்கார்ந்தான்.

மெனுகார்டு புரட்டி சில்லிட்ட பீர் ஆர்டர் பண்ணினான்.

"உன் ரூமிற்குப் போயிருந்தேன். நீ சாப்பிடப் போயிருப்பதாய் சொன்னார்கள். இங்கே தான் வந்திருப்பாய் என்று தெரியும்," என்று பேச்சை ஆரம்பித்தான். அவன் பேச்சிற்கு விக்ரமிடமிருந்து எந்த ஊக்கமும் இல்லை. "வீட்டிற்கு வந்திருந்தாய் என்று ஜ்யோதி சொன்னாள்."

ஜ்யோதி என்ற பெயர் விக்ரமை நிமிர்த்தியது.

"அவளுக்காக நீ வாள் தூக்கி வந்திருக்கிறாயா?" என்றான் காழ்ப்புடன், "உன்னுடன் நான் பேச விரும்பவில்லை. கெட்-அவுட்."

(○—வரும்—○)

---

கவியரசு கண்ணதாசன் எழுதிய—அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....

# கவியரசுவின் சுயசரிதை

## 28

அண்ணாதுரைக்கு ஒரு கடிதம் எழுதி ஒரு நண்பரைச் சென்னைக்கு அனுப்பி வைத்தான். அந்த நண்பர் இரண்டு மூன்று நாள் அலைந்துவிட்டு ஏமாற்றத்தையே பதிலாகப் பெற்றுக்கொண்டு திரும்பிவந்தார்.

காலணாக்கூடத் தரமுடியாது என்று அண்ணாதுரையும் நெடுஞ்செழியனும் சொல்லிவிட்டதாக அவர் கூறினார். அவனுக்கு அழுகை வந்துவிட்டது. கட்சியில் இருந்து எந்த உதவியும் பெற்றறியாத அவன் அவசர காலத்தில்கூட உதவி பெறமுடியவில்லை. தேர்தல் நெருங்கிற்று. ஓடிக்கொண்டிருந்த இந்துஸ்தான் காரும் நின்றுவிட்டது. ஒரு பைசாக்கூட கையில் இல்லை.

ஒருவர் கடன் தருவதாக இரண்டு நாள் அலைய வைத்து மூன்றாவது நாள் மறுத்துவிட்டார். தனது சொந்த ஊரான சிறுகூடல்பட்டி கிராமத்து வீட்டில் படுத்துக் கொண்டு அவன் அழுதான். நண்பர்கள் வந்து ஆறுதல் சொல்லி அழைத்துப் போனார்கள்.

வாக்குப் பதிவு நாள் வந்தது. சாவடிகளைச் சுற்றிப் பார்க்க அவனிடம் காருமில்லை. தொண்டர்களுக்குக் காப்பி வாங்கிக் கொடுக்க அவனிடம் காசுமில்லை. ஆகவே அவனது சின்னத்தில் விழுகிற ஒவ்வோர் ஓட்டும் உண்மையான அனுதாப ஓட்டாகத்தான் இருக்க முடியுமே தவிர நோட்டு ஓட்டாக இருக்க முடியாது. விழுகிற ஓட்டு விழட்டும் என்று திருப்பத்தூர் தெருவில் நின்றுவிட்டான்.

திடீரென்று திருச்சியில் இருந்து 'அம்பி' என்னும் நண்பர் ஒரு 'பியட்' காரில் வந்தார். அந்தக் காரில் ஏறிக்கொண்டு சாவடிகளை அவன் சுற்றிப் பார்த்தான். அவர் நூறுரூபாய் கொடுத்தார். அதைத் தொண்டர்களுக்காகக் கொடுத்தான்.

அன்று இரவு- அவனுக்காக தேர்தல் வேலை செய்தவர்களெல்லாம் ஓர் இடத்தில் கூடினார்கள். "வெற்றி நமக்குத்தான்- வித்தியாசம் எவ்வளவு என்றுதான் பார்க்க வேண்டும்" என்றார் ஒருவர். "அதில் சந்தேகமேயில்லை; இப்போதே எம்.எல்.ஏ. என்று போட்டுக் கொள்ளலாம்" என்றார் ஒருவர். அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. ஒரு வேளை ஜெயித்தாலும் ஜெயிக்கலாம் என்று நம்பத் தொடங்கினான். "நான் ஜெயித்துவிடுவேன்" என்று நண்பர்களுக்குத் தந்தியும் கொடுத்து விட்டான்.

மறுநாள் ஓட்டுகள் எண்ணப்பட்டன. ஓட்டுக்கள் எண்ணப்படும் இடத்தில் அவனும் இருந்தான். ஒவ்வொரு பெட்டியிலும் அவனைத் தவிர மற்றவர்களுக்கு ஓட்டுகள் அதிகமாகவே இருந்தன. அவனது சொந்த ஊரிலேயே அவனுக்கு நூறு ஓட்டுகள்தான் விழுந்திருந்தன. மாலையில் ஓட்டுக்கள் எண்ணி முடிக்கப்பட்டன. காங்கிரஸ் அபேட்சகர் இருபதாயிரம் ஓட்டுகள் வாங்கியிருந்தார். கம்யூனிஸ்ட் அபேட்சகர் பதினாயிரம். அவனுக்கு விழுந்தது ஒன்பதாயிரம்.

அருமையான தோல்வி. ஒன்றரை மாதச் சுவையான அனுபவ நிலைக்குப் பிறகு ஒரு கசப்பான உண்மை. அவன் நிச்சயமாகத் தோற்று விட்டான்.

திருப்பத்தூர் நகரத்தில் மட்டும் மற்றவர்களைவிட அவனுக்கு அதிகமான ஓட்டுகள் வந்திருந்தன. அவன் வாங்கிய ஒன்பதாயிரம் ஓட்டுகளில் திருப்பத்தூரில் கிடைத்தது மட்டும் நாலாயிரம். கிடைத்தென்ன பயன்? அவன் தோற்றுவிட்டான்.

தோற்ற உடனேயே அவன் புத்தி வேறு விதமாக வெறி கொண்டது. அதுவரை அவன் பரம வைரியாகப் பேசிவந்த கம்யூனிஸ்ட் அபேட்சகருடன் உடனே சேர்ந்துகொண்டான். ஏனென்றால் அவரும் தோற்றவரல்லவா?

இரண்டுபேரும் சேர்ந்து வாக்கு எண்ணப்பட்ட இடத்தில் இருந்து ஊர்வலமாகத் திருப்பத்தூர் கடை வீதிக்குப் போனார்கள். அங்கே அவன் தன் ஓட்டுப் பெட்டியை உடைத்து ஓட்டுக்களைத் திருடிவிட்டார்கள் என்று பேசினான். ஜெயித்த காங்கிரஸ் அபேட்சகரைத் திட்டினான். 'அவர் ஒழிக' என்றான். "அடுத்த தடவை நானும் கம்யூனிஸ்டுகளும் ஒன்றாகச் சேர்ந்து போட்டியிடுவோம்!" என்றான். பேசினான் என்பதைவிட தோல்வியால் பிதற்றி



னான் என்பது பொருந்தும்.

அவன் ஊரில் இருக்கவே அவனுக்குப் பிடிக்கவில்லை. கடன் பாக்கிக்காக 'மைக்' காரனும் சைக்கிள்காரனும் கடைக்காரனும் இரவிலே வந்து நின்றார்கள். சென்னைக்குப் போய் அனுப்புவதாகச் சொல்லிவிட்டு அன்று இரவே புறப்பட்டு விட்டான். அதற்குள் அவன் ஜெயித்துவிட்டதாகக் கழக நண்பர்கள் பல இடங்களிலே போர்டு எழுதி வைத்து விட்டார்கள்.

மறுநாள் பத்திரிகைச் செய்தி வரும்வரை அந்தப் போர்டுகள் இருந்தன.

தேர்தலில் தோற்று அவன் சிறிதளவே கடன் பட்டிருந்தான். அவ்வளவு பெரிய பேச்சாளன், அவ்வளவு பெரிய எழுத்தாளன் அவனுடைய தகுதிக்குக் குறைந்த அளவு கடன்படலாமா? எப்படியாவது சொந்தத்தில் ஒரு படம் பிடித்துவிட வேண்டும் என்று முயன்றான். 'ஊமையன் கோட்டை' என்றொரு கதை எழுதினான். கழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் அன்றைக்கு அவனுக்கு நெருங்கிய நண்பராக இருந்தார். தொழிலிலும் அவர் நண்பராக இருப்பார் என்று அவன் கருதியது தவறுதானென்றாலும், பெருகி வந்த ஆசையால் அவரை நண்பரென்றே கருதி ஒப்பந்தம் செய்து விட்டான். அவனும் அந்த நடிகரும் நண்பர்கள் என்பதற்காகவே துணிந்து ஒருவர் பணம் கொடுக்க முன்வந்தார். படத்தின் ஆரம்ப விழாவன்று "இதை என் சொந்தப் படம்போல் கருதி முடித்துக் கொடுப்பேன்!" என்றும் அவர் பேசினார்.

ஆரம்பித்த இரண்டு மாதத்திற்குள் அறுபத்திரெண்டாயிரம் ரூபாய்கள் செலவாகிவிட்டன. நடிகர் 'கால்ஷீட்' கொடுக்கவில்லை. முகம் கொடுத்தும் பேசவில்லை. ஒருவன் நல்ல நடிகனென்றால் அவன் நண்பர்களிடமும் நடிக்க வேண்டும் என்று விதிப்படி அவனிடமே அவர் நடித்து விட்டார்; ஆனால் படத்தில் நடிக்க வில்லை.

(சரிதம் தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# துயில் கொள் நிலவே......

கார்த்திகை மாதம் இருபத்தேழாம் திகதி.

தாரணி....

மலர்கள் வைக்கப்பட்டிருந்த உன் கல்லறை முன்னால் நான் தனித்து நிற்கிறேன். இந்த கல்லறையின் ஆழத்தில்தான் மூன்று வருடங்களாக நீ உறங்கிக்கொண்டிருக்கிறாய்.

உன் கல்லறைமீது நான் கொண்டு வந்த மாலையை வைக்கிறேன். இது உன் கழுத்தில் சூட்டியிருக்க வேண்டிய மாலை... எப்படித் தவறி விட்டது பார்த்தாயா...?

பல்லைக் கடித்து துக்கத்தை அடக்கிக் கொண்டு நிற்கிறேன். ஒவ்வொரு கல்லறைகளின் முன்னாலும் பெற்றோர், உறவினர் என்று ஆயிரக்கணக்கானோர்...

மஞ்சள், சிவப்பு, வெள்ளைக்கொடிகள் சுற்றிலும் கட்டப்பட்டிருக்கும் வண்ணக்கலவைக்குள் சோகத்தில் பொங்கும் இதயங்கள்...

ஒவ்வொரு வருடமும் இந்த கார்த்திகை மாதத்தில் மழை கொட்டோ கொட்டென்று கொட்டியிருக்கிறது. வானம் இருண்டு காற்று குளிர்ந்து மழைச்சாரல் எம்மை நனைய வைத்திருக்கிறது. இந்தத் தடவை மழை இல்லை.

வெய்யில் நன்றாய் மறைந்துவிட்டது. அடிவானில் நீலம் சிவப்பாக மாறும் நேரம். கல்லறைகளின் வரிசைகளோடு நெருங்கி நிற்கும் உறவுகள்... கண்ணீர் தழும்பி நிற்கும் விழிகளோடு... மெல்லிய விம்மல்களோடு...

இன்றைக்கு திருகோணமலையில் உன் வீடு சோகத்தில் மூழ்கியிருக்கும். உன் அம்மாவும் உன் தங்கைகளும் உன்னை நினைத்து அழுது கொண்டிருப்பார்கள். சமைத்திருக்க மாட்டார்கள்... சாப்பிட்டிருக்க மாட்டார்கள்... ஆறு மணியை நெருங்கிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் துயரத்தில் உறைந்து போயிருப்பார்கள். வாய்விட்டு அழமுடியாத சோகம் அவர்களுடையது.

நேசிப்புக்குரியவர்களை இழப்பது மிகப் பெரிய துன்பம். சிலுவை சுமப்பது அவர்கள் மட்டும் அல்ல, நானும்தான்.

உன்னை இங்கே விதைத்த நாளை நான் மறுபடி நினைத்துப் பார்க்க விரும்புவதில்லை. விரும்பாவிட்டாலும் அந்த நாள் நினைவுக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை. எதிரியின் குண்டு உன்னைத் துளைத்த ஒரு கணப்பொழுதில் உன் சாவு நேர்ந்தது. உனைப் பார்த்து அதிர்ந்துபோன மன நிலையில் நான்...

கண்மூடிக்கிடந்த உனக்கு என் கையால் மாலை வைத்தபோது 'இந்த மாலை போடவா இத்தனை நாள் காத்திருந்தேன்?' என்று என் மனம் கதறியது வெளியே யாரும் கேட்க வில்லை. மூன்று ஆண்டுகளாய் நான் சுமந்து கொண்டிருக்கும் சோகம் அது. எந்தக் கணத்திலும் மறக்க முடியாத நிரந்தர வலி அது.

ஆறு மணி.

டாங்...டாங்... என்று ஒலிக்கும் மணி ஓசை...

அதைத் தொடர்ந்து மௌனம்... மௌனம்... மௌனம்...

கண்ணீரை அடக்கி அமைதியாய் அத்தனை பேரும் நிற்கும் கனதியான மௌனத்தில் ஒரு நிமிடம் கரைகிறது.

மனங்கள் மட்டும் சமுத்திரத்தின் இரைச்சலாய்... பொங்கி ஆரவாரிக்கும் அருவியின் ஓசையாய்... அய்யோ என்று அலறும் பெரும் கதறலாய்...

அந்த நேரம் இரண்டு பெண்கள் வந்து தயங்கி நின்றார்கள்.

"நீங்கள் தனிய நிற்கிறீங்க. தாரணி அக்காவை எங்களுக்குத் தெரியும். தீபத்தை ஏற்றி விடட்டே...?"

"வேண்டாம் தங்கச்சி. நான் ஏற்றுறன்..."

அவர்கள் சரி என்று அப்பால் போனார்கள். உன்னைத் தெரிந்த அவர்களுக்கு உன் மனதில் இருக்கும் என்னைத் தெரியவில்லை பார்.

தீபம் ஏற்றும்போது என் கைகள் ஏனோ நடுங்குகின்றன. அந்த ஒளி...அந்த வெப்பம் மனதை வந்து தகிக்கிறது. இந்த வெப்பம் உன்னையும் தீண்டுகிறதா... உன் கல்லறையில் கற்பூரம் வைத்து கொளுத்துகிறேன். இந்தக் கற்பூரத்தின் ஒளியில் உன்முகம் தெரிகிறது.

விழிமுனையில் திரளும் நீர் மென்று விழுங்கும் எச்சிலுடன் திரும்ப என் நெஞ்சுக்குள் இறங்கிக்கொள்ள... ஓவென்ற என் மன அலறலை மட்டும் என்னால் அடக்க முடியவில்லை.

இரண்டு வருஷமாய் உன்னை நான் நேசித்திருக்கிறேன். தாரணி! நீ மென்மையானவள். சக மனிதர்களை நேசிக்கத் தெரிந்தவள். பிறந்த மண்ணையே சாவிலும் முத்தமிட வேண்டும் என்று சொல்பவள். இலக்கியத்தின் ஆழத்தில் மூழ்கி கவிதையாய் அலைபரப்பியவள். துப்பாக்கிமுனையையும் பேனா முனையையும் சமபலமாகக் கருதியவள். உன் இயல்புக்கு நீ எவ்வளவோ சாதனைகளை செய்திருக்க வேண்டியவள். அத்தனை ஆற்றல் உனக்கு இருந்திருக்கிறது. அந்த ஆற்றலும் நல்ல மனமும்தான் உன்மீது அபிமானம் கொள்ள வைத்தது. உயிருக்குயிராய் காதலிக்க வைத்தது.

சமூகத்தின் சராசரிப் பெண்களைவிட உன் சிந்தனை வித்தியாசமானது. உயரப் பறக்கின்ற சிட்டுக்குருவியின் நிலையிலேயே இருக்க விரும்பினாய்... அந்த உயரத்துக்கு மற்றைய பெண்களும் வர வேண்டும் என்று ஆசைப்பட்டாய். அதற்காகவே எத்தனை பாடுபட்டாய். கிராமம் தோறும் பெண்களின் பிரச்சனைகளை அறிந்து அதைத் தீர்ப்பதற்காகவே அலைந்து திரிந்தாய். இத்தனை ஆற்றலும், நுட்பமான அறிவும் கொண்ட நீ எப்படி ஒரு கணத்தில் எதிரியின் குண்டுக்கு ஏமாந்து போனாய்...?

வாழ்வில் செய்யவேண்டிய சாதனைகளையெல்லாம் இருபத்திநாலு வயதுக்குள் செய்துவிட்டு இங்கே வந்து அமைதியாய் உறங்கிக்கொண்டிருக்கிறாய்.

இதோ அமைதியைக் கலைத்துக் கொண்டு கவிதை வரிகள்... கவிதைகளை நேசித்த உனக்கு கவிதையால் அஞ்சலி... பாடலா இது..? இல்லை. உயிரையே உலுக்கும் கவிதை. கவிதையின் ஒவ்வொரு வரியும் இதய நரம்பை ஊடுருவி சிலிர்க்கச் செய்கிறது. கண்களில் நீரை ஊற வைக்கிறது. காற்றிலே தவழும் இந்த வரிகள் ஆயிரமாயிரம் நெஞ்சங்களை இந்த உலுப்பு உலுப்புகிறதே...இந்த சோகத்தை எப்படிப் பொறுத்துக்கொள்வது..?. இந்தத் துன்பத்தை எப்படி தாங்கிக்கொள்வது?

இப்போது மெதுவாய் இருளத் தொடங்கியிருக்கிறது. வெளிச்சம் மங்கிய அந்த நேரம் அத்தனை பேரின் கலங்கிய முகங்களும் ஒரு உணர்வுபூர்வமான சூழலை பிரதிபலிக்கிறது. ஒரு வருட காத்திருத்தலின் பின் ஏற்பட்ட நெகிழ்வு.

தமது செல்வங்களையே தழுவுதல் போன்று கல்லறைகளை தழுவி விடைபெற்று தம் கண்ணீரை அதில் மிச்சமாய் விட்டு பிரிந்து செல்லத் தொடங்கும் உறவுகள்...

உன் கல்லறை மீது முகம் புதைத்து எனக்கு அழ வேண்டும் போல் இருக்கிறது. ஆனால் என்னால் அப்படி அழ இயலாது. உனை நினைத்துத் தவிக்கும் என் உணர்வுகளை உன்னுடன் பகிர்ந்து கொள்ள துடிக்கிறேன்.

உள்ளுக்குள் உறங்கும் உனக்கு என் குரல் கேட்கிறதா...? உன்னோடு பேசும் ஆவல் புரிகிறதா?

நான் திடமானவன். உறுதியானவன். ஆனாலும் என்ன...

கண்களுக்குள் மெலிதாய் பரவும் நீரை என்னால் அடக்க இயலாமல் தானே போகிறது? நெஞ்சின் ஆழத்திலிருந்து வெடித்துக் கிளம்பும் விம்மலை என்னால் தடுக்க முடியாமல்தானே போகிறது?

நாங்கள் ஆசாபாசம் உள்ள சாதாரண மனிதர்கள். வாழ்வில் சிரிப்பும் விளையாட்டுமாய் வசந்த காலத்தில் நின்றவர்கள். வாழ்தலில் பற்றுக் கொண்டவர்கள். உரிமையில் விருப்பு உடையவர்கள். அதனால்தான் போராடிக்கொண்டே வாழ்வோம் என்று கனவு கண்டோம். ஆனால் எமக்குள் பிரிதல் என்பதே நிச்சயமாயிற்று. ஏன் தாரணி இப்படி நேர்ந்தது...?

சற்றுக் குனிந்து உன் கல்லறையை தொடுகிறேன்.

உன் விரல் பற்றும் உணர்வு!

என் விழி நீரின் ஒரு துளி உன் மீது...

நான் போய் வரட்டுமா தாரணி...?

அடுத்த வருடமும் இதே கார்த்திகை இருபத்தேழில் நான் மறுபடி உன்னிடம் வருவேன்.....

.....உயிருடன் இருந்தால்!



**வெண்ணிலா—சூரியகுமாரன்**

# முடிவிலும் ஒன்று தொடரலாம்

ஷகிலா தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள். இப்போதெல்லாம் சில செய்தியறிக்கைகளைக் கேட்கும் சந்தர்ப்பங்களில் தானாக சிரிப்பு பிய்த்துக்கொண்டு வருகிறது அவளுக்கு.

அந்தி வெயில் போய்விட்ட ஆறு மணியில் மழை சிறு சாரல்களாகத் தூறிக்கொண்டிருந்தது. அண்ணன் ரகு ஒபீஸ் விட்டு வரும் நேரம். அவன் கொண்டுவரும் 'தினமுரசு'க்காய் காத்திருந்தாள். 'முள் நிலவு' தொடரின் முடிவு அவளை மிகவும் பாதித்து விட்டிருந்தது. என்னவோ அவளுக்கே நடந்த நிகழ்வொன்றைப் படிப்பது போன்றதான தத்ரூபம். யதார்த்தமான முடிவு. மனதைக் கனக்க வைத்தது. வாசித்து முடித்து அழுது விட்டிருந்தாள்.



வந்ததும் வராததுமாக அண்ணன் ரகு 'ஃபோட்டோ' ஒன்றை எடுத்து நீட்டினான். "புரோக்கர் வர்ற வழியில வெச்சு தந்தார். பாரு. பிடிச்சா சொல்லு!" அண்ணன் சுருக்கமாய்ச் சொன்னான். இரண்டு விரல்களால் தூக்கிப் பிடித்தாள். பார்த்தாள்.

"இவனா? ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிகாமணி மாதிரி ஆயிரம் பெண்களைச் சுற்றிய அசட்டு மாமணி... ச்சீ.. வேண்டாம்... வேண்டவே வேண்டாம்!" சிரிப்பும் கேலியும் ஏளனமும் இழையோடின அவள் குரலில். அண்ணன் சிடுசிடுத்தான்.

"எந்த ராமனுக்கு காத்திருக்கிறாய்?" என கோபப்பட்டுத் திட்டினான். "பேசிவரும் எல்லா மாப்பிள்ளைகளுக்கும் ஏதாவது சாக்குச் சொல்லி தட்டிவிட்டு ஏன் எங்கள் உயிரை வாங்குகிறாய்?" என கத்தினான். அவன் கோபம் அவனுக்கு.

"ராமன் வராவிட்டாலும் பரவாயில்லை; ராவணர்கள் கையில் என்னைத் தூக்கிக் கொடுத்து விடாதீர்கள்!" விட்டேற்றியாகச் சொல்லிவிட்டு எழுந்து போய்விட்டாள்.

அம்மா முணுமுணுத்தாள். அப்பா கோபமாய் சடசடவென பத்திரிகையைப் புரட்டினார். அண்ணன் பாத்ரூம் கதவை அறைந்து சாத்தி குளிர்நீரை அள்ளி அள்ளி ஊற்றி தன் கோபத்தை தீர்த்துக் கொண்டான். ஷகிலா சிரித்துக் கொண்டாள்.

"யாரையாவது மனசுல வெச்சிருக்கியா?" கோபம் அடங்கிய அண்ணன் வாஞ்சையுடன் ஷகிலாவின் தலையைத் தடவியபடி கேட்டான். கையிலிருந்த பத்திரிகையை மடித்து வைத்தாள்.

எழும்பி நின்று ஜன்னலால் வெளியே வெறித்தாள். இருளிலே தென்னங்கீற்றுகளும் மாமர இலைகளும் லேசாய் அசைந்தன. நட்சத்திரங்கள் யாவுமே துடைத்து வழித்து வீசியதான வெறும் வானம். "உங்கட நண்பர் விஜய்... விஜயை எனக்கு ரொம்பப் பிடிக்கும். முடிச்சு வெக்கிறீங்களா?" கேட்டாள். பதறி விட்டான் ரகு. என்ன விளையாட்டுப் பெண் இவள்? நிலமை தெரிந்தும் விளையாடுகிறாளா?

ரகு மீண்டும் கடுப்பானான். "ஷகிலா- விளையாடினதுபோதும். நீ இன்னும் சின்னப் பாப்பா இல்ல. இது வாழ்க்கை. விளையாடாதே!" எச்சரித்தான்.

விஜய் நல்லவன். நல்ல நண்பன். பணத்தாலும் அதைவிட குணத்தாலும் வளமானவன். வடபுலம். சொந்தங்களை போரில் தொலைத்தவன். திருமணம் முடித்து மூன்றே மாதங்களில் 'ஷெல்'லில் அழகிய மனைவியைப் பலி கொடுத்தவன். எவ்வளவோ வற்புறுத்தியும் மறுமணம் செய்ய மறுப்பவன்.

"பிற பெண்களோடு பழகியவர்கள் என்பதற்காகவே பலரை மறுத்தவள். இப்போது இன்னொரு பெண்ணுடன் வாழ்க்கையைப் பகிர்ந்துகொண்ட விஜய்யை ஏன் விரும்புகிறாள்? பைத்தியக்காரி. எல்லோரையும் குழப்புகிறாளே!"

விஜய் மிகவும் அதிர்ந்தான். கோபப்பட்டான். காரணம் கேட்டான்.

**ஷர்மிளா இஸ்மாயில்—கண்டி**

"சந்தர்ப்பம் கிடைக்கும்வரை மட்டும்தான் ஆண்கள் நல்லவங்களா இருப்பாங்கன்னு சொல்வாங்க. ஆனா நீங்க உங்க மனைவிய இழந்து இரண்டு வருட காலங்களா... தவறல்லியே! நானும் பார்த்துட்டுதானே வாறேன். உங்கள மாதிரி ஒரு நல்லவர் எனக்கு கணவரா அமைஞ்சா அது தவறில்லை. வரம்தான். முடியும்னா சம்மதிங்க. இல்லாட்டி வேணாம்னு சொல்லிடுங்க. என் முடிவு என்னைக்கும் மாறாது. அண்ணன் கூட சரி சொல்லியாச்சு..." வேகவேகமாகப் பேசி, ஷகிலா வெளியேறினாள். விக்கித்துப் போய் நின்றான் விஜய்.

# நீ வருவாய் என...

'மல்லிகா... என்னை மன்னித்து விடு எனக்கு உன் மேல கோபமில்லை; உன் அண்ணன் மீதுதான்.

உனக்குத் தெரியும்தானே? நானும் என் தங்கையும் உன் குடும்பத்திற்காகவே... வேலை செய்து உண்மையான விசுவாசம் கொண்ட தொழிலாளர்கள்- என்று உனக்குத் தெரியும் தானே? ஆனால், உன் அண்ணன்- அந்த காமுகன்.. என் தங்கையைக் கெடுத்து, கொலை செய்தது உனக்குத் தெரியுமா...? தெரிந்திருக்காது.

ஏன், ஊர் மொத்தமும் அவள் அந்தப் பாழுங்கிணற்றில் தானாகவே விழுந்து தற்கொலை செய்துகொண்டாள் என்று தானே எண்ணிக்கொண்டிருக்கிறது. என் வேதனை யாருக்கும் புரியாது. நான் உயிர் வாழ்ந்ததே அவளை ஒரு நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுத்து.... ஊஹூம்... இனி எதற்கும் வழியில்லை...

என் தங்கையை குழிக்குள் இட்டு மண் தள்ளிய இதே கையாலேயே... உன் அண்ணனைக் கொல்ல வேண்டும் என்ற வெறி எழுந்தது. ஆனால், அதைவிட கொடூரமான தண்டனை அவனுக்கு உன் பிரிவுதான்.



**லலிதா**

நான் என் தங்கையை எந்த அளவு நேசித்தேனோ அதே அளவு, அவனும் உன்னை நேசிப்பது எனக்குத் தெரியும். இதோ... ஒரு வாரமாய் நீ எப்போது வருவாய் என காத்திருந்தேன், நீ பட்டணத்தில் காலேஜிலிருந்து இன்று வந்துவிட்டாய். உன்னைக் கொல்வதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.

உன்னைக் கொன்று அதே கிணற்றில் போட்டு, உன் அண்ணன் படும் வேதனையை நான் கண்டு இரசிக்க வேண்டும். இப்போதைக்கு என் காயத்தை ஆற்றும் மருந்து அதுதான். எனவே என்னை மன்னித்துவிடு!'

மனசுக்குள்ளேயே பேசிக்கொண்டிருந்த பெருமாள் எழுந்து, குடிசையை விட்டு வெளியே வந்தான். இடுப்பில் சாறன் மட்டும் கட்டியிருந்தான். உழைத்து, உழைத்து அவன் உடல் தேக்கு மரம்போல் ஆகியிருந்தது. கண்களில் சலனமோ பயமோ இன்றி சாலையை வெறித்தான்.

தூரத்தில் யாரோ ஒரு பெண் வருவது தெரிந்தது. 'யாரது இந்த நேரத்தில்?' அந்த உருவம் மெல்ல மெல்ல அருகில் வந்தது.

மல்லிகா.

"இவள் எதற்கு இந்த நேரத்தில்? எதற்காக இருந்தால் என்ன? துளியும் எனக்கு சிரமம் வைக்காமல் அவளாகவே வந்திருக்கிறாள். இதைவிட சந்தர்ப்பம் அமையாது. "வாங்கம்மா... நீங்க எங்க இந்த இருட்டில?"

"இப்படி வாசல்லயே நிக்க வச்சுத்தான் பேசுவியா பெருமாள்?"

"உள்ளே வாங்கம்மா...!"

அவள் உள்ளே நுழைய, இனியும் தாமதிப்பதில் அர்த்தமில்லை. பெருமாள் மல்லிகாவின் அருகில் சென்று உரம்பாய்ந்த தன்கரங்களை, அவள் கழுத்தில் பிரயோகிக்க, சற்றும் எதிர்பாராதவளாய்... எதற்கு சாகிறோம் என்று தெரியாமலேயே... கண்களில் குழப்பம் முடிச்சிட செத்துப் போனாள் மல்லிகா!

'உடனடியாய் இவளைக் கொண்டு சென்று அந்தக் கிணற்றில் போட்டுவிட வேண்டும்.' அவளைத் தூக்கித் தோளில் சுமந்து செல்ல உடல் கூசியது. உள்ளே நிறுத்தியிருந்த சைக்கிளை எடுத்து வந்து, கேரியரில் அவளைப் படுக்கவைத்தான். மல்லிகாவின் உடல் வில்லாய் வளைந்தது. கூந்தலும், சேலைத் தலைப்பும் தரையில் புரளப் புரள.. சைக்கிளை தள்ளிச் சென்றான்.

அது கிராமம் என்பதாலும், இரவு என்பதாலும் ஒரு ஈ, எறும்புகூட வெளியே இல்லை. எல்லோரும் தங்கள் வீட்டினுள் சுருண்டிருந்தார்கள்.

கிணற்றை அடைந்தவன் திட்டின்மேல், மல்லிகாவோடு படிக்கும் சுமதியைக்கண்டு அதிர்ந்தான்.

"என்ன பெருமாள்... சட்டைகூட போடாம வந்திருக்கே? மல்லிகா எங்க...?" என்று கேட்டுக்கொண்டே வந்தவள் அவனுக்கு சமீபமாய் வந்து, கேரியரில் நிலைத்த விழிகளோடு சடலமாய் போயிருந்த மல்லிகாவைக் கண்டதும் 'வீல்' என்று அலறினாள்.

"பெ...பெருமாள்...என்னாச்சு? மல்லிகாவுக்கு என்ன?"

ஒன்றும் புரியாது, ஏதும் செய்ய இயலாதவனாய்.. "சுமதி...என்னை மன்னிச்சிடு...நான் மல்லிகாவைக் கொன்னுட்டேன்!" என்று விபரம் கூற,

"ஐயோ... தப்பு பண்ணிட்டியே பெருமாள். அவ உன்னை உயிருக்குயிராக காதலிச்சாளே. நீ படிக்காதவன், ஏழைன்னு பாகுபாடே பார்க்காம உன்னைத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு உறுதியா இருந்தாளே... இப்பகூட அவ அண்ணன் வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்க்கிறதால, உன்னை அழைச்சிட்டு எங்காவது போய் கல்யாணம் பண்ணிக்கலாம்னுதான் இந்த இருட்டுல இங்க என்னை காத்திருக்க சொல்லிட்டு, அவ மட்டும் உன்னைப் பார்க்க வந்தா... அவசரப்பட்டுட்டியே...?"

பெருமாளுக்கு பூமியே தன் காலடியின் கீழ் நழுவுவது போலிருந்தது. 'ஓ'வென்ற கதறலோடு மல்லிகாவை தன் மடிமீது கிடத்தியபடி... பெருங்குரலெடுத்து கேவிக் கேவி அழ ஆரம்பித்தான்.

இன்னமும் அழுதுகொண்டிருக்கிறான்.



படிப்பகம்

# காதலன்

## இலக்கிய நயம்



தளபதி
வல்லவராயன்
தலைகீழாக மாறிவிட்டான்!

எப்போதும்
போரைப் பற்றியே
நினைப்பவன்
இப்போது-ஒரு
பூவைப் பற்றியும்
நினைக்கிறான்!

எப்போதும்
வாளின் நுனி தடவி
கூரைப் பரிசோதிப்பவன்
இப்போது
அவளின் வாள் விழி
கூரைப் பார்த்திருக்கிறான்!

குந்தவை
சோழனின் சகோதரி!

கூர்மதி அவளுக்கு
முகமதி அழகுக்கு!

சோழனுக்கே
புத்தி சொல்லும்
குந்தவை- தளபதிக்கு
கத்தி எறிந்தாள்!

எந்தக் கத்தியையும்
தடுத்து நிறுத்த
வல்ல வல்லவராயனுக்கு
அவள் எறிந்த கத்தியை
எதிர்த்து நிற்க இயலவில்லை!

வீழ்ந்து போனான்
காதல் எனும்
களத்திலே வசமாக
வீழ்ந்து போனான்!

சிந்தியது இரத்தமல்ல
இன்பம்!

பட்டது காயமல்ல
மூரயம்!

எறிந்தது வலிக்கவில்லை
இனித்தது!

அன்று முதல்
ஆளே மாறிப்போனான்!

குதிரையைக்கூட
கொஞ்சிக் குதூகலித்தான்!

எல்லாவற்றையும்
புதிதாகப் பார்த்தான்!

எல்லாவற்றையும்
இனிதாகப் பார்த்தான்!

பிடிக்காத உணவையும்
விரும்பி உண்டான்!

படிக்காத பாடல்களையும்
வாய்விட்டு
பாட ஆரம்பித்தான்!

ஒரு துறவிபோல
திரிந்த தளபதி
புதுப் பிறவிபோல
மாறிவிட்டானே?

போர் வீரர்களுக்கு
புதிராக இருந்தது!

அனுபவப் பட்டவர்களுக்கு
சந்தேகம்
பொறி தட்டியது!

"தளபதிக்கு
புதிய களம்
கிடைத்திருக்கிறதோ?"

"சேச்சே... தளபதி
புன்னகைக்கக்கூட
பொழுதில்லாத மனிதர்;
இவரைப்போய்
எந்தப் பெண்ணரசி
காதலிப்பாள்?"

"இதயக் கோட்டைகள்
எத்தனை இறுக்கமாக
இருந்தால் என்ன
கொத்தி எறியுமய்யா
கோல விழிகள்!"

போர் வீரர்களுக்குள்
கூர் விவாதங்கள்!

வல்லவராயனுக்கும்
தன்னைப் பற்றியே
தனக்குள் ஆச்சரியம்!

நானா? இது
நான்தானா?

செக்கு மாடாய்
சுழன்றவனுக்குள்
மொட்டு விரிந்து
பூ மலர்ந்தது?
எப்படி? எப்படி?

பூமியில் உள்ள
எல்லாப் பொருளும்
பூமியில் உள்ள
எல்லா உயிரும்

புதிதாய், அழகாய்
தெரிவது எப்படி?

வல்லவராயனுக்கு
தனித்திருப்பது
முன்னர் பிடிப்பதில்லை!

இப்போது பிடிக்கிறது.
கொஞ்ச நேரமானாலும்
தனியாய் இருந்து
குந்தவையுடன் காதலை
எண்ணி மகிழ்வது
இதயத்திற்கு இதமாயிருந்தது!

தனியே இருந்து
அவளை நினைப்பது
அவளுடனேயே
இருப்பது போன்றது!

காதலில்தான்
எத்தனை விநோதங்கள்
காதலில்தான்
எத்தனை உணர்ச்சிகள்!

"எந்த நாட்டை
பிடிக்கத் திட்டம்?"

குரல் கேட்டு- அல்ல
இசையொலி கேட்டு
சிந்தனை கலைந்தான்!

இசைக்குரல் தந்தவள்
குந்தவை!

கம்பீர பெண்மகள்
கலங்காத நெஞ்சினள்.

கண்ணோடு கண்
நோக்கும்
நேர்கொண்ட பார்வை!

அஞ்சுவதற்கு
அஞ்சத்தான் வேண்டும்!

நாணுவதற்கு
நாணத்தான் வேண்டும்!

அடக்கமாயிருக்க
வேண்டிய இடத்தில்
அடக்கம்தான் வேண்டும்!

அது ஆணுக்கும்
பெண்ணுக்கும் பொது நீதி!

குந்தவையின்
கொள்கை அதுதான்!

அருகில் வந்தாள்
அவன் தலைமுடி
கோதி விட்டாள்!

அவள் கரம் பட்டதும்
உடலெங்கும்
குறு குறுப்பு!

வல்லவராயனுக்கு
பெண்களிடம் வெட்கம்!

அப்படியானவனுக்கு
காதலியை
எப்படிக் கையாள்வது
என்று தெரியவில்லை!

சொல்லிக் கொடுக்கவும்
கேட்டுக் கற்கவும்
காதல் என்ன
தையல் கலையா?

தையலாம் அவளை
அன்பால்
தைக்கும் கலையல்லவா!

மூன்றாமவர்
கற்றுத் தருவதுதான்
முடியாதது.
இருவரும் ஒருவருக்கொருவர்
கற்றுத் தரலாம்!

குந்தவைதான்
இங்கே ஆசிரியை!

அவனது காது மடலை
நெருங்கி
தன் முத்துப் பற்களால்
கௌவிக் கொண்டாள்!

விரிந்து பரந்திருந்த
அவன் பெருமார்பை
அன்புடன்
நீவி விட்டாள்!

குதிரையைத்
தட்டிக் கொடுத்தால்
எட்டித்தானே பாயும்!

வல்லவராயன்
வல்ல ராயனாகினான்!

குந்தவையின்
தோள்களை அழுத்தி
தன்னோடு அணைத்தான்!

விரலை நீட்டி
அவள் உதடுகளை
அளந்து பார்த்தான்!

அளப்பது மட்டுமா?
நனைப்பது இல்லையா?

என்று மனதில்
தாகம் வளர்த்தாள்.

மெல்ல, மெல்ல
உதடுகள் நெருங்கின!

அவளுக்கோ அவசரம்
அவனுக்கோ தயக்கம்
உதடுகளுக்கிடையே
நூல் நுழையும்
இடைவெளி மட்டும்!

அவனே தொடட்டும்
என்று விரும்பி
தன் உதடுகளை
முன் நகர்த்தாது
வேடிக்கை பார்த்தாள்!

'பொறுத்தது போதும்
உதடுகளே
போருக்குப் போங்கள்'

இரு ஜோடி உதடுகளும்
உரசிக்கொள்ள-
உடல்கள் தகித்தன.
முதல் முத்த இன்பத்தில்
இருவரும்
மூழ்கித் திளைக்க
வலலவராயனுக்கு
அன்றுதான்
பெண் இனிது
என்பது புரிந்தது!

தகித்த உடல்
தணிப்பு கேட்டது!
தழுவிக் கொண்டனர்
நகமும் சதையும்போல!

குளிர்ந்தது உடல்!
குளிர்ந்தது உள்ளம்!

இனித்தது முத்தம்
குடித்தது
புதுவித அமுதம்!

"பால் குடித்திருக்கிறேன்
தேன் குடித்திருக்கிறேன்
இரண்டும் கலந்த சுவையை
இன்றுதான் உணர்ந்திருக்கிறேன்!

அடியே சகியே!-உன்
முத்துப் பற்களில்
ஊறிய நீர்
தித்திக்கிறதடி!
தத்தித் தாவிய
என் உதடுகள்
தத்தித்தோம் போடுகிறதடி!"

வல்லவராயனின் புகழ்ச்சி
பொய்யல்ல என்கிறது
திருக்குறள்:

"பாலொடு தேன்கலந் தற்றே
—பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்."

அதிகாரம்: 113, குறள்: 1121

தருவது ரதிகன்

(ஸ்போர்ட்ஸ்)

## அவுஸ்திரேலிய அணிமீதும் இலஞ்சப் புகார்!

கிரிக்கெட் விளையாட்டில் இலஞ்சம் வாங்கும் குற்றச்சாட்டு இந்திய-பாகிஸ்தான் வீரர்கள் மீதுதான் இருந்து வந்தது. தற்போது இந்த இலஞ்சப் பிரச்சனை அவுஸ்திரேலிய அணி வீரர்கள் மீதும் வந்துவிட்டது.

அவுஸ்திரேலிய அணியின் முன்னணி வீரர்களான மார்க் வோவ் மற்றும் ஷேன் வோர்ன் ஆகியோர் 1994ல் பெட்டிங் புரோக்கரிடம் (பந்தயம் பிடிக்கும் முகவரிடம்) பணம் பெற்றுக்கொண்டு மைதானத் தன்மை குறித்து தகவல்களைக் கூறியதாக ஒப்புக் கொண்டுள்ளனர்.

இதற்காக அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையிடம் அபராதம் கட்டிவிட்டு மன்னிப்பும் கேட்டுள்ளனர். இலஞ்சக் குற்றச்சாட்டில் தொடர்புடைய இந்த இரு வீரர்களும் அவுஸ்திரேலிய அணிக்காக விளையாடுவதில் எதுவித பிரச்சனையும் இல்லை என சக வீரர்கள் கூறுகின்றனர்.

"அவர்கள் தவறு செய்து பணம் பெற்றுக் கொண்டனர். இதைத்தவிர 1994ம் ஆண்டில் இருந்து அவர்கள் வேறு எந்தத் தவறும் செய்யவில்லை. அத்துடன் பணம் பெற்றுக் கொண்டதை இருவரும் மறைக்கவில்லை.

அவர்களுக்கு என்ன உணர்வு உள்ளதோ, அதே உணர்வுடன்தான் நான் இருக்கிறேன்," என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் கேப்டன் மார்க் டெய்லர் கூறியுள்ளார். ●

## சச்சினைப் புகழ்கிறார்

"கிரிக்கெட் மந்திர வீரர்' என்ற அடைமொழிக்குரிய டொன் பிரட்மனுக்கு இணை இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் மட்டுமே" என்று நியூஸிலாந்து அணியின் முன்னாள் கேப்டன் மார்ட்டின் குரோ கூறியுள்ளார்.

தனிமனிதனாக நின்று இந்திய அணியை பலமுறை வெற்றிப்பாதைக்கு இட்டுச் சென்றவர் டெண்டுல்கர் என்றால் அது மிகையாகாது. இந்திய அணியின் தூணாக விளங்கும் இந்தச் சாதனை வீரரைப் பற்றி மார்ட்டின் குரோ ஒரு பேட்டியில் கூறியுள்ளதாவது:



"ஒரு காலத்தில் உலகின் தலைசிறந்த வீரர் யார் என்று கேட்டால், பிரட்மன் என்ற ஒரே பதில்தான் கிடைக்கும். ஆனால் இப்போது அந்தத் தரம் வாய்ந்த வீரரோடு இந்தியாவின் டெண்டுல்கர் தன்னை இணைத்துக் கொண்டார். இதன் மூலம் அவரை உலகின் தலைசிறந்த பேட்ஸ்மன் என்று கூறுவதில் எந்தத் தவறும் இல்லை.

டெண்டுல்கரின் பேட்டிங்கை உற்றுக் கவனித்தால் எந்தவிதத் தவறையும் கண்டு பிடிக்க முடியாது. எப்போதும் ஒரு திடமான மனநிலையில் இருக்கும் டெண்டுல்கர், பேட்டிங் செய்வதற்காகவே பிறந்துள்ளதாகத் தெரிகிறது.

இவருக்கு இயற்கையாகவே இருக்கும் கிரிக்கெட் ஞானமும், கிரிக்கெட்டை வாழ்க்கையாக மதிப்பதும்தான் இவரை இந்தளவு உயர்த்தியுள்ளது. பிரட்மன்-டெண்டுல்கர் ஆகியோருக்கிடையில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கணக்கிட்டுப் பார்த்தால் கிட்டத்தட்ட சமநிலையில்தான் உள்ளது. இருவரின் ஆட்டமுறை, நுணுக்கம் போன்றவற்றில் பெரிதாக எவ்வித மாற்றத்தையும் கண்டுபிடிக்க முடியாது."

இவ்வாறு மார்ட்டின் குரோ, டெண்டுல்கரைப் பற்றிப் பெருமையாக அப்பேட்டியில் தெரிவித்துள்ளார். ■

## சுயசரிதை

டெஸ்ட் போட்டிகளில் அம்பயராக இருந்து ஓய்வு பெற்ற இங்கிலாந்தின் டிக்கி பேர்ட், இப்போது முதல்தர போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெற்றுவிட்டார். சென்ற வருடம் இவர் தன்னைப்பற்றிய சுயசரிதை ஒன்றை எழுதி வெளியிட்டார். அது 3 இலட்சத்து 50 ஆயிரம் பிரதிகள் விற்பனையாகி இவரைப் பணக்காரராக்கி விட்டது. ●

## சிந்தியா பதில்கள்

**★ அழகான படங்களை வெளியிடுகிறது 'முரசு' என்று ஆனந்த சங்கரி கூறி-அல்லது கோபத்தில் சீறி இருக்கிறாரே?**

வி. நிரோசன், கொழும்பு-06.

காமாலைக் கண்ணனுக்கு எந்த நிறமும் மஞ்சள் நிறமாகத்தான் தெரியும். ஆனந்த சங்கரிக்கு அழகான படங்கள் மட்டும்தான் கண்ணில் தெரிகிறது. மனிதர் இந்த வயதிலும் இரசிக்கிறாரே!

☛ ✍ ✌

**★ டியர் சிந்தியா! தன்னைப்போல பிறரை நினைப்பதுதானே மனிதாபிமானம்?**

எ.ஃப். பாத்திமா, வெல்லம்பிட்டிய.

உண்மைதான்! ஆனால் இக் கதையைப் பாருங்கள்:

இங்கிலாந்து பிரதமர் சர்ச்சில் பைத்தியக்கார ஆஸ்பத்திரி ஒன்றுக்கு போயிருந்தார்.

அங்கிருந்து ஓரளவு குணமடைந்த நோயாளி சர்ச்சிலிடம், "நீங்கள் யார்? உங்கள் பின்னால் இத்தனைபேர் வருகிறார்களே?" என்று கேட்டார்.

அதற்கு சர்ச்சில்; "நான்தான் பிரிட்டிஷ் பிரதமர்" என்று கூறினார்.

அந்த நோயாளிக்கு சிரிப்பு வந்துவிட்டது. அதனை அடக்கிக் கொண்டு, சர்ச்சிலிடம் கூறினார்:

"கவலைப்படாதீர்கள்! நான் கூட இங்கு வரும்போது அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் ' என்று கூறிக்கொண்டிருந்தேன். போகப்போக சரியாகிவிடும்!"

☛ ✍ ✌

**★ சத்யராஜின் 'பொண்ணு வீட்டுக்காரன்' எப்படி?**

இ. துரைராஜ், பதுளை.

தீபாவளிக்கு
வரவிருந்த படம்
பணப் பிரச்சனையால்
பெட்டிக்குள்ளேயே
சுருண்டு விட்டதாம்!
பின்னர் பார்ப்பது
எப்படி?
அபிப்பிராயம்
பகர்வது எப்படி?

☛ ✍ ✌

**★ சிந்தியா! அதிரடியான 'ஜோக்' ஒன்று கூறுங்களேன்?**

எஸ். ரம்யாதேவி, மஸ்கெலியா.

வகுப்பில் உடற்கூறு பற்றிய பாடம் நடந்து கொண்டிருந்தது. "மனித உடம்பில் 92 சதவீதம் தண்ணீர்" என்று கூறினார் ஆசிரியர்.

மாணவர்களுக்கு ஒரே ஆச்சரியம். அது உண்மையாக இருக்குமா? இல்லையா என்று தமக்குள் விவாதித்தனர்.

அப்போது அந்த வழியாக ஒரு அழகான மாணவி சென்றாள்.

அவளைப் பார்த்த மாணவன், "நம் ஆசிரியர் சொன்னது முற்றிலும் உண்மை. சந்தேகமிருந்தால் அதோ பாருங்கள்! அந்தப் பெண்ணின் உடம்பில் எண்பது சதவீதம் எவ்வளவு அழகாகத் ததும்பிக் கொண்டிருக்கிறது!" என்றானாம்.

☛ ✍ ✌

**★ நாடெங்கும் மனித உரிமை தினம் கொண்டாடப்பட்டதே! என்ன திடீர் கரிசனை?**

பி. ஜவாஹர், கொழும்பு-11.

யார் யாரெல்லாம் அனுஷ்டித்தனர் என்று பத்திரிகைகளில் பார்த்தபோது இப்படியொரு தினமே தேவைதானா? என்று வெறுத்துவிட்டது! இரத்தம் படிந்த கரங்களோடு உரத்துக் கூறுகிறார்கள்: "மனித உரிமை எங்கள் மூச்சு!" என்ன கொடுமையப்பா இது!

☛ ✍ ✌

**★ தொண்டமானை எதிர்த்து வாக்களித்தது இனவாதமா?**

ஜெ. சிவராசன், கொழும்பு-05.

தொண்டமானை எதிர்த்தல்ல; தொண்டமான் அரசில் ஒரு அங்கமாக, அரசு சார்பாகக் கொண்டுவந்த நிதி ஒதுக்கீட்டு பிரேரணைதான் தோற்கடிக்கப்பட்டது! எதிர்க்கட்சி தக்க தருணம் பார்த்து விளையாட்டைக் கொடுத்திருக்கிறது. இதனை இனவாதமாக சித்தரிப்பது முறையல்ல! அப்படிப்பார்த்தால், தொண்டாவின் பிரேரணை என்று தெரிந்து. இனவாத நோக்குடன் ஆளும் கட்சி எம்.பி.கள்தான் வேண்டுமென்றே சமூகமளிக்காமல் விட்டனர். அதுதான் வாக்கெடுப்பில் தோல்வி என்றும் கூறலாம்தானே? ஆனால் உண்மை அதுவல்ல: அவர்களது அலட்சியமும், இவர்களது தருணமறிந்த நடவடிக்கையும்தான் காரணம்.

☛ ✍ ✌

**★ கா.பொ.த (சா.த) வினாத்தாள்கள் வெளியானது உண்மையா?**

சி. சித்ரா, தெகிவளை.

உண்மையில்லை என்றுதான் தெரிகிறது! எனினும் இதுபற்றி போதிய தரவுகள் இல்லாமையால் உறுதியாக பதிலளிக்க முடியவில்லை.

☛ ✍ ✌

**★ தென்னாபிரிக்க தூதுக்குழுவின் விஜயம் பற்றி உமது அபிப்பிராயம் என்னவோ?**

கா. சிறீகிருஷ்ணன், மட்டக்களப்பு.

அழைத்தது அரசுதானாமே! பொல்லைக் கொடுத்து அடி வாங்கிய கதைதான்!

☛ ✍ ✌

**★ சிந்தியா! ஒட்டுசுட்டானில் மேற்கொள்ளப்பட்ட ரிவிபலவின் நோக்கம்?**

பி. குமாரதாஸ், வவுனியா.

'விழுந்தும் மீசையில் மண்படவில்லை' என்பார்களே- அதுதான்!

☛ ✍ ✌

**★ பாரதிய ஜனதா அரசு கலையுமா? தற்காலிக அரசு அமைந்தால் சோனியா பிரதமராவாரா?**

எம். ஜெஸ்மின், கண்டி.

தற்போதைக்கு கலையாது! சோனியா தற்காலிக பிரதமராக விரும்பமாட்டார். பாரதிய ஜனதா ஆட்சி நீடித்தால் மேலும் அதன் புகழ் தரைமட்டமாகும். ஆகவே விட்டுப் பிடிப்பது நல்லது என்பதுதான் அவரது வியூகம்! தற்காலிக அரசு அமைந்தால் கூட வெளியே இருந்துதான் ஆதரிப்பார். தனி ஆட்சி என்ற உறுமீனுக்காக வாடி இருக்கும் கொக்குத்தான் காங்கிரசும் சோனியாவும்.

☛ ✍ ✌



சோனாலி

**★ சிந்தியா! வவுனியாவில் பல்கலைக் கழக மாணவன் கொலைக்கு யார் காரணம்?**

இ. தேவபாலன், வவுனியா.

படையினர் காரணமல்ல!

☛ ✍ ✌

**★ பலவீனம் இல்லாத மனிதர்களே கிடையாதா?**

க. திலகநாதன், ஜெர்மனி.

சமீபத்தில் படித்த ஜோக்:

புகழ்பெற்ற இங்கிலாந்து எழுத்தாளர் நடிகர் நோயல் கவர்ட் ஒரு ஜாலியான ஆசாமி.

அவர் ஒரு நாள் தன்னுடைய நண்பரிடம், "இந்த ஊரிலுள்ள பெரிய மனிதர்களையெல்லாம் துரத்தியடிக்கிறேன்!" என்று சவால் விட்டார்.

"உன்னால் முடியாது!" என்றார் நண்பர்.

நோயல் கவர்ட் அந்த ஊரில் உள்ள பெரிய மனிதர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்.

"உங்களுடைய இரகசியங்கள், அந்தரங்க லீலைகள் எல்லாம் எனக்குத் தெரிந்து விட்டது. உடனே நீங்கள் ஊரைவிட்டு ஓடிப்போக வேண்டும். ஒரு வாரம் சென்ற பின்னர்தான் திரும்பி வரவேண்டும். மறுத்தால் சகல இரகசியங்களையும் அம்பலப்படுத்தி விடுவேன்!" என்று எழுதினார்.

அடுத்த நாள் என்ன நடந்தது தெரியுமா?

பெரிய மனிதர்கள் எல்லாம் ஊரைவிட்டு ஓடி விட்டார்கள்.

☛ ✍ ✌

**★ சினிமாவில் நடிகையாகத் தேவையானது என்ன?**

இ. பிரகாஷ், மன்னார்.

கொஞ்சம் அழகு! கொஞ்சம் பழகு! போதும் என்கிறார்களாமே தற்போதைய இயக்குநர்கள் பலர். ●



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 40

"ஆண்டவர் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்! எனக்குப்பின் இந்த அரியாசனத்தில் அமர்ந்து இஸ்ரயேல் மக்களை வழிநடத்த வேண்டியவன் சாலமோன்தான்!" தனது மனைவியருள் ஒருவரான பத்சேபாவிடம் இவ்வாறு மன்னர் தாவீது வாக்களித்திருந்தார்.

அகித்து என்பவளுக்கும் மன்னர் தாவீதுக்கும் பிறந்த அதோனியா, மன்னர் தாவீதுக்குத் தெரியாமல், அவருக்குப் பின் தானே அரசனாக வேண்டும் என்ற எண்ணத்தில் செயற்பட்டான்.

அதோனியா என்ரோகேல் என்ற இடத்துக்கு அருகேயுள்ள சோகலேத்து மலைமீது பலிபீடம் அமைத்து இறைபலிகளைச் செய்து முடித்தான். தாவீது மன்னரின் ஏனைய புதல்வர்களையும் அரசின் அதிகாரிகள் சிலரையும் பலியிடும் வைபவத்திற்கு அழைத்திருந்தான். தனது சகோதரர்களுள் ஒருவனும் மன்னரின் பேரன்புக்குப் பாத்திரமானவருமான சாலமோனை இவ்வைபவத்துக்கு அழைக்கவில்லை.

தாவீது மன்னருக்குத் தெரியாமல் அதோனியா ஆட்சிபீடமேறுவதற்கு சூழ்ச்சி செய்துள்ளான் என்பதை இறைவாக்கினரான நாத்தான் அறிந்துகொண்டார். சாலமோனையே தனக்குப் பின் அரியணையில் அமர்த்துவதற்கு மன்னர் எண்ணங்கொண்டிருந்தார் என்பதும் நாத்தானுக்குத் தெரியும். பத்சேபாவுக்கும் அதன்படியே வாக்களித்திருந்தார் என்பதையும் அறிந்திருந்தார். ஆகவே நாத்தான் பத்சேபாவிடம் சென்றார். அதோனியா தன்னை மன்னராகப் பிரகடனப்படுத்திக் கொள்வதற்கான ஆயத்தங்களைச் செய்து வருவதையிட்டு எடுத்துரைத்தார். மன்னரிடம் உடன் சென்று நிலமையை விளக்குமாறு பத்சேபாவிடம் கூறினார். பத்சேபாவைத் தொடர்ந்து தானும் மன்னரிடம் சென்றார்.

# நீதி தவறா மன்னன்

## சாலமோன்



**இராஜகுமாரன்**

### வாக்குறுதி

தாவீது மன்னர் படுக்கையிலேயே கிடந்தார். பத்சேபா அவரை அணுகி உரிய மரியாதைகளைச் செய்தார். பத்சேபாவைத் தன் அருகில் அழைத்து, வந்த காரணம் என்னவென்று வினவினார். நாத்தான் தன்னிடம் கூறியவற்றையெல்லாம் மன்னரிடம் தெரிவித்ததுடன், தன் மகன் சாலமோனை இஸ்ரயேலரின் அரசனாக்குவதாகத் தன்னிடம் கொடுத்த வாக்குறுதி பற்றியும் நினைவூட்டினார்.

தனது மகனான அதோனியா தன்னுடைய விருப்பத்துக்கு மாறாக அரியணை ஏறத் திட்டமிடுவதை அறிந்து மிகவும் மனம் வருந்தினார். அதோனியா மீது கோபமும் ஏற்பட்டது. இதே தருணத்தில் நாத்தானும் மன்னரிடம் வந்து சேர்ந்தார். இருவரிடமும், தான் பத்சேபாவுக்குக் கொடுத்த வாக்கை நிச்சயம் காப்பாற்றியே தீருவதாக உறுதியாகக் கூறினார்.

குரு சாதோக் என்பவரையும் தன்னிடம் மன்னர் அழைத்தார். இறைவாக்கினர் நாத்தானுடனும் அரச அலுவலர்களுடனும் சென்று சாலமோனை அரசருடைய கோவேறு கழுதையில் ஏற்றி ஊர்வலமாக கீகோனுக்கு அழைத்துச் செல்லுமாறு மன்னர் பணித்தார். அங்கேயே சாலமோனை யூதாவினதும் இஸ்ரயேலினதும் அரசராகத் திருப்பொழிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

மன்னர் தாவீதுக்கு விசுவாசமான அலுவலர்கள் அனைவரும் பின்தொடர, சாலமோன் கோவேறு கழுதைமீது அமர்ந்து கீகோனை அடைந்தார். அங்கு சாலமோன் நாத்தானாலும் குரு சாதோக்காலும் திருப்பொழிவு செய்யப்பட்டார். கூடியிருந்த அனைவரும் பெருங்குரலெழுப்பி, "சாலமோன் மன்னர் வாழ்க!" என்று வாழ்த்தினர். தாரைகள் ஊதப்பட்டன. எக்காளங்களும் ஒலித்தன. இத்தனை ஒலிகளும் ஒரே சமயத்தில் எழுந்து வான் முட்டி எதிரொலித்தன.

இதேவேளையில்தான் மற்றொரு புறத்தில் அதோனியா, பலிகளை நிறைவேற்றி, அழைக்கப்பட்டவர்களுக்கு விருந்து வைத்துக் களித்துக் கொண்டிருந்தான். சாலமோனை வாழ்த்திய ஒலி எழுந்து பரவியதும்அதோனியாவுடன் இருந்தவர்களுக்கு எதுவுமே விளங்கவில்லை. மற்றுமொரு குருவான அபியத்தாரின் மகன் யோனத்தான் அங்கு வந்தான். சாலமோன் மன்னராகத் திருப்பொழிவு செய்யப்பட்ட தகவலை அதோனியாவுடன் இருந்தவர்களுக்குச் சொன்னான். மன்னர் தாவீதின் மிக நெருக்கமான அதிகாரிகள் பலரும், சாலமோன் திருப்பொழிவு செய்யப்பட்ட வைபவத்தில் கலந்து கொண்டதையும் விவரித்தான்.

### மன்னிப்பு

இத்தகவலை அறிந்த பலரும் அதோனியாவை விட்டு வெவ்வேறு வழிகளில் சிதறி ஓடினர். அதோனியா தனித்து நின்றான். சாலமோன் தன்னை உயிருடன் வைத்திருக்க மாட்டார் என்று அச்சங்கொள்ளலானார். ஆனால் மன்னராகி மகுடம் சூட்டி அரியணையில் அமர்ந்த சாலமோன், தன் சகோதரனாகிய அதோனியாவை மன்னித்து அவருடைய இல்லத்துக்கு அனுப்பிவைத்தார்.

தான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டதற்காக மன்னர் தாவீது மகிழ்ச்சியடைந்தார். இறைவனைத் துதித்து நன்றி தெரிவித்துக்கொண்டார். அவருடைய வாழ்நாட்கள் முடிவடையும் காலமும் நெருங்கியது. உரிய வேளை வந்ததும் தாவீது தனது இறுதி மூச்சை விட்டார். இஸ்ரயேல் மக்கள் அனைவரும் துக்கம் அனுஷ்டித்தனர். தாவீது மன்னர் உருவாக்கிய தாவீது நகரிலேயே தன் தந்தையின் உடலை முறைப்படி அடக்கம் செய்தார் சாலமோன்.

சாலமோன் இஸ்ரயேலரின் அரியணை ஏறியதும் எகிப்து நாட்டுடன் நட்புறவு ஏற்பட்டது. எகிப்தின் பார்வோன் தன் மகளை சாலமோன் மன்னருக்கு மணம் முடித்து வைத்தார். அதுவரை ஆண்டவருக்கான ஓர் ஆலயம் எழுப்பப்படவில்லை. இதனால் பலி பூசைகள் எல்லாம் வெளியிலேயே நடைபெற்று வந்தன. அரசரும் வெளிப்புறங்களிலிருந்த தொழுகை மேடுகளிலிலேயே பலியிட்டு பிரார்த்தனைகளை நடத்திவந்தார்.

இபயோன் சென்று ஒருநாள் அரசர், பலியிட்டு ஆராதனைகளை முடித்துவிட்டு அன்றிரவு அங்கேயே தங்கிவிட்டார். அப்போது மன்னர் சாலமோனின் கனவில் ஆண்டவர் தோன்றினார்.

"சாலமோன்...! உன் தந்தை வழியில் நீ நடந்து வருவது எனக்கு மகிழ்வூட்டுகிறது. உனக்கு என்ன வேண்டுமோ கேள்! வேண்டிய வரத்தை உனக்குத் தருவேன்!" என்றார்.

ஆண்டவருக்கு நன்றி கூறிய சாலமோன் இவ்வாறு வேண்டினார்:

"இஸ்ரயேல் மக்கள் சமுதாயம் இன்று பல்கிப் பெருகி கணக்கிட முடியாதளவு வளர்ந்து விட்டது. இத்தனை பேருக்கும் நீதி கிடைக்குமாறு ஆட்சிபுரிவதானால், அடியேனுக்கு அத்தனை ஆற்றல் கிடையாது. நீதி தவறாது நான் ஆட்சி புரிய எனக்கு நல்ல ஞானத்தை அருள வேண்டுகிறேன்!"

### ஆண்டவர் கொடுத்த வரம்

சாலமோன் சுயநல நோக்கில் எதனையும் விரும்பிக்கேட்காமல், மக்களுக்குப் பணிபுரியும் தகைமையையே கோரியது ஆண்டவருக்குப் பெருமகிழ்ச்சியையே அளித்தது. அவ்வாறே ஆண்டவர் சாலமோனுக்கு வரம் கொடுத்தார். அத்துடன் 'உலகில் எக்காலத்திலும் ஈடோ இணையோ இல்லாத ஓர் அரசர் சாலமோன்!' என்று போற்றிப்புகழும் வண்ணம் நீடித்த ஆயுளையும் தருவதாக இறைவன் வரம் அருளினார்.

ஆண்டவரிடம் ஞானத்தையே வரமாகப் பெற்றுக்கொண்ட மன்னர் சாலமோன், தன்னிடம் வந்து சேர்ந்த வழக்கொன்றில் வழங்கிய தீர்ப்பு இன்றும் மக்கள் மத்தியில் பிரசித்தம் பெற்றிருக்கிறது.

மன்னர் சாலமோனின் அரசவைக்கு இரு பெண்கள் வழக்கோடு வந்திருந்தனர். அவர்களில் ஒருத்தியின் கைகளில் ஓர் அழகான குழந்தை இருந்தது. விசாரித்ததில் அந்தக் குழந்தைக்கு இருவரும் உரிமைகோரி வாதிட்டுக் கொண்டிருந்தது மன்னருக்குத் தெரிய வந்தது.

இரு பெண்களும் ஒரே வீட்டில் வசித்து வந்தனர். இருவருக்கும் ஒரே காலத்தில் ஒவ்வொரு குழந்தை பிறந்தது. ஒருநாள் இரு பிள்ளைகளையும் தம்மருகே கிடத்திவிட்டு இரு தாய்மாரும் தூங்கிவிட்டனர். ஒருத்தி தூக்கக் கலக்கத்தில் தன் குழந்தை மீது புரண்டாள். இதனால் அக் குழந்தை மூச்சுத்திணறி இறந்துவிட்டது. குழந்தை இறந்ததும், எவருக்கும் தெரியாமல், இறந்த தன் குழந்தையை அடுத்த பெண் அருகில் கிடத்திவிட்டு, அவளுடைய குழந்தையை எடுத்து தன்னருகில் வைத்துக்கொண்டாள்.

பொழுது விடிந்ததும் தன் அருகில் குழந்தை இறந்து கிடந்ததைக்கண்ட அப்பெண் துடித்தாள். சிறிது நேரத்தில் உண்மை தெரிந்துவிட்டது. மற்றவளோ உயிருடன் இருக்கும் குழந்தைதான் தன்னுடையது என்று அடம்பிடித்தாள்.

உயிருடனுள்ள குழந்தைக்கு உண்மையான தாய் யார் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டியபொறுப்பு மன்னர் சாலமோனிடம் விடப்பட்டிருந்தது. இரு தாய்மார்களும் விடாப்பிடியாக- குழந்தை தன்னுடையதுதான் என்று வாதிட்டனர்.

மன்னர் குழந்தையை நிலத்தில் கிடத்துமாறு பணித்தார். அவ்வாறே குழந்தை கிடத்தப்பட்டதும் தனது அமைச்சரை அழைத்து, அக் குழந்தையை இரு கூறாக வெட்டி இருவருக்கும் ஒவ்வொரு துண்டை வழங்குமாறு கட்டளையிட்டார். அமைச்சரும்வாளை உருவிக் கொண்டு குழந்தையை நெருங்கினார்.

உருவிய வாளுடன் வந்த அமைச்சரின் காலடியில் அப்பெண்களில் ஒருத்தி, பலத்த சப்தத்துடன் அழுதவண்ணம் போய்விழுந்தாள். "ஐயா! தயவுசெய்து அக் குழந்தையை வெட்டி விடாதீர்கள்! அக் குழந்தை அவளிடமே உயிரோடு இருக்கட்டும். எனக்கு அக்குழந்தை வேண்டாம்!" இவ்வாறு அப் பெண் ஓலமிட்டதும் அரசர் அமைச்சருக்குச் சைகை செய்து, குழந்தையை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

குழந்தையைக் கொல்ல வேண்டாம் என்று அழுத பெண்ணிடம் அக்குழந்தையைக் கொடுக்குமாறு பணித்த மன்னர், குழந்தையின் உண்மையான தாய் அப்பெண்ணேதான் என்று தீர்ப்பளித்தார். பொய் கூறியமைக்காக அடுத்த பெண்ணுக்குத் தண்டனையும் வழங்கினார்.

சாலமோன் மன்னரின் ஆட்சிக்காலத்தில் இத்தகைய பல அரிய சம்பவங்கள் நிகழ்ந்தமையினால் அவருடைய பெயரும் புகழும் உலகம் முழுவதும் பரவலாயிற்று.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 38 விடை** மேவிபோசேத்து.

**பரிசு பெறுவோர்:**

1. செல்வம் சுதர்சினி, திருமலை வீதி, மாங்கேணி, வாகரை.
2. செல்வன் எஸ். கவீஸ் செல்வகுமார்லால், ஸ்ரீபாத கல்வி கல்லூரி, பத்தனை.
3. ஜே.எஸ். தேவராஜா, புத்தளம் வீதி, குருநாகல்.
4. பிரிசில்லா தேவதாஸ், கரவக்கெட்டியாவத்தை, பலாங்கொடை.
5. வி. மேரி ஷமேலி, இஸ்மாயில் புரம், வட்டக்கண்டல், புத்தளம்.

**திருமறை 40** வினா:- தந்தைக்குத் தெரியாமல் ஆட்சிபீடமேற சூழ்ச்சி செய்தவன் யார்?

டிச. 26க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 40— தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

## பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர் | : மனித உரிமைகள் |
| தொழில் | : மறந்து போய்விட்டது. |
| உபதொழில் | : அடிக்கடி காணாமல் போவது! |
| நண்பர்கள் | : அரசுகள் அல்ல. |
| சாதனை | : ஆண்டுக்கு ஒருமுறையாவது நினைவு கூரப்படுவது! |
| சோதனை | : ஆண்டில் ஒருநாள் தவிர ஏனைய நாட்களில் மறக்கப்படுவது! |
| நம்புவது | : விசாரணைக் கமிஷன்களை அல்ல! |
| வெறுப்பது | : மதிக்காதவர்களின் உதடுகளால் மட்டும் புகழப்படுவதை! |
| இலட்சியம் | : தப்பிப் பிழைப்பது! |
| நீண்டகால இலட்சியம் | : தப்பானவர்களை 'உதைப்பது! |

# வணக்கம் கலைஞர்

**காபூக:** வணக்கம்! கலைஞர் அவர்களே! பாரதிய ஜனதா கட்சி சட்டமன்றத் தேர்தல்களில் தோல்வி கண்டுவிட்டதே?

**கலை:** வெற்றியையும், தோல்வியையும் தோளில் போட்டிருக்கும் துண்டாக, கருதுவோமேதவிர, காலடியில் வெடிக்கும் குண்டாக கருதமாட்டோம். அந்தப் பக்குவம் என் நீண்டகால நண்பரான வாஜ்பேயிக்கும் இருக்கும் என்று கருதுகிறேன்.



**காபூக:** தோல்விக்கு என்ன காரணம் என்று கருதுகிறீர்கள்?

**கலை:** தந்தை பெரியார் அவர்கள் அடிக்கடி 'வெங்காயம்' என்று பேசுவார்கள். திட்டித் தீர்க்கும் போதும், தட்டிக் கொடுக்கும்போதும் வெங்காயம் என்று விளிப்பார்கள்! வெங்காயம் என்று பேசுவதா என்று அன்று முகம் சுளித்தவர்களும், இன்று வெங்காயம், வெங்காயம் என்று பேசுகிறார்கள். அந்தளவுக்கு வெங்காயம் பெரும் பாத்திரம் வகிக்கிறது. பாத்திரத்திலே வெட்டிப் போடப்படுகின்ற வெங்காயம், தேர்தலில் ஒரு பாத்திரமாகவே மாறி விட்டது. அதை நினைக்கும்போது என் கண்கள் குளமாகின்றன. கண்ணீர் வழிந்தோடுகிறது!

**காபூக:** வெங்காயத்தை உரிக்கும்போதுதான் கண்ணீர்வரும் நினைக்கும் போதே உங்களுக்கு கண்ணீர் வருகிறதே. நீங்கள் தான் கலைஞர்!

**கலை:** வெங்காயத்தால் ஏற்பட்ட பெரும் காயத்தில் இருந்து பாரதிய ஜனதா அரசு தப்பிப்பிழைக்க வேண்டுமானால், மாநில அரசுகளை கலைப்பது பற்றிய சிந்தனைகளை மூட்டைகட்டி வைத்துவிட்டு, நல்லாட்சி என்ற புது ஏட்டைத் திறக்க வேண்டும்!

**காபூக:** செல்வி ஜெயலலிதா பாரதிய ஜனதா அரசுடன் மல்லுக்கு நிற்கிறாரே?

**கலை:** ஜெயலலிதா என்கின்ற அந்த அம்மையார் பய லலிதா ஆகிவிட்டார். வழக்குகள் அவரை வளைக்கின்றன!

**காபூக:** நடிகை ஜெயலலிதா அரசியல்வாதி ஜெயலலிதா. இருவரில் தங்களை கவர்ந்தவர் யார்?

**கலை:** எனக்கு எப்போதுமே அவர் நடிகை ஜெயலலிதாதான்! என்றுமே அவர் ஒரு சிறந்த நடிகைதான்!

**காபூக:** பாரதிய ஜனதாவை ஆதரிப்பீர்களா?

**கலை:** அவர்கள் தீண்டத்தகாதவர்களும் அல்ல, நாங்கள் தீண்டாமை பார்ப்பவர்களும் அல்ல!

**காபூக:** மதவாதக் கட்சியுடன் தி.மு.க. எப்படி கூட்டுச் சேரலாம்?

**கலை:** மதவாதத்தை கண்டித்தபடி அவர்களது நியாயமான வாதங்களுக்கு ஆதரவளிப்போம்!

**காபூக:** மசூதியை இடித்த கட்சியல்லவா?

**கலை:** கட்சியே சென்று இடிக்கவில்லையே! கட்சியில் உள்ள சிலர் சென்றுதானே இடித்தார்கள்! நாங்கள் சிலரோடு அல்ல, கட்சியோடுதான் கைகுலுக்குவோம்!

**காபூக:** சோனியா காந்தி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**கலை:** எங்கள் எதிரியாக நினைக்கவில்லை! இனிய நண்பர் ராஜீவ் காந்தியின் பாரியார் பாரிய வளர்ச்சி காண்பதை கண்டு உவகை கொள்ளும் முதல் ஆள் நானாகத்தான் இருப்பேன்!

**காபூக:** சோனியாவே வருக, சுகமான ஆட்சி தருக! என்று கூறுவீர்களா?

(கலைஞர் முறைக்கிறார். கா.பூ.கந்தசாமி நழுவுகிறார்)

## புதிர் பொன்ராசா



அந்த ஆறெழுத்து தமிழ் அரசியல்வாதிக்கும், பதினொரு எழுத்து அமைச்சருக்கும் இடையே பயங்கரமான ஒட்டுதலாம். இருவரும் இணைந்துதான் சர்வதேச மட்டத்தில் குழல் ஊதுகிறார்களாம். சமீபத்தில் முக்கியமான வெளிநாட்டு இராஜதந்திரி ஒருவரை ஆறெழுத்து அரசியல்வாதி சந்தித்து ரெண்டு எழுத்து ஸ்தாபனத்தை கிழிகிழியென்று கிழித்துப்போட்டாராம். அதன் பின்னர் அதே ராஜதந்திரியை சந்தித்த ஏழு எழுத்து தமிழ் அரசியல்வாதியிடம் அந்த ராஜதந்திரி அதனைக் கூறினாராம். அதுபற்றிய அபிப்பிராயம் கேட்டாராம். யார் இவர்கள்? கண்டுபிடியுங்கோ? இந்தப் பொன்ராசா போட்ட புதிரைக் கண்டுபிடியுங்கோ. மறுவாரம் இன்னொரு பயங்கரப் புதிருடன் சந்திக்கிறேன்.




**காதிலை பூ கந்தசாமி**



படிப்பகம்

Read as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)

www.padippakam.com



பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331

# ஆளில்லாத ஹெலி

ஆளில்லாத ஹெலிகளை வேவுப்பணிகளுக்குப் பயன்படுத்துவதில்லை. சுலபமாக சுட்டுவீழ்த்தி விடலாம்.

தருவது ரி - தாசன்



அமெரிக்காவில் பல்வேறு மாநிலங்கள் ஊடாகவும் மின்சக்தி கொண்டுசெல்லும் உயர் அழுத்த மின் கம்பிகள் இணைக்கப்பட்டுள்ளன. பரந்த பிரதேசங்களை ஊடறுத்துச் செல்லும் இக் கம்பித் தொடர்களை கண்காணிப்பது மிகவும் கடினம்.

இப் பணிக்காகவே படத்தில் காணப்படும் ஹெலிக்கொப்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இங்கு காணப்படும் ஹெலிக்கொப்டரில் மனிதர்கள் எவரும் இருக்கமாட்டார்கள். தரையிலுள்ள கட்டளைக் கூடத்திலிருந்த வண்ணம், இதனை இயக்கலாம். ஹெலியில் வீடியோ கமரா பொருத்தப்பட்டிருக்கும். மின் கம்பிகளில் ஏதாவது கோளாறுகள் இருந்தால் கட்டளைக் கூடத்திலுள்ள திரையில் ஹெலியிலுள்ள கமரா எடுக்கும் படங்கள் காட்டிக் கொடுத்துவிடும்.

ஜப்பான் நாட்டில் பயிர்களுக்கு கிருமிநாசினிகளைத் தெளிப்பதற்கும் அறுவடை செய்வதற்கும் ஆளில்லா ஹெலிகளைப் பயன்படுத்துவதற்கான ஆய்வுகள் நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது.



SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657

நீருக்கடியில் நீந்தி ஆராய்ச்சி செய்வதற்கு தற்போது புதுக் கருவிகளும், புதிய உத்திகளும் பாவனைக்கு வந்துவிட்டன.

ஆழ்கடலுக்குள் படப்பிடிப்பு நடத்தலாம். நீந்திக்கொண்டே 'தையத் தையா' பாடலாம். நீருக்கடியிலேயே காதல் செய்யலாம். சமீபத்தில் நீருக்கடியில் கல்யாணம் கூட நடந்திருக்கிறது. அத்தகவல் முரசிலும் பிரசுரமானது.

இங்கே படத்தில் இருப்பதும் ஒரு புதிய கருவிதான்.

ஆழ்கடலின் அடியில் காற்றமுக்கம் எத்தகையதாக இருக்கும் என்பதைக் கண்டறிய ஒரு புதிய உத்தியைக் கையாளுகின்றனர் விஞ்ஞானிகள்.

ஸ்கூட்டர் போன்ற வாகனங்களில் ஓடும்போது தலைக் கவசத்திலுள்ள சாதனத்தை சுவாசத்திற்குப் பயன்படுத்துகின்றனர்.

வெளிவிடும் சுவாசம் தலைக்கவசத்தில் சேகரிக்கப்படுகிறது. உள்வாங்கும் சுவாசக்காற்றை (பிராணவாயு) இதே தலைக்கவசத்திலுள்ள மற்றுமொரு சாதனம் வழங்குகிறது.

# உள்ளோட்டம்



மேலதிகமான காற்றை அவ்வண்டியில் முன்தாகவே வேண்டியளவு சேகரித்து வைக்கப்படும்.

ஆராய்ச்சியிலீடுபடும் ஏனையோருடன் உரையாடவும் தலைக்கவசத்திலேயே கருவிகள் உள்ளன.

நீச்சலும் ஒரு கலைதான். அதிலும் நிருக்கடியில் நீந்துவது என்பது திரில்லான அனுபவம்.

நீருக்கடியிலும் அற்புதமான ஒரு உலகம் இருக்கிறது. ஆபத்தும் உண்டு. அழகும் உண்டு.

# சுத்திகரிப்பு



பவளப்பாறைகளை ஒட்டி உயிர் வாழும் ஒரு வகை மீன்கள். தங்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ள கூலிக்காரர்களை அமர்த்தியுள்ளார்கள். என்ன ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

தங்கள் உடலையும் வாயையும் சுத்தம் செய்ய வேண்டுமானால் பவளப் பாறையின் ஒரு குறிப்பிட்ட பகுதியை அந்த மீன்கள் நாடிச் செல்கின்றன. அங்கே நீரில் மிதக்கும் ஒருவகை புழுக்கள் சுத்திகரிப்பு வேலையை கனகச்சிதமாக முடித்து விடுகின்றன.

மீனகள் தங்கள் வாயைத் திறந்ததும் வாயினுள் புகும் புழுக்கள் மீனின் பல்லிடைகளுக்குள் புகுந்துள்ள துகள்களைத் தோண்டி எடுக்கின்றன. அவை புழுக்களுக்கு உணவாகின்றன. மீன்களின் உடலிலுள்ள வேறு அழுக்களையும் புழுக்கள் தங்கள் உணவாக்கி விடுகின்றன.

பற் பசையும், தூரிகையும் இல்லாமலேயே ஓசியிலேயே இந்த மீன்கள் காரியத்தை முடித்துக் கொள்கின்றன. பாருங்கள் மீனின் வாய்க்குள் ஒரு புழு சுறுசுறுப்பாக சுத்திகரிப்பு செய்து கொண்டிருக்கிறது.

# மர அழகு



நம் நாட்டில் 'மரம் நடு' என்றும் கூறிக்கொண்டு பெரு மரங்களை போருக்காக வெட்டிச் சாய்க்கிறார்கள். வன்னியில் அழகான பலமரங்கள் சாய்க்கப்படுகின்றன. சமீபத்தில் வவுனியா–மன்னார் சாலைகளில் பெரு மரங்கள் வெட்டப்பட்டுள்ளன.

உலகிலேயே மிக நீண்ட காலம் வரை வாழும் மரம் இதுவாகும். பௌபாப் மரம் என்பது இதன்பெயர். சராசரி 2000 ஆண்டுகள் வரை இம்மரங்கள் பட்டுப் போகாமல் இருக்கும்.

பௌபாப் மரங்கள் மழை காலத்தில் வேண்டிய அளவு நீரை உள்வாங்கி உடலை உப்ப வைத்துக் கொள்ளும். மழையில்லாத காலங்களில் சேகரித்த நீரை உறிஞ்சி வாழும் தன்மை உடையன.

சில பௌபாப் மரங்கள் ரோம ராச்சியம் சிறப்புற்றிருந்த காலத்திலிருந்து இன்று வரை பட்டுப்போகாமல் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இம் மரங்களின் அழகே கண்களுக்கு இதமாக இருக்கிறதல்லவா? இவற்றை மனித உயிரைவிட மேலாக மதித்து பராமரித்து வருகிறார்கள்.

# 1வது பிறந்தநாள் வாழ்த்து

ரொமினா இலங்கேஸ்வரன்

29.11.1998



இலங்கேஸ்வரன்-சுஜீதா தம்பதியினரின் செல்வப் புதல்வி ரொமினா 29.11.1998 அன்று இலண்டன் பாமஸ்கிறீனில் உள்ள அவரது இல்லத்தில் தனது 1வது பிறந்த தினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அம்மா, அப்பா, நல்லூரிலுள்ள பாட்டன், பாட்டி, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, லதா அத்தை, சுரேஷ் சித்தப்பா, தனா சித்தப்பா, ரஜீனா பெரியம்மா, பிரசன்னா மாமா, பிரசாந்த் மாமா, ஜமேலா சித்தி, ஜெனிமச்சி, கனுமச்சி, இத்தாலியிலுள்ள ராசாப் பெரியப்பா, மல்லிகா அன்ரா, வானுப் பிரியா அக்கா, வானுயன் தம்பி, ரவிசித்தப்பா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் இறைவன் ஆசியுடன் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ்கவென அன்புடன் வாழ்த்துகின்றனர்.

தகவல் செ. இலங்கேஸ்வரன் (தந்தை) இலண்டன்.

# அழிப்பு

இரண்டாவது உலகப்போரில் பாரிய நாசம் விளைவித்தது அமெரிக்காவின் அதிபயங்கரமான அணுகுண்டு. ஒரே நொடியில் இலட்சணக்கான மனிதர்களையும் உயிரினங்களையும் கொன்று குவித்தது. இலட்சக்கணக்கான பெரியதும் சிறியதுமான கட்டடங்களை இடித்து மண்மேடாக்கியது.

ஜப்பான் நாட்டின் ஹிரோஷிமா மற்றும் நாகசாக்கி ஆகிய இரு நகரிங்களும் அணுகுண்டால் அழிந்தன.

இதனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக 1945 ஜூலை 16ம் திகதி நியூ மெக்ஸிக்கோவிலுள்ள அலமோகோர்டோ என்ற பாலைவனத்தில் பரீட்சார்த்தமாக ஒரு குண்டை வெடிக்க வைத்துப் பார்த்தனர். இதன் பின்னரே ஜப்பானிலுள்ள ஹிரோஷிமாவில் 'லிட்டில்போய்' (குட்டிப்பையன்) என்ற பெயர் சூட்டப்பட்ட குண்டைப் போட்டனர். நாகசாகி நகரில் போடப்பட்ட குண்டின்பெயர் 'ஃபாற்மான்' (கொழுத்த மனிதன்).





இங்கு இள மஞ்சள் வர்ணத்தில் காணப்படுவதுதான் ஹிரோஷிமாவில் போடப்பட்ட குண்டு.

அணுகுண்டைப் பார்க்கிலும் ஆயிரம் மடங்கு அழிப்பு சக்தி கொண்டது 'ஹைதரசன் குண்'டாகும். 1956 மே 21ம் திகதியன்று பிகினி அட்டொல் என்ற இடத்தில் ஹைதரசன் குண்டு பரீட்சித்துப்பாக்கப்பட்டபோது எத்தனையோ கிலோ மீட்டர் தொலைவிலிருந்து எடுக்கப்பட்ட படம் இங்கே காணப்படுகிறது. குண்டு வெடித்த மையத்திலிருந்து பெரும்பரப்பளவில் நெருப்புக் கோளம் மேலெழுவதைப் பார்க்கலாம்.

இதனைவிடப் படு பயங்கரமானது நியூத்திரன் குண்டு. அதுவும் அமெரிக்காவிடம் இருக்கிறது. இத்தனை உலக அழிப்பு குண்டுகளையும் கையில் வைத்துக் கொண்டுதான் 'அணு ஒழிப்பு' போதனை நடத்துகிறது அமெரிக்கா.



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை காலிந்த பிளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் [illegible], நாவலவில் உள்ள சமலை அச்சகத்தில் டிசம்பர் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்